கல்விக்கடல்

ஓர் உயர்தர மாதாந்தப் பத்திரிகை

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை."—திருக்குறள்.

மலர் 1	பிரஜோற்பத்தி௵ தைமீ	இதழ் 3

பொருளடக்கம்

பக்கம்

1. நீரின் அற்புதம்—திரு. கே. ஜி. சேஷ ஐயர், பீ.ஏ., பீ.எல். 79
2. அணியிலக்கணம்—திரு. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, பீ.ஏ., பீ.எல். 83
3. கம்பரும் அரசியலும்—திரு. இ. எஸ். வரதராஜய்யர், பி. ஏ. ... 84
4. வம்பர் மஹாசபை—திரு. ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர், பி.ஏ., பி. எல். 88
5. குழந்தைகளுக்கான புஸ்தகசாலைகள்—திரு. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் 91
6. சிந்தாமணி (நாவல்)—திரு. ஸி. வி. நாராயண அய்யர், எம்.ஏ., எல்.டி. 93
7. நம்நாட்டு நிலையும் அயல்நாட்டு வர்த்தகமும்—திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்கள் 97
8. மிஸ் மோஹன் பி.ஏ., எல்.டி.—திரு. ஸி. வி. நாராயண அய்யர், எம்.ஏ., எல்.டி. 101
9. மாதர் பக்கம்—ஸ்ரீமதி கமலாம்பாள் எழுதியது 104
10. சாரண இயக்கம் 106
11. ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி—திரு. ஆர். வாசுதேவ சர்மா, எம்.ஏ. 108
12. கம்பியில்லாத தந்தியின் விதிகள்—திரு. கெ. ஜி. கிருஷ்ணன், பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்.) ... 111
13. ஆசிரியர் பக்கம்—திரு. எஸ். ஜெகந்நாதன் 113

எம். வெங்கட்டராம சாஸ்திரி, எம்.ஏ., எல்.டி., பத்திராதிபர்.

ஈ. எஸ். வரதராஜய்யர், பீ.ஏ.,
பண்டிதர் அரங்கராமானுஜம் பிள்ளை,
கே. எஸ். ஸ்ரீகண்டன், எம். ஏ.
} உப பத்திராதிபர்கள்.

கல்விக் கடல்

சந்தா விபரம்.

வருடம் 1-க்கு தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு	ரூ.	3	8	0
வெளி நாடுகளுக்கு	,,	4	8	0
தனிப் பிரதி	,,	0	5	0

1. சந்தாதாரராய்ச் சேருகிறவர் முழுப்பெயரை எழுதி அனுப்பவேண்டும்.

2. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. பத்திரிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் மூன்றணுவோடு (மணியார்டர் கமிஷன் ரூ. 10-க்கு அணு இரண்டாகையால்) அந்த கமிஷன் இரண்டணு, வி. பி. தபால் சார்ஜ் எல்லாம் சேர்த்து ரூ. 3-14-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் ரூ. 3-10-0 மட்டுமே யாகும். ஆகையால் முன்பணம் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வது நலம்.

இதை கவனிக்கவும்

4. இடம் மாறும் சந்தாதார்கள் அடுத்த இதழ் தங்களுக்கு புது விலாசத்துக்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீசுடன் ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த இதழ் பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொருப்பாளியல்ல.

5. பதில் விரும்பும் சந்தாதார்கள் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

6. நமது பத்திரிகையின் வெளியூர் ஏஜண்டுகள், சந்தாதார்கள், விளம்பரதாரர்கள், விபரம் தெரிவோர்கள் எல்லாம் "கல்விக்கடல்" மானேஜர் விலாசத்திற்கே தந்தி, மணியார்டர்கள், தபால்கள் அனுப்பவேண்டும்.

7. வியாசந்தருவோர், நன்கொடையளிப்போர்கள் யாவரும், ஆசிரியர் "கல்விக் கடல்," திருவல்லிக்கேணி, மதருஸ் என்ற விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

	ஒரு மாதம்			3 மாதம்			6 மாதம்		
முழுப் பக்கத்திற்கு	15	0	0	40	0	0	75	0	0
அரைப் பக்கத்திற்கு	8	0	0	20	0	0	37	0	0
கால் பக்கத்திற்கு	4	0	0	10	0	0	18	0	0

நீண்டகாலம் விளம்பரம் செய்ய விரும்புவோர்கள் நேரே மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும். கவர் பக்கங்களுக்குத் தனி விகிதம். எல்லா விளம்பரதாரருக்கும் வெளச்சர் பிரதி இனமாக அனுப்பப்படும். விளம்பரப்பணம முன்னதாக அனுப்பினுல்தான் விளம்பரம் போடக்கூடும்.

மானேஜர்,
கல்விக்கடல் ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

மதிப்புரைகள்.

MAHAMAHOPADYAYA
V. SWAMINATHAIYAR,
MADRAS.

"THYAGARAJA VILAS,"
Tiruvetiswaranpet,
TRIPLICANE,
20—10—'31.

அறிவைப் பரவச் செய்வதற்குத் தக்க கருவிகளாக உள்ளவை குறிப்பிட்டகாலங்களில் வெளிவரும் பத்திரிகைகள் என்பது ஆன்றோர் கொள்கை, பத்திரிகை நடத்துபவர்கள் கல்விமான்களாக ஏற்பட்டால் அதற்கு மேற்பட்ட அனுகூலம் வேறு இல்லை. சமீபத்தில் "கல்விக்கடல்" என்னும் பெயர்கொண்ட மாதத் தமிழ்ப்பத்திரிகையின் முதல் இதழ் வெளிவந்திருக்கிறது. கல்வித்துறையிலேயே பலகாலம் பொழுது போக்கி நல்ல அனுபவம் பெற்றுள்ள ம-ா-ா-ஸ்ரீ எம். வெங்கடராம சாஸ்திரிகளவர்கள், எம். ஏ. இதன் பதிப்பாசிரியராக இருக்கிறார்கள். இந்த முதல் இதழில் உள்ள விஷயங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கும், தொழிலபிவிருத்திக்காரர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் உபயோகமாகும்படி சிறந்த கல்விமான்களைக் கொண்டு எழுதப்பெற்றுள்ளன. இப்பத்திரிகை தமிழ்நாட்டினருக்கு மிக்க பாானபடுமாதலால் தமிழபிமானிகள் இதனை ஆதரித்து இதன் ஆசிரியருக்கு விசேஷ ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
(Sd.) வே. சாமிநாதையர்.

DEPARTMENT OF INDIAN
HISTORY AND ARCHAEOLOGY.

"LIMBDI GARDENS,"
Peter's Road, Royapetta P.O.,
MADRAS.
Dated, 28—1—'31.

ஐயா, தாங்கள் அன்புடன் அனுப்பிய "கல்விக்கடல்" என்னும் மாதாந்தரப் பத்திரிகையிற் பல பாகங்களை வெகு ஆவலுடன் படித்துப்பார்த்தேன். இப்போது உலாவிவரும் நவீனக் கருத்துகளை நம் தாய் பாஷை வாயிலாகப் பொதுஜனங்களுக்கு வெளியிடவேண்டுமென்ற எண்ணத்துடன் தாங்களும் தங்களுடைய நண்பர்களும் செய்துவரும் முயற்சியானது நம்நாட்டு மேன்மையை விரும்பும் யாவராலும் மிகவும் மெச்சத்தக்கதேயாம். தங்கள் பத்திரிகையின் உயர்ந்த நோக்கங்களையும் தெளிவான எளிய நடையையும் உத்தேசித்து அநேக சந்தாதாரர்கள் சேர்ந்து பத்திரிகையை விருத்திக்குக் கொண்டுவருவார்களென்று நம்புகிறேன்.

அன்பன்,
(Sd.) க. அ. நீலகண்ட சாஸ்திரி,
Professor of Indian History, Madras University.

சுதேசமித்திரன் 10-10-30.

"கல்விக்கடல்."

இதோர் மேலான தமிழ் மாதப்பத்திரிகை. 'தமிழை வளர்ப்பதற்காக பிறபாஷை நூல்களை தமிழில் மொழிபெயர்க்கவும், பல நவீனசாஸ்திரங்களைத் தமிழில் போதிக்கவும் இதில் அரிய சொற்கள் வந்தால் அவைகட்கு பிரதிபதம் அமைக்கவும், சரித்திரம், பூதபௌதிக நூல், ரஸாயன நூல், கூட்டுறவு நூல் இவைகளைப்பற்றி அரிய கட்டுரைகள் எழுதவும் உத்தேசங்கள் உடையதாய் இருக்கிறது. இப்பத்திரிகைக்கு கல்வியில் மேம்பட்ட பட்டங்களைப்பெற்றவர்களே அநேகர் விஷயதானம் செய்திருக்கிறார்கள். இதன் ஆபீஸ் சென்னை, திருவல்லிக்கேணி, கானுபாக் தெருவில், 40-ம் நம்பரில் இருக்கிறது. இதற்கு வருஷ சந்தா ரூ. 3-8-0. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் எம். வெங்கடராம சாஸ்திரி.

THE HINDU, October 18, 1931 writes :—

"KALIVIKKADAL."

This is a new Tamil Monthly edited by Mr. M. Venkatarama Sastri, M.A., L.T., with a view to familiarising the Tamil public with the latest developments in the fields of science, industry, Literature and so on, not only in India but also in all advanced countries and thus helping forward the Renaissance of Tamil culture of which there are unmistakable signs.

The first number for the month of Avani contains informative and well written articles on the "Wonders of water" by Mr. K. G. Seshaiyer, Retired High Court Judge, Trivandrum; "Nature study in Elementary Schools" by Mr. M. S. Sabhesan, "Sugar" by Mr. K. C. Viraraghava Aiyar; "Sekkizhar and Tiruvalluvar" by Mr. C. K. Subramanya Mudaliar, besides a serial, a short story and special sections for Elementary School Teachers, Scouts etc. The journal has set up for itself a high standard both in matter and in manner and it deserves wide support from the Tamil public.

“ இந்தியா ”

அக்டோபர்மீ 9உ 1931.

“ கல்விக்கடல். ”

“ கல்விக்கடல் ” என்னும் மாதப் பத்திரிகையின் பிரதி ஒன்று வரப்பெற்றோம். இது அழகிய படங்களுடன் 40 பக்கங்கள் கொண்டது. இதிலுள்ள கட்டுரைகள் தற்காலத்து தமிழர் அறிவு வளர்ச்சிக் கான முறையில் விளங்குகின்றன. இதன் கட்டுரையாளர்கள் சிறந்த ஆராய்ச்சியாளர்களாகவும் பட்டதாரி களாகவும் தோற்றுகின்றனர். இத்தகைய பத்திரிகை நம் தமிழ்நாட்டிற்கு இன்றியமையாததே. இதன் ஆசிரியர் திரு எம். வெங்கட்டராம சாஸ்திரியார் எம். ஏ. எல். டி. இதன், வருஷ சந்தா ரூ. 3—8—0.

வேண்டுவோர் மானேஜர், “ கல்விக்கடல் ” காரியாலயம், 40, கானுபாக் தெரு, திருவல்லிக்கேணி சென்னை, என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

“ தமிழ் நாடு ”

அக்டோபர்மீ 20உ 1931.

“ கல்விக்கடல். ”

மேற்கண்ட தலைப் பெயருடன் திருவல்லிக்கேணியினின்றும் வெளிவரும் அழகிய மாசிகை யொன்று நமது பார்வைக்கு வரப் பெற்றோம். இதற்கு ஸ்ரீ.எம். வெங்கட்டராம சாஸ்திரியார், எம்.ஏ.,எல்டி. ஆசிரியராயிருப்பதுடன் மற்றும் மூவர் உதவி ஆசிரியர்களாகவு மிருப்பதாய்த் தெரிகிறது. இந்த சஞ்சிகை யின் பெயரையே அடிப்படையாகக் கொண்டு தமிழின் முன்னேற்றங் கருதி பிறபாஷை நூல்களை தமிழில் மொழி பெயர்க்கவும், பலதிறப்பட்ட நவீன சாஸ்திரங்களை தமிழ் மூலமாகவே போதிப்பதற்கனுகூலயாக வும், பிறபாஷையிற் காணப்படும் அரிய சொற்களுக்குத் தமிழ் பிரதி பதங்கள் அமைத்து வெளியிடுவது இந்த சஞ்சிகையின் நோக்கமென ஆசிரியர் கூறியுள்ளார். அக்நோக்கத்தை யொட்டியே நம் கைக்கு கிடைத்துள்ள சஞ்சிகையிலும் பல அறிஞர்களால் எழுதப் பெற்ற பல கட்டுரைகள் நிகழ்வதுடன் மற்றும் தொடர் கதை யொன்றும் வெளிவந்துள்ளது. சஞ்சிகையின் முகப்பில் அழகிய ஆர்ட் பேபரில் சரஸ்வதி யின் படம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதன் வருஷ சந்தா ரூ. 3—8—0.

மானேஜர், “கல்விக்கடல்” ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற, விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம்.

கல்விக்கடல் என்ற தமிழ்ப் பத்திரிகையை அதன் ஆசிரியர் அன்போடும் எனக்கு அனுப்புயுதவி னார். இப்பத்திரிகையின் முதற்றோற்றம் அரிய விஷயங்கள் பல கொண்டு அழகாக விளங்குகின்றது. தமிழ் நாட்டில் அரிய விஷயங்களுடன் வெளிவரும். மாசப் பத்திரிகைகள் மிகச் சிலவே உள்ளன. அவை தாமும் ஆதரிப்பாரின்றித் தத்தளிக்கின்றன. இந்நிலையில், தமிழ் மொழிக்கும் அதன் மக்கட்கும் பேருதவி புரிய விரும்பி ஸ்ரீமான் எம். வெங்கடராம சாஸ்திரிகள், எம். ஏ., எல். டி. ‘ கல்விக்கடலை’’த் தொடங்கி யிருப்பது அவரது பெருந்தமிழபிமானத்தைக் காட்டுகின்றது. இதன் முதற் பகுதியுள் அமைந்துள்ள பொருளடக்கத்தை நோக்குமிடத்து, நம் நாட்டுக் கல்விச் செல்வர்கள் பலரும் இவர்கள் முயற்சியை ஊக்கி யுதவ முன்வந்துள்ளார்கள் என்பது நன்கு விளங்கும். அரிய விஷயங்கள் பல இணிய தமிழ் நடையில் எழுதப்பட்டு படிக்க இன்பந்தருவது இதன் முதற் பகுதி என்பதில் ஐயமில்லை. இம்முறையில் இப்பத்திரிகை நடைபெற்றுவருமாயின் நம் தமிழ்நாட்டுக்கு இஃது அரியக் கல்விச் செல்வத்தை அளிக்கவல்லதாகும். சாஸ்திரியளவர்ாளது அரிய முயற்சியை தமிழறிஞர்களும், செல்வர்களும், பொதுஜனங்களும் ஆதரிப்பார் களா என்றே எதிர்ப்பார்க்கிறேன்.

இங்ஙனம்,

(Sd.) மு. இராகவையங்கார்,

தலைமைப் பண்டிதர்.

2-11-31.

யூனிவர்ஸிடி தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்,

சென்னை.

கல்விக்கடல்

ஓர் உயர்தர மாதாந்தப் பத்திரிகை

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை."—திருக்குறள்.

மலர் 1	பிரஜோற்பத்தி௵ தைமீ	இதழ் 3

நீரின் அற்புதம்

தொடர்ச்சி

(திரு. கே. ஜீ. சேஷய்யர், B.A., B.L.,
ரிடயர்ட்-ஹைகோர்ட் ஜட்ஜ், திருவநந்தபுரம்.)

IV. நீர்.

நாம் இதுவரையில் படித்ததிலிருந்து நீர் தனிப்பொருளா அல்லது இரண்டல்லது மேற்பட்ட தனிப்பொருள்களின் கலப்பா அல்லது இரண்டோ மேற்பட்டனவோ பொருள்களின் சங்கிரணப் பொருளா என்ற கேள்வி தோன்றும். நீர் தனிப்பொருளன்று என்று முன்னரே கூறியுள்ளேன். அது கலப்புப் பொருளுமன்று. அது ஒரு சங்கிரணப் பொருள். அதன் அமைப்பை இப்பொழுது கவனிப்போம்.

நீங்கள் எல்லோரும் மணற் குவியல் பார்த்திருப்பீர்கள். அக்குவியல் மிக நுட்பமான ஆகிருதியுள்ள சிறு மணல் பலவற்றின் திரள் என்பது வெளிப்படை. அத்திரளிலிருக்கும் ஒவ்வொரு மண்ணும் எல்லா விஷயங்களிலும் ஏனைய மணல்களை ஒத்தே யிருக்கும். அது போல, பானம் பண்ண ஓர் பஞ்சபாத்திரத்தில் ஜலம் எடுத்து வைத்தால், அந்த ஜலம் எண்ணற்ற ஜலத்துளிகளின் பெருக்கு என்பதை உணர வேண்டும். "பல துள்ளி பெரு வெள்ளம்" என்ற பழமொழி கேட்டிருப்பீர்கள். பெரு வெள்ளம் மாத்திரமன்று; ஓர் உத்தரணி ஜலமும் கணக்கில்லாத ஜலத்துளிகளின் திரளையாம்! அவ்வாறாயின், நம் கண்ணாற் காணமுடியாத மிகச் சிறு பிரமாணம் பொருந்தின நீர்த்துளி ஒன்று இருக்க வேண்டுமன்றோ? அந்த பரம நுட்பமான துளியைப் பேரணு என்று கூறலாம். இதை ஆங்கிலத்தில் மாலிக்யூல் (Molecule) என்பார்கள். இதன் பொருள் சிறு திரளை. இதை எவ்விதத்திலும் காணமுடியாது. ஊகித்தே யுணரவேண்டும். ஜலம் பிரபஞ்சத்தில் எவ்விடத்தில் காணப்படினும், அதன் தன்மை, குணம் அல்லது இயற்கை எல்லா விடங்களிலும் ஒன்று போலவே விளங்கும். அதனால் அதன் மூல அணுவின்

அமைப்பும் எல்லா விடங்களிலும் ஒன்று போலவே யிருக்கவேண்டும். அமைப்பு வேறு பட்டால், உண்டாகும் பொருள் நீராகாது; நீரின் சுபாவமும் தத்துவமும் அது பெறாது.

நீர் எப்பொருள்களாலமைந்தது? எப்பொருள்கள் எவ்விதத்தில் ஐக்யமுற்றால் நீர் உற்பத்தியாகும்? நீரின் தோற்றம் மிகவும் வியப்பான ஓர் இந்திரஜாலம். கண்ணிற்குப் புலப்படாத இரண்டு வாயுக்கள் ஒன்றோடொன்று ஐக்யமுற்று, அவர் தம் தோற்றமும் குணங்களும் முற்று மிழந்து, மாற்றுப் பொருளான நீராகத் தோன்றுகின்றன. இவ்வாயுக்களில் ஒன்று நாம் முன் படித்த ஆக்ஸிஜன். வேறொன்று நாம் இதுகாறும் படியாததான ஹைட்ரோஜன் (Hydrogen). ஹைட்ரோஜனென்றால் நீரை உண்டுபண்ணும் பொருள் என்றருத்தம். இவ்வாயு ஆக்ஸிஜனோடு சேர்ந்து தண்ணீரை உண்டுபண்ணுவதால், இந்தப் பெயர் பெற்றது. யவன பாஷையில் ஹைட்ரோஸ் என்றால் தண்ணீர்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூலப் பொருள்கள் ஐக்யமுற்று ஓர் சங்கீரணப் பொருளாகுதற்கு இன்ன இன்ன ரீதியில் அவை சேரவேண்டும் என்ற நியமமுண்டு. ஹைட்ரோஜனும் ஆக்ஸிஜனும் அதிக அன்னியோன்னிய முள்ளவையானாலும், வரையின்றி ஒன்றோடொன்று சேர்வனவல்ல, குறித்த நிரையிலன்றி ஒன்றோடொன்று சேர்ந்து சங்கிரணப் பொருளாகா. எல்லாப் பொருள்கட்கும், அப்பொருளின் குணங்களமைந்த பரம அணு இருக்கவேண்டுமென்ற தத்துவம் ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஒரு சங்கீரணப் பொருளின் பரம அணு அல்லது மூல அணுவை பேரணு என்றும். ஓர் மூலப் பொருள் அல்லது பகாப் பொருளின் (element) பரம அணுவை சிற்றணு (ஆங்கிலத்தில் atom ஆட்டம்) என்றும் கூறலாம். எத்துணை ஹைட்ரோஜன் சிற்றணுவும் எத்துணை ஆக்ஸிஜன் சிற்றணுவும் ஒருங்குபடச் சேர்ந்து ஒரு தண்ணீர்ப் பேரணுவாக மாறும்? என்பது நன்கு நிருணயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது தண்ணீர் பேரணு ஒன்றில், இரண்டு ஹைட்ரோஜன் சிற்றணுக்களும் ஓர் ஆக்ஸிஜன் சிற்றணுவும் இருக்கின்றன. இதை நன்றாய் கவனிக்கவேண்டும். தண்ணீர், பேரணுக்களின் பெருக்கு, ஒவ்வொரு தண்ணீர்ப் பேரணுவும் இரண்டு ஹைட்ரோஜன் சிற்றணுக்களும் ஓர் ஆக்ஸிஜன் சிற்றணுவும் பெற்றது. இவ்விரண்டு மூலப்பொருள்களும் கைகளுள்ளனவாக கற்பித்துக் கொள்வோம். ஹைட்ரொஜனுக்கு ஒரு கை மாத்திரமுள்ளதாகவும் ஆக்ஸிஜனுக்கு இரு கைகளுள்ளனவாகவும் நினைத்துக்கொள்ள வேண்டும். இவ்விரு மூலப்பொருள்களும், ஒன்றின் கையை மற்றது பற்றிக்கொண்டு, அச்செய்கையின் பயனாய் ஓர் தண்ணீர்ப் பேரணுவாக விளங்குகின்றன என்று கொண்டோமானால், தண்ணீரின் பேரணுவை பின் குறித்த சித்திர சொரூபத்தால் விளக்கலாம் :—

ஹைட்ரோஜன்—ஆக்ஸிஜன் — ஹைட்ரோஜன். ஹைட்ரொஜன், ஆக்ஸிஜன் என்று விரிவாய் எழுதுவதற்குப் பதிலாக, ரசாயன நூலார் ஒவ்வொன்றையும் அதன் பெயரை ஆங்கிலபாஷையில் எழுதும்பொழுது முதல் எழுத்தாய்த் தோன்றும் எழுத்தால் குறிப்பது வழக்கம். அவ்வழக்கப்படி ஆக்ஸிஜன் (Oxygen) என்பதன் சங்கேதக்குறி O என்றும், ஹைட்ரொஜன் (Hydrogen) என்பதின் சங்கேதக்குறி H என்றும் அமையும். அதனால், தண்ணீர்ப்பேரணுவின் அமைப்பைப் பின்வருமாறு விளக்கலாம் :—

H—O—H

ஆக்ஸிஜனுக்கு இரு கரங்களுள்ளனவாக நாம் கொண்டோமாகையால், அதை நடு நாயகமாக வைத்து, அது தன் ஒவ்வொரு கையால் ஹைட்ரொஜனது ஏக கையைப் பற்றிக் கொள்ள, ஹைட்ரொஜனை இரு புறங்களிலும் நம் சித்திரத்தில் அமைத்தோம். ஓர் பேரணுவின் அமைப்பு எவ்வாற்றானும் நம்மால் காணமுடியாதென்று முன்னர் கூறியிருக்கிறேன். அதனால், மேற்காட்டிய அமைப்பு கேவலம் ஊகமேயன்றி வேறன்று. H-O-H என்றெழுதாமல், அதிலும் சுருக்கமாய் H_2O என்று எழுதி தண்ணீரைக் குறிப்பது இயல்பு. இதன் பொருள், தண்ணீரின் பேரணு ஒவ்வொன்றிலும், இரண்டு ஹைட்ரொஜன் சிற்றணுவும் ஓர் ஆக்ஸிஜன் சிற்றணுவும் உள்ளன என்பது.

தண்ணீர் கனமுள்ள பதார்த்தமாகையால், அதன் பிறப்பிற்கு ஏதுவான ஹைட்ரொஜனும் ஆக்ஸிஜனும் பளுவுள்ள பொருள்

கள் என்று எளிதில் உணரலாம். ஆனால் இரண்டும் சமகனமுள்ள பொருள்களல்ல. ஹைட்ரொஜன் எல்லாப் பொருள்களிலும் கனம் குறைந்தது. ஹைட்ரொஜன் கனத்தை 1 ஆகக் கருதினால், ஆக்ஸிஜன் வாயுவின் கனம் 16 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதனால் தண்ணீரில் ஒன்பதில் எட்டுப் பங்கு கனம் ஆக்ஸிஜனும் ஒரு பங்கு ஹைட்ரொஜனும் என்று எளிதில் உய்த்துணரலாம்.

இதுகாறும் கூறியதிலிருந்து பேரணுவுக்கும், சிற்றணுவுக்கும் வேறுபாடு இன்னதென்று அறிந்திருப்பீர்கள். அன்றியும், தண்ணீர் உற்பத்தியாக, ஹைட்ரொஜன் சிற்றணுக்களும் ஆக்ஸிஜன் சிற்றணுக்களும், குறித்த நிறையில் ஒன்றோடொன்று ஐக்யமாகவேண்டுமென்றும் தெளிந்திருப்பீர்கள். அதாவது தண்ணீரில், ஹைட்ரொஜன் சிற்றணுக்கள் இரண்டிற்கு ஆக்ஸிஜன் சிற்றணு என்ற விதம் அமையும் வண்ணம், ஹைட்ரொஜனைவிட எட்டுப் பங்கு ஆக்ஸிஜன் முன்னதோடு சேர்ந்தால் மாத்திரந்தான் தண்ணீர் உண்டாகும். ஆனால், இவ்விரு வாயுக்களையும் மேற்சொன்ன நிறையை மேற்கொண்டு ஓர் ஜாடியில் அடைத்தால், தண்ணீர் வந்துவிடுமென்று நினைக்கவேண்டாம். இவ்விரு வாயுக்களும் அதிக அன்னியோன்னியமுள்ளனவாய் இருந்தபோதிலும், ஒன்றோடொன்று சேர்தற்கு இதர உதவி வேண்டும். அவ்வுதவி மின்சாரசக்தி (electricity) புரிகின்றது. அந்த ஜாடியில், மின்சாரப் பொறி ஒன்றைச் செலுத்துவோமானால், உடனே, இரண்டு வாயுக்களும் ஒன்றோடொன்று ஐக்யமுறப் பாய்ந்து, ஆக்ஸிஜன் சிற்றணு ஒவ்வொன்றும் ஹைட்ரொஜன் சிற்றணு இரண்டைப் பற்றிக் கொள்ளும்; தண்ணீரும் புலப்படும். இது ஒரு பெரிய விந்தையன்றோ? கண்ணிற்குத் தெரியாத இரண்டு வாயுக்கள் வரையறுத்த ஓர் நிபந்தனைக்குட்பட்டு ஒன்றோடொன்று ஐக்யமுற்று, ஜலமாய்விடுவது ஜாலவித்தையே.

நீர் ஒரு சங்கீரணப் பொருளானாலும், எக்காரணத்தாலும் நீர் தோன்றினால், பின்பு அது நீராகவே நிலைத்திருக்கின்றது. எவ்விதம் பொன், வெள்ளி, இரும்பு, ஈயம் போன்ற மூலப் பொருள்கள் தொன்றுதொட்டு தத்தம் இனமழியாமல் இருந்து வருகின்றனவோ, அதுபோல ஜலமும் வேறு பொருளாக மாறாமல் ஜலமாகவே நிலைபெற்று விளங்கிவருகின்றது. எங்கெங்கு ஜலம் காணப்படினும், அங்கெல்லாம் ஜலத்தின் அமைப்பும் உற்பத்தியும் ஒரேவிதந்தான். இங்கு ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். ஆக்ஸிஜன் நெருப்பு மூட்டுதற்கு இன்றியமையாததாகையால், அதை அனலன் என்றழைக்கலாம் என்று முன்பு கூறியுள்ளேன். ஒரு பதார்த்தத்தோடு ஆக்ஸிஜன் சேர்ந்து ஓர் சங்கீரணப் பொருள் ஆகுமிடத்து, ஆக்ஸிஜன் அப்பதார்த்தை எரித்து விடுகிறது. ஹைட்ரொஜனை ஆக்ஸிஜன் எரிப்பதால் விளையும் பொருள் ஜலம். எரிக்கக்கூடிய பொருள்கள் பல நீங்களறிவீர்கள். விறகு, நிலக்கரி, இங்கால வாயு (coal gas), எண்ணெய், மண்ணெண்ணெய், பார் எண்ணெய் (petrol) முதலியன எரிவது எல்லாரும் அறிவார்கள். அவைகள் எரிவதற்குக் காரணம் அவற்றுள் அந்தரீயமாயிருக்கும் ஹைட்ரொஜன் வாயு மண்டலத்திலிருக்கும் ஆக்ஸிஜனோடு ஐக்யமாதலே. அவ்வாறானால், நெருப்புத்தோன்றும் சந்தர்ப்பங்களிலெல்லாம், தண்ணீரும் உண்டாகும். நீரில்லாமல் நெருப்பில்லை அல்லது நெருப்பிலிருந்து நீர் உண்டாகின்றது என்று சொல்லுவோமானால் அது எவ்வளவு அற்புதமாகத் தோன்றினும், சிறந்த ஓர் உண்மையேயாகும். நெருப்பில்லாமல் புகை காணாது என்று நியாய சாஸ்திரத்தில் கூறுவதுண்டு. நாம் நெருப்புண்டானால், அதில் நின்று நீர் உண்டாகுமென்றும் கூறலாம். இதுவும் ஒரு விந்தையென்பதை யாவரும் ஒப்புவார்கள்.

மேலே கூறியதிலிருந்து, உலகத்தில் ஓய்வின்றி தண்ணீர் உண்டாகிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எளிதில் அறியலாம். எக்காரணம் பற்றியாவது நீருண்டானால், நீர் நீராகவே நிலைத்து நிற்குமென்று முன் கூறினேன். நீர் உண்மையில் வகுக்க முடியாத மூலப்பொருள் (element) அல்லவெனினும், நீர்த்தன்மையை எப்பொழுதும் எல்லாவிடத்தும் நிலையாகக் கொண்டு நிகழும் குணமுடையதானதால், அது மூலப்பொருள்தானோ வென்று அறியாதவர் சந்தேகிக்க இடையுண்டு. பஞ்ச பூதங்களுள் யாதேனுமொன்றை பூதமென்று களிக்க ஒருவாறு

காரண முண்டானால், அது தண்ணீர் என்பது மேற்கூறிய அதன் தன்மையால் விளங்கும். ஆனால் தண்ணீர் பூதப்பொருள் அல்லது மூலப்பொருள் அன்றென்ற உண்மையை மறக்கக்கூடாது.

தண்ணீர் உயிரில்லாத பொருளானாலும், உயிர்ப்பொருள்களின் ஒவ்வொரு செய்கையோடும் அது கிட்டின சம்பந்த முடையது. மாங்காயிலும் வெள்ளரிக்காயிலும் ஜலாம்சம் இருப்பது யாருமறிவார்கள். அக்காய்களில் ஜலம் எவ்விதம் தோன்றியது? பிராணிகளைப் போல சசியங்களுக்கும் உணவு தேவை. அவ் வுண்வில், ஹைட்ரோஜன் அந்தர்ப்பூதமா யிருக்கின்றது. நம்மைப்போல, செடிகளும் வாயுமண்டலத்துள்ள ஆக்ஸிஜனை உட்கொள்ளுவதால், அந்த ஆக்ஸிஜன் உணவில் மறைந்திருக்கும் ஹைட்ரோஜனோடு சேர்ந்து தண்ணீராகிறது. இதுவே காய்களில் காணப்படும் தண்ணீருக்கு ஓர் காரணம். இதுபோல, உயிர்ப்பிராணிகளின் தேகங்களிலும் தண்ணீர் ஒவ்வொரு நிமிஷமும் உண்டாகின்றது.

மாங்காயில் நூற்றில் என்பது பாகம் தண்ணீர். வெள்ளரியில் நூற்றில் தொண்ணூற்றைந்து பாகம் தண்ணீர். இதில் ஒரு வியப்பான விஷயம் கவனிக்கத்தக்கது. இக்காய்களில், இவ்வளவு அதிக பாகம் தண்ணீரும், மிகச் சிறுபாகம் கட்டிப் பொருளுமாக இருந்த போதிலும் அவைகள் திரட்சி கெடாமல், தரையில் எம்மாதிரி வைக்கப்படினும் உருவம் சிதையாமலும் நிற்கின்றனவே. ஒரு பங்கு மண்ணும் பதினைந்து அல்லது இருபதுமடங்கு கனமுள்ள தண்ணீரும் சேர்ந்து கட்டியான உருவமொன்று நம்மால் செய்யமுடியுமா? பாலைப் பார்ப்போம். அதில் 87 பங்கு ஜலமும் 13 பங்கு கட்டிப் பொருள்களும் அடங்கி யிருக்கின்றன. வெள்ளரியைவிட, பாலில் ஜலம் குறைவு. ஆனாலும், வெள்ளரி தரையில் நிற்கும்; பாலோ தரையில் நிலைபெற்று நிற்பதில்லை. அது ஒழுகும் பொருள். இதென்ன ஆச்சரியம்! மாவில் நீர் அம்சம் நூற்றில் 10 பங்கிருக்கும். மா ஏறக்குறைய முழுதும் கட்டி அணுக்களின் திரள். வெள்ளரி ஏறக்குறைய முழுதும் தண்ணீர். ஆயினும், வெள்ளரியைப்போல மா நிலைபெற்று நிற்காது. மாவைத் தண்ணீரில் கரைத்துப் பணிகாரமாக்கினால், பணிகாரம் நிலைத்து நிற்கின்றது. என்னே பிரபஞ்ச விநோதம்!

தண்ணீர் இல்லாத விடம் இல்லை. சற்றும் ஈரமில்லாத பொருளொன்றைக் காண்பதும் அருமை. தண்ணீர் எல்லாவற்றோடும் ஒட்டுங் குணமுடையது. தண்ணீரில் சற்றுவது கரையாத பொருள்களும் மிகச் சிலவே. அதனால் உலகெங்கும் தண்ணீரின் பிரவர்த்தியால் தோற்ற பேதம் உண்டாகின்றது. "மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லினைக் குழியச் செய்யும்" என்ற பழமொழியில் அடங்கி யிருக்கும் தத்துவத்தை உற்றறியற்பாலது.

மூன்று அவஸ்தா பேதங்கள் உண்டென்றும், பொருள்கள் யாவும் அவ்வவஸ்தைகளுள் ஒன்றை இயற்கையாகக் கொள்வன வென்றும் நான் முன் கூறியிருக்கிறேன். தண்ணீரின் இயற்கை ஸ்திதி திரவ ஸ்திதி. ஆனால், அது மற்றிரண்டு ஸ்திதிகளிலும் இயற்கையில் காணப்படுகிறது. தண்ணீர் உறைந்து ஆலங்கட்டி அல்லது பனிக்கட்டியாதல் நாம் அறிவோம். வெப்பத்தால், நீராவியாக மாறுதலும் நாமறிந்த விஷயம். இவ்வவஸ்தா பேதங்கள் சீதோஷ்ண நிலையின் காரணமாக உண்டாகின்றன. ஸ்திதி மாற்ற மொன்றைத் தவிர, மற்றெல்லா குணங்களிலும் பனிக்கட்டி, தண்ணீர், நீராவி இம்மூன்றிற்கும் வித்தியாசமே யில்லை. இதுவும் ஒரு புதுமையென்றே சொல்லவேண்டும். ஆனால், இப்புதுமை இத்தோடு நிற்கவில்லை. சமீப காலத்தில் சில பௌதிக சாஸ்திர வல்லார்கள் தண்ணீரின் அமைப்புச் சிறப்பைப் பல அற்புத பரீக்ஷைகட்கு உட்படுத்தி நோக்கியதில், எக்காலத்தும், எங்கும் நீர் மூன்று அவஸ்தைகளும் ஒருங்கே சேர்ந்து காணப்படுகிறதென்று நிர்ணயம் பண்ணியுள்ளார்கள்! இதுவும் பெரியதோர் அற்புதமென்று ஐயமறக் கூறலாம்.

இத்துடன் இக்கட்டுரையை நிறுத்துவோம். இதில் சில அதிசயமான இயற்கை யுண்மைகளை நாம் படித்தோம். படிப்பின் பயன் யாது?

> கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்

என்ற திருக்குறள் வசனத்தை இங்கு நாம் நன்குணர்ந்து நடப்போமாக.

அணியிலக்கணம்

(திரு. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, B.A., B.L.,

ஜில்லா நீதிபதி, கடப்பை.)

ஆனந்தம் அழகு அலங்காரம்

(தொடர்ச்சி.)

ஆகையால் ஆசை அடங்கி அன்பு மிகுந்தாலல்லது ஆனந்தப்ரகாசம் ஏற்படாது. ஆனந்தம் பொங்காவிட்டால் அழகு புலப்படாது. அலங்காரம் உணரவும் முடியாது. வெளியிடவும் முடியாது. சாந்தம், சிவம், சுந்தரம் என்ற சப்தங்கள் உண்மை, நன்மை, அழகு இம்மூன்றும் ஒருமைப்பட்டன என்று விளக்குகின்றன. மனதுக்கு அமைதி ஏற்பட்டு உண்மையை அறிந்து, அன்பு பெருகும் பொழுதுதான் அழகின் உணர்ச்சி மிகுதியாகவும் தூய்மையாகவும் ஏற்படும். அப்படி அழகின் உணர்ச்சி ஏற்பட்டால்தான் சித்ரம், சாகித்யம், சங்கீதம் முதலிய அலங்காரச் சிறப்பு ஏற்படும் என்பது திண்ணம்.

மனிதன் இயற்கை அழகின் நடுவில் பிறந்து வளர்ந்தாலும் அதை அறியாமலே வாணாளை வீணாக்கிக் கொண்டு இறந்துபோகிறான். பழக்கம் பயிற்சி இல்லாமல் அழகையுணரும் திறம் நமக்கு இருக்கிறது என்று எண்ணுவது மதியீனமே ஆகும். யோக மார்க்கத்துக்கு அப்யாஸம் வைராக்யம் இன்றியமையாதனவே என்றும், அவை இருந்தால் யோகம் சுலபமாகக் கைகூடும் என்றும் கிருஷ்ண பரமாத்மா கீதையில் உபதேசித்தபடி கலைஞானம் சித்திப்பதற்கும் அப்யாஸமும் வைராக்யமும் இன்றியமையாதவை என்று நாம் நன்குணரவேண்டும். ஆசார்யவான் புருஷோ வேத (ஆசான் உள்ளவனே பரமனை அறிவன்) என்பது மத உணர்ச்சி. ஆத்யாநுபவ விஷயங்களில் எவ்வளவு உண்மையோ அப்படியே மகாகவிகளைச் சரணம் அடைந்த மனதுக்கு மட்டுந்தான் அழகு, அலங்காரம், ஆனந்தம் விளங்கும்.

ஆனால் அழகு அலங்காரம் விஷயங்களில் மகாகவிகள் சங்கீத சிகாமணிகள் சித்திர வன்மை பெற்றவர்கள் சிற்ப சாஸ்திரிகள் ஒரு முகமாகப் பேசவில்லையே பலவிதமாக வல்லவா உபதேசம் பண்ணி இருக்கிறார்கள் என்று தர்க்கம் பண்ணுவது தவறு. ஆத்ம விஷயம் மத விஷயங்களில் பெரியோர்கள் ஒரேமாதிரியாகத்தான் உபதேசம் செய்திருக்கிறார்களா? ஆத்ம சுரூபத்தைப்பற்றி மூன்று மதஸ்தர்களும் இப்பொழுதுகூட விவாதம் பண்ணிக்கொண்டு இருக்கவில்லையா? அதற்காக நாம் மதக்கொள்கைகளை அறிய முயற்சி எடுத்துக்கொள்ளாமல் இருக்கலாமா? முயற்சி எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறோமா? கடவுள் நமக்கும் கொடுத்திருக்கும் புத்தி நுட்பத்தால் அந்த உபதேசங்களை சீர்தூக்கிப் பார்த்து எது சமரஸமானதும் உயர்வும் உள்ள தத்துவம் என்று தீர்மானம் செய்ய வேண்டியதே நம்முடைய கடமை, நம்முடைய பெருமை. அதுபோலவே அழகு, அலங்காரம், கலைஞானம் முதலிய விஷயங்களிலும் பெரியோர்களின் அனுபவத்தை நன்குணர்ந்து நம்முடைய சுயதீர்மானத்துக்கு நாம் வரவேண்டும்.

அழகின் தன்மையை உணர்ந்து அனுபவித்து கற்பனா சக்தியால் சிற்பம் சித்திரம் சங்கீதம் சாகித்யம் வாயிலாக வெளியிடும் வித்தையை ஏதோ ஜாலவித்தை என்றாவது அப்படிச்செய்கிறவர்களைக் கண்கட்டிவித்தை செய்யப்பட்டவர்கள் என்றாவது எண்ணக்கூடாது. பிரபஞ்ச சௌந்தர்யத்தை உணர்ந்து அனுபவித்து வெளியிட்டுப் பிரபஞ்சத்திற் காணும் அழகைக்காட்டிலும் உயர்ந்த அழகை உள்ளுணர்ச்சியால் உணர்ந்து அனுபவித்து மனோராஜ்யத்தில் கற்பனாசக்தியால் நிர்மாணம் பண்ணப்பட்ட பெரியோர்களுக்கு நாம் எப்பொழுதும் நன்றி அறிவு காட்டக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் சொல்வது உண்மையிலும் உண்மை (ஸத்யஸ்ய ஸத்யம்) என்று திண்ணமாக நம்பவேண்டும்.

இயற்கை அழகை உள்ளபடி உணர்ந்து வெளியிடுவது ஒருவிதமான திறமை. எவ்வளவோ உலகங்களில் நாம் அனுபவித்த அழகனுபவங்கள் வாசனா ரூபமாக மனதில் பதிந்திருப்பவைகளை உயிர்மூட்டி வெளியிட்டுக் களிப்பது மற்றொரு திறமை. யோகசக்தி

யால் புலன்களின் சக்திகளைப் பெருக்கிப் புதிதாகக் காணும் அழகுக் காட்சிகளை வெளியிடுவது மற்றொரு திறமை. ஆனந்தானுபவம் பொங்கிக் கரைபுரண்டு போகும்பொழுது அன்பு மிகுந்து குளிர்ந்த நோக்கம் ஓங்கி இருக்கும் சமயத்தில் தாமாகவே தோன்றும் தோற்றங்களும், தாமாகவே வெளிவரும் சொற்களும், தாமாகவே செய்யப்படும் நிர்மாணங்களும் மற்றொரு திறமையாகும். இப்படி அழகின் உணர்ச்சி பலவிதமாக இருப்பதாலேதான் அணியிலக்கணத்தை நன்குணரப் பழக்கமும் பயிற்சியும் அவசியமாக இருக்கின்றன.

வெர்ட்ஸ்வோர்த் (Wordsworth) என்ற ஆங்கில மகாகவி கலைஞானத்தை அறிவின் உயிர் (the breath and finer spirit of all knowledge) என்றும் உலக ஞானத்தின் முகத்தில் விளங்கும் வசீகரமான பிரகாசம் (the impassioned expression which is in the countenance of all science) என்றும் சொல்லுகிறார். ஷெல்லி (Shelley) என்ற ஆங்கில மகாகவி கலைஞானம் நம்முடைய சீவ கலையில் சிவகலை கலந்து சீவனுக்குள் சிவ மணம் பூக்கும் சமயங்களை அறிந்து அறிவிக்கிறது என்று உபதேசிக்கிறார் (Poetry redeems from decay the visitations of divinity in man). ஆகையால் அணியிலக்கணத்தை நாம் நன்குணர்ந்து அதன் மூலமாகப் பிரபஞ்ச சௌந்தர்யத்தைத் தெரிந்து அனுபவித்துப் பிரபஞ்ச கர்த்தாவாகிய கடவுளுடைய நிரதிசயமான ஒப்புயர்வற்ற தேஜோமயப்ரகாசத்தை நாடி அடைந்து அனுபவித்து அளவற்ற இன்பம் அடைவது தான் மனிதப்பிறப்பின் உயர்ந்த பயனாகும் என்பது சத்தியம்.

கம்பரும் அரசியலும்

(திரு. E. S. வரதராஜ அய்யர், B.A.,
Bishop Heber College, Trichy,
உதவி ஆசிரியர்.)

சிறந்த புலவர்கள் எவ்வெப் பொருள்களைப் பற்றி எழுதினாலும் அவ்வப்பொருள்களிலோ அவை சம்பந்தமான தொழில்களிலோ பெரிதும் பயிற்சி யுடையார் போன்றெழுதுவர். காவியங்களிலோ, கதைகளிலோ குதிரைகளைப்பற்றிக் கூறுமிடத்துப் புலவர் குதிரை வணிகரா யிருந்திருப்பாரோ வென்றும், நவமணிகளையும் அவற்றின் பண்புகளையும் கூறுமிடத்திவர் புகழ்பெற்ற அரதன வியாபாரியோ என்றும், யாவரு மயங்குமாறு கூறிச் செல்வர். இவ்வாறு கூறுவதைக் கொண்டே அவ்வப்புலவர்களின் மரபினையோ, தொழிலினையோ வகுக்கப் புகுவதியல்பு. அரசியல் மாபைத் திறம்படக் கூறும் பெற்றியால் திருவள்ளுவர் அரசமரபின ரென்றும், பெரிய வரசாங்கத்தில் தகுந்த பதவியிலிருந்திருந்திருக்கவேண்டுமென்றும் சிலர் கருதுவர். கம்பர் அரசியலைக் கூறும் அழகைக்கண்டு அவரைக் கம்பநாடென்ற தமிழ் நாட்டுப் பகுதியை யாண்ட ஓர் குறு நில மன்னனெனக் கருதி யெழுதியவருமுளர். ஆயினும் புலவர்கள் கல்வி கேள்விகளிற் சிறந்தவராதலாலும், உலக வனுபவம் மிகவு முடையவர்களாதலாலும், பல பொருள்களையும், அவைகளிற் பெரிதும் பயிற்சியுடையார் போன்று கூறுவதும் கூடும். அவ்வாறு கூறுவதைக்கொண்டே அவர்கள் மரபையோ தொழிலையோ வகுப்பது சரியன்று.

இனி, அரசியலென்பது அரசினது தன்மை யென்பது. அரசினது தன்மை யெனவே

அரசனது தன்மை, அவன் மேற்கொண்ட ஆட்சியினது பண்பு என்ற விரண்டையும் குறித்து நிற்கின்றது. நாவிஷ்ணுப்ரதிவீபதி என்றும், திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்றும், பெரியார் கூறுவதினின்று, திருமால் எவ்வாறு மூப்புவனங்களையும் புரக்கின்றனரோ, அதுபோன்றே, மன்னன் இவ்வுலகத்தைக் காத்தருள்கின்றான், ஆதலின், அரசன் திருமாலின் அம்சமெனக் கருதப்படுகிறான். சாதி, மத பேதங்களால் பலதிறப்பட்ட குடிகளையும், ஒன்றுபடுத்தி அவர்களை யாதரித்துப் புரியும் ஆட்சியினால், புவிக்கவன் இன்றியமையாதவனாகின்றான். மன்னவன் தோளிணைக்காவலின்றி வாழுந் தகைத்தின்றிந்த வையகம் என்றும்,

“பன்முறை யுயிர்களெல்லாம் பாலித்து
ஞாலங்காப்பான்
தன்னெடுங் குடைக்கீழ்த் தத்த
நெறிகளிற் சரித்துவாழ
மன்னரையின்றி வைகு
மண்ணுல கெண்ணுங்காலை
பின்னுயிரின்றி வாழும் யாக்கையை
யொக்கும்”

என்றும் கூறியபடி குடிகள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு அரசன் அவசியம் வேண்டும். மேலுமவன் கல்வி யறிவாற்றல் நிறைந்தவனாய், அறத்தின் வழியே செங்கோலைச் செலுத்தி மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாவித்துக் குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், பிறவுயிர்களாலும், கள்வராலும் நிகழும் துன்பங்களைப் போக்கி யாளவேண்டும். அறநெறி முதற்றே யரசின் கொற்றமாகலின் மன்னன் ஒருபொழுதும் அறநெறியினின்று வழுவலாகாது. இவ்வாறு மிகுந்த சிறப்புடன் அரசாண்ட தசரதப் பேரரசனைக் கம்ப நாட்டாழ்வார் சிறப்பிக்கு மிடத்துத்,

“தாயொக்கு மன்பிற்றவ மொக்கும்
நலம் பயப்பிற்
சேயொக்கு முன்னின்றொரு
செல்கதியுய்க்கு நீரால்
நோயொக்கு மென்னில் மருந்தொக்கு
நுணங்குகேள்வி
ஆயப்புகுங்காலறி வொக்கு
மெவர்க்கு மன்னன்”

என்று கூறினர். அரசன் குடிகட்கெவ்வெவ் வாறிருக்கவேண்டு மென்பது இங்கே அழகு பெறக் குறிக்கப்பட்டது. தன் கீழ்க் குடிகளை யேழைகளென்றும் செல்வவந்தரென்றும் வேற்றுமைப் படுத்தாது, பாலினைந் தூட்டிந் தாய் போன்றவர்களது குறைகளை அவர்கள் தன்பால் வந்து முறையிடுதற்கு முன்னமேயே உய்த்துணர்ந்து போக்குவதாலும், எஞ்ஞான்றுமவர்தமாக்கத்திற் செலுத்தி கருணையாலும் அவர்க்குத் தாய் போன்றும், வேண்டிய நன்மை வேண்டியாங்கு கொடுப்பதால் சிறந்த தவம் போன்றும், எல்லா விஷயங்களிலும் முன்னிருந்து குடிகளை நன்னெறிக்கண் செலுத்து நீர்மையான் முதல்வனைப் போன்றும், தகாதவழியிற் படர்வோரைத் தகதவெறுக்குந் தன்மைபோல் அவர்களுக்கோர் நோய் போன்றும், பின்னர் அவர் அத்தண்டத்தானே நல்வழிப்படுமாறு செய்வதால், நோய் தீர்க்கு மருந்து போன்றும், கற்றுவல்ல வமைச்சரோடும் பேரறிஞரோடும் தூய விஷயங்களை யாராயப் புகுங்கால், அவரவர்களின் ஆசங்கைகளை தனது சிறந்த முடிபுகளைக்கொண்டு தீர்ப்பதால், அறிவே போன்றும் குடிகளுக்கிருந்தான் என்பது இதனாற் பெறப்பட்ட பொருளாம். வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த விம்மா நிலமன்னனரசாட்சியின்கீழ் வெள்ளமும் பறவையும், விலங்கும் வேசையருள்ளமும் ஒருவழியோடினவெனக் கூறப்படுகிறது. தசரதன் நாட்டில் மாத மும்மாரி பெய்ததனால் விளைவுக்கு வெள்ளம் வேண்டுவதின்றி நேரே சென்று அது கடலிற் சேருமென்றும், பறவைகளும், விலங்குகளும் வேடர்கள் முதலான பேருக்கஞ்சி யலைந்து திரியாம லொருவழியே செல்லுமென்றும், புலி, பசு, மான் முதலிய மிருகங்கள் ஒன்றற்கொன்று விரோதமின்றி யொரு வழியிற் படருமென்றும், தன் பால் வருபவனொருவனிடமும் பொருந்திய பற்றின்றிப் பொருளளவாகப் போகம் விற்கும் பூவையருள்ளமும் ஒரு வழியிற் செல்லுமென்றும், கூறுவதான் அம்மன்னனது பேரரசின் பெருமாட்சி புலனாம். பின்னு மிவ்வரசன் நிறைந்த மதியும், அருளும், அறனும், சாந்தமும், வீரமும், கொடையும், நீதியும் என்ற குணங்கள் யாவும்நிறைந்து விளங்கினன் எனவும், பிறவரசர்கள் செய்யாது விடுத்த பல யாகங்க ளிவன் செய்து மறைந்தனனென்று கூறி அவனிடம் தலை சிறந்து விளங்கிய வள்

ளன்மை, வரம்பில் கல்வி, மறுவில் வீரம் மனை வாழ்க்கை யென்ற நான்கு சிறந்த தன்மை களேயும் குறிக்கும்போது,

'ஈந்தே கடந்தா னிரப்போர்
கட லெண்ணில் நுண்ணூ
லாய்ந்தே கடந்தா னறிவென்னு
மளக்கர் வாளாற்
காய்ந்தே கடந்தார் பகைவேலை
கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் திருவிற்
ெறுடர் போக வெளவம்.'

என்றழகு பெறக் குறிக்கின்றனர். ஒரு திசையிலிருக்கும் ஒரு பெரிய அரசனிடம் இரவலர் பலரும் பெருங் கூட்டமாக வருவ தியல்பு. இவர்களைச் சில அறிவாளிகளான தனிகர்கள், இரக்கம் சிறிதுமின்றி ஊரெல்லை தாண்டிச் செல்லுமளவும் தடிகொண்டடித்துக் கடப்பர். ஆனல் தசரதன் தன்பால் வேண்டி வரும் பலரையும் நன்கறிந்து, அவர்கள் வேண்டுவனவற்றை யுய்த்துணர்ந்து, அவரவர் களின் தகுதிக்கேற்ப நிரம்பிய தனங்களேயோ பிறவற்றையோ கொடுத்து இரவலர்களாகிய பெருங்கடலைக் கடந்தான் எனவும், அறி வென்னும் பெரிய ஆழியினை கணக்கற்ற நுட்ப மான கருத்துக்களைத் தம்மகத்தடங்கிய பல நூல்களேயும், ஐயந்திரிபற வாராய்ந்தே நீந்தி ஞனெனவும், பகைவராகிய பனிக்கடலைத் தன் வாள் வலியாலேயே வென்று கடந்தானென வும், தனக்கு வாழ்க்கைத் துணையா யமர்ந்த சிறந்த பத்தினிகளின் உள்ள முணர்ந்து அவர்க்கேற்ப வொழுகி யணைந்து அவரது கருத்தினைத் பூர்த்தி செய்து, போகமாகிய புணரியைக் கடந்தானெனவு முரைக்கு திறத்தால், சிறந்த மன்னன் மேற்கொள்ள வேண்டிய அறக்கொள்கைகள் யாவென திறம் படக் கூறும் அழகு பாராட்டத் தக்கதாகும்.

நிற்க, அரசன் செவ்விய செங்கோல் செலுத்தவேண்டின் நீர்வள நிலவளத்தாற் சிறந்தநாடும், நேர்மையிற் பல பொருள்களும் சிறந்த வரண்களும், பாங்காய்ப் பெற்ற தலைநகரும, மன்னனிடம் மாருதவன்பு கொள் ளும் குடிகளும், மாத மும்மாரி பொழியக் குறைவின்றிப் பயன்தரு விளை நிலங்களும், தேர், யானை, குதிரை, காலாள் முதலிய நால் வகைச் சேனையும், பிறவும் மிகுவுமவசியமாகும். தசரதனது ஆட்சிக்குட்பட்ட நாடும், அவன் தலைநகரும், அந்நகரைச் சுற்றியமைந்த நீரரண், நிலவரண், மதிலரண், காட்டரண் முதலிய வரண்களும், நகர்கோட்டையைச் சூழ்ந்த அகழி முதலியனவும் பல சிறந்த வுவமைக ளோடுகூடச் சிறந்தவகையில் கம்பன் வரு ணித்திருக்கின்றுன். இங்ஙன மமைப்பெற்ற அம்மன்னர் மன்னனுக்குக் கண்போன்ற சிறந்த வமைச்சர்களிருந்தனர். அவர்கள் சிறந்த குலத்திற்றோன்றியவராய், புலக்கலைகளிலும் வல்லவராய் நிறைந்த கேள்வி யறிவு கைவசப் பெற்றவராய் நடுவு நிலைமையையே எஞ்ஞான் றும் கருதுபவராய், கோப முதலியவற்றை யறவே நீக்கி யறத்துறையிலேயே பொருந்தி விளங்கினுரென்றும், அவர்கள் நிகழ்ந்தவற்றை மனதிற் கொண்டு மேல் நிகழ விருப்பனவற் றைத் தேர்ந்துணரும் பெருமையரென்றும், வினைவசமாக வரும் நிகழ்ச்சிகளையும் "ஊழையு முப்பக்கம் காண்பருலைவின்றித் தாழாது ஏற்றுவர்" என்ற பொதுமறைக் கிணங்கத் தமது அரிய முயற்சியால் மாற்றும் ஆற்றல் வாய்ந்தவரென்றும், உயிரிற் சிறந்தன்று நாண் என்ற உரைவினராய், மாசுபட வாழும் வாழ்க்கையைச் சிறிதுமதியாது மயிர்நீப்பின் வாழாக் கவரிமானையொப்ப, ஒரு குற்றம் தம்மீது வற்பட்டபோதிலும் முடனே வுயிர் துறக்கும் பெற்றியராய், அரசியலில் வகுத்துறைக்கப் பெற்ற காலம், இடம் ஏற்ற கருவி யிவைகளை நன்காராய்ந்து, அறிவுக் கேற்ற நல்லொழுக்கமமைந்தவராய், அரசுற் கமையவேண்டிய வெல்லாச் சிறப்பையும், புகழையும், தமது மன்னன் அடையுமாறு செய்வதில் வல்லவரென்றும், கூறியுள்ளார் கம்பர். பின்னும், சில நுண்ணறியும், வீரமு மில்லாத வமைச்சரைப்போல் அரசனுக்கு விரோதமாக நாம் கூறுவோமாளுல், அவனம் மேல்வெகுண்டு நமது ஆக்கத்துக்குக் குறைவு நேரிடும் என்றஞ்சாமலும் தமதுயிரைப் பொருட்படுத்தாது, தலைமகன் தமமேற் கேயங்கொண்டபோதும், அந்தக் கடுமையைத் தாங்கி, 'இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன், கெடுப்பாறை யின்றிக் கெடு வானுகலின், மன்றை கிடித்து ரைத்து நீதியைப் புகட்டும் நிகரற்ற வீரரென் றும், இறப்பு, நிகழ்வு, எதிர்வென்ற முக் காலங்களு முணர்ந்த பெரியாரென்றும்' போற்றப்படுகிருர்கள். அரசனுக்கிதமிவை,

இத்மில்லவை யிவையெனத் தெரிந்து, நோயாளியின் தன்மையை யறிந்துதவும் மருத்துவ னென, அரசற்குதவு மறிஞருமவ ராவர்:

இத்தகைய சிறந்த வமைச்சர்களோடு அறுபதினாயிரம் ஆண்டு அரசு செலுத்திய தசரதன், ஒருநாள் தனது பேரத்தாணியில் அரியணைமீதமர்ந்து தான் இறைவன் திருவருளாற் பெற்ற இராமனுக்கு முடி சூட்டும் விஷயத்தைப்பற்றி யாராய்கின்றான். இவ்வாராய்ச்சி நிகழும், மந்திரப் படலத்தில், அரசியல் முறைகள் பல தெளிவாகின்றன. தான் றோன்றியாகித் தன்மனம் போனவாறொழுகிக் கடுமொழியும், கையிகந்த தண்டமுமுடையனாகி, அளவுக்கு மிஞ்சிக் குடிகளிடத்திலிருந்து, அவர்கள் கண்ணருங் கம்பலையுமாகி நிற்க, பொருள் வெளவி, மறநெறி மேற் பூண்டொழுகும், மதியிலா மன்னனைப் போலாது, குடிகளின் நன்மையையே யெப்பொழுதும் தனதுள்ளத்திற் கொண்டு, தான் செவ்வியவுணர்வினனாயினும், அமைச்சர் கூறு மருமொழியை விரும்பிக் கேட்கும் இன்சொல்லும், இதமான செய்கைகளுமுடையனாய், இவ்வளவென வரையறுக்கப்பட்ட இறைக்கு மேல் சிறிதளவும் குடிகளிடம் வெறுக்காதவனாய், அறநெறிபற்றி யொழுகும், அவனிபன், தான் முதுமைப்பருவ முற்றமையின், தன் மூத்த மகனான இராமனுக்கு முடிசூட்டிக் கண்களிப்பக்கண்டு, தான் வானப்பிரஸ்த ஆசிரமத்தை மேற்கொண்டு, பின்னர், காமம், வெகுளி, மயக்கம் என்ற இவைகளை யறவே வெறுத்துத் துறவினைமேற்கொண்டு, பிறப்பெனும் பெருங்கடலைத் தாண்ட வேண்டுமென்ற வெண்ணங் கொண்டிருப்பதாக வமைச்சரிடம் சொன்னான் இவ்வாறு மன்னன் கூற, அவர்கள், இராகவன் தமது புரவலனாவான் என்ற மகிழ்ச்சி ஒரு புறமும், இதுகாறும் தமக்கரசனாகி யிருந்து, தமக்குப் பேராதரவளித்த மன்னர்பிரான் பிரிவானென்ற துன்பம் ஒரு புறமாக, இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென வருந்தினரெனக் கவிகூறும் உவமை பாராட்டதக்கது. இங்ஙனமிருந்த வமைச்சர்கள் பின்னர்த் தேறி இராமன் சகல கல்யாணகுணங்கள் பொருந்தியவன் என்றும், அவன் தருமதேவதையின் அவதாரமென்றும், மூவரும் ஒருருவமான மூர்த்தியென்றும், மண்ணுலகம் செய்த தவப்பயனாக அவன் புவிக்கண் வந்தவதரித்துள்ளானென்றும் புகழ்ந்து பேச, அரசன் இராமன் பிறந்தான் என்ற செய்தி செவிப்பட்ட அந்தக் காலத்தில், அடைந்த மகிழ்ச்சியைவிடப் மதின்மடங்கு மகிழ்ச்சி யெய்தினான். இச்சமயம் சுமந்திரன் தோன்றி அரசனை பார்த்து, " அரசே, நீ துறவறத்தை மேற்கொண்டு மனச்சாந்தி யடையடித் துணிவது சரியே, ஆனால், அவ்வாறு செய்வதற்கு முன்பு உமது மகனிராமனுக்கு முடிசூட்டுவ தவசியமாகும். இதுவே உமது பழைய குலத்தார் கடைப்பிடித்தருளிய வறநெறியென்று கூற, அரசன், அவ்வாறு செய்தற்கிசைந்தான், எனவே இவ்வாறு, அரசன் குடிகளது கருத்தைப் பன்முறையும் தேர்ந்து, காரியங்களை நடத்துவதே முறையென்றும், அரசன் குடிகள் இவர்களுக்குள்ளாக சிறந்த ஒற்றுமையிருந்து வந்ததென்றும் அறியக் கிடக்கின்றது.

(தொடரும்.)

வம்பர் மஹாஸபை

(திரு. ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர், B.A., B.L.)

I

நமது சென்னைராஜதானியில், நீர்வளமும் நிலவளமும் பொருந்தும் மணிமாலா தீர ப்ர தேசமான மணிபுரம் ஜில்லாவின் பெருமையை நமது நண்பரும், பூகோள சாஸ்த்ரம் படிக்கும் மாணுக்கரும் நன்கறிவார்கள். இஜ் ஜில்லா கல்வியிலும், செல்வத்திலும் சங்ககாலம் முதல் சிறப்புற்ருேங்கியது. இஜ் ஜில்லாவின் தலைநகராகிய மணிபுரம், மணிமாலா நதியின் வடகரையில், கவிகள் கானஞ் செய்யத்தக்க வாறு வெகு அழகாய் அமைந்திருக்கின்றது.

மணிபுரத்துக்கு மேற்கே, சுமார் 5 மைல் தூரத்தில், மணிமாலா நதிக்கரையோர மாகவே, வம்பர்புரி எனும் திவ்ய க்ஷேத்ர மிருப்பதை, ஆஸ்திகர் அனைவரும் அறிவார்கள். இது பாடல்பெற்ற ஸ்தலங்களில் ஒன்று. இதுதான் நமது கதாஸ்தலம். பொதுவாய், வம்பர்புரி மஹாஜனங்கள், பழைய தர்மானுஷ்டானங்களைக் கைவிடாது, "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" எனும் பழமொழிப்படி, திருப்தியாயும் அன்யோன்ய மாயும் வாழ்ந்து வருகின்றார்கள். நவீன நாகரிகங்கள், இப்போதுதான் சிறிது சிறிதாகத் தலைகாட்ட ஆரம்பித்திருக்கின்றன. மணிபுரம் முனிஸிபல் எல்லை வரவரப் பெருகி, வம்பர்புரியையும் கவளீகாரம் செய்துவிடுமோ வென்று இக்கிராமவாசிகள் பயப்படுகின்றனர். "போதும் போதாததற்குப் பொன்னியும் வந்தாளாம்" என்றவாறு, தென்னிந்தியா ரெயில்வேக்காரர், புதிதாய்ப் போட்ட ப்ராஞ்சு லயனில், வம்பர்புரி (வாம்பூர்) ஸ்டேஷனும் ஏற்படுத்திவிட்டார்கள். "காலக் கொடுமை" என்று கலங்குவோரும் சிலர் காலச் சிறப்பென மகிழ்வோரும் பலர். மாலை சுமார் 6-மணி இருக்கலாம். மணிமாலை நதியினின்றும், தெள்ளிய நீர்த் திவலைகளையும் மலர்களின் நன் மணங்களையும் வாரிக்கொண்டு இளந்தென்றல் மெதுவாய் வீசுகின்றது. கதிரவன், தன் காதலி ஸந்த்யா தேவி பின்வர அஸ்தகிரியில், இப்போதுதான் அஸ்தமிக்கின்றான்.

வழக்கப்படி, நமது கதா புருஷர்களான, வம்பர் மஹா ஸபையார், நதிக்கரையில் கோவில் முன்னுள்ள மணல் மேட்டில் கூடினார்கள். இது வெகுகாலமாய்த் தினந்தோறும் நடந்துவரும் சபை. ஜாதி மதம், வயது வித்யாசமே கிடையாது. ராஜ நீதி, தேச சரித்திரம், செல்வ நூல், நாடோடியாய் நடக்கும் உலக விருத்தாந்தங்கள் முதலிவற்றுடன் குடும்பக் காரியங்களும் பேசித் தீர்ப்பார்கள். பேச்சு முடிவில், வைஷம்யம் யாதொன்றுமின்றி, அன்யோன்ய அன்பு ஆதரவுடன் சிரிப்பும் விளையாட்டுமாய், அவரவர் தம்தம் இல்லம் ஏகுவார். பேப்பர் கிடையாது. பேனை மைக்கூடு கிடையாது. எல்லாம் ஸம்ப்ரதாயப்படி (Unwritten Law) நடக்கும். கதாரம்பத்தில், நமது வேதாந்தி (Philosopher) பின்வருமாறு, தமது உபந்யாஸத்தை முடித்தார் :—"ஆஸ்திக சிகாமணிகளே, யான் இதுவரை உபந்யாஸித்த விஷயத்தின் கருத்தென்னவென்றால்—தன்னைப்போல் பிறரையும், தன் உயிர் உடல் பொருள்களைப்போல் பிறர் உயிர் உடல் பொருள்களையும் பாராட்ட வேண்டும்" என்று முடித்தார்.

"நமது வேதாந்தி கர்னாடக ஸம்ப்ரதாயப்படி படித்தவராயினும், நவ நாடக நடையுடை பாவனைகளையும், ஆசார வியவகாரங்களையும் நன்கறிந்தவர். கண் முன்னே கைக் கடியாரமன்னியில் உபந்யாஸிக்கத் துணியார். 5 நிமிஷத்துக்கொரு தடவை அதைப் பார்ப்பார். 10 நிமிஷத்துக் கொருதடவை, ஆஸ்திக சிகாமணிகளே! ஸந்த்யா காலமாய்விட்டது. மன்னிக்கவேணும், சீக்கிரம் முடித்து விடுகிறேன்," என்று நவீன ஸம்ப்ரதாயப்படி கூறுவார்.

வேதாந்தி, முற்கூறியவாறு, தன் உபந்யாஸ முடிவுரை கூறி முடித்ததும், வம்பர் மஹா ஸபை ப்ரதான மெம்பரில் ஒருவரான, கன ஸ்ரீ விஷமர் (Mischievous) கள்ளத்தனமாய் வேதாந்தியருகில் நகர்ந்து வந்து, கடி காரத்தை எடுத்து ஒளித்துக்கொண்டார்.

வேதாந்தி :—"ஏன் என் கடிகாரத்தை எடுத்துக் கொண்டீர்" என்று புன்னகை யுடன் வினவினர்.

விஷமர் :—"தங்கள் கடியாரமா! ஏது இப் படி உத்தரவாகிறது. தம் கடியாரம், என் கடியாரம் என்ற வித்யாஸமே பாராட்டத் தெரியாத பரம அத்வைதி யல்லவா அடி யேன். சற்று முன், ஸ்வாமிகளே அங்ஙனம் சாதித்து அருளினீர்களே? ஸ்வாமிகள் உப தேசத்தைச் சிஷ்யன் அனுஷ்டிக்கின்றேன்," [சபையோர் யாவரும் மந்தஹாஸம் செய்தனர். கடியாரமும் வேதாந்தி வசம் சென்றது.] இச்சம யம், ராஜம் ஸபாரங்கத்தில் ப்ரவேசித்து, மற்றவரைப்போல் மணல்மீது உட்கார்ந்தார்.

இவர்தான் நமது ஸபைத் தலைவர். இக்ரா மத்தோரில் வயது மிகுந்தவர். வயசு க்ரமப் படி, ப்ரக்ருதி ஸ்வயம்வரம் அல்லது Natural Selection எனும் மாமூலை அனுஸரித்து தன் படிக்கே இவர் ஸபாபதிஸ்தான மடைந்தார்.

தாத்தா :—ராஜம்! இன்று, ஏன் இவ்வளவு தாமதம்?

ராஜம்:—எலெக்ஷன் ஸமயமல்லவா? நமது தர்மு நமது வாம்பூர் இலாகா அபேக்ஷகராய் நிற்கின்றார்.

விஷமன்:—ஐயோ பாவம்! கால் நோகுமே! சற்று உட்காரச் சொல்லலாமே. [சபையோர் சிரிக்கிறார்கள்.]

க்ராமி (Villager) :—ஏன் ஐயா! வாம்பூர் என்றால் என்ன?

கவிராயர் :—வம்பர்புரி யென்பது, ஆங்கி லத்தில் வாம்பூர் என மருவிற்று.

க்ராமி :—இதுக்குத்தானு இங்கிலீசுப் பாஷையை மொத்தப் பொல்லாப்பாசை என் கிறீங்க!

விஷமன் :—பொல்லாப் பாசை யென்று ஒருவரும் சொல்லவில்லையே. நல்லபாசை யென்றுதானே சொல்லுகிறோம்.

தாத்தா:—நம்மது தர்மு பரமஸாதுவாயிற்றே!

விஷமன் :—'கெட்டவன்' என்று யாரா வது கூறினரா?

கவிராயர் :—இவ்வளவு புத்திசாலிக்கு, இப்பைத்யம் எங்ஙனம் உதித்ததென்று, தாத்தா வினவுகின்றார்.

விஷமன்:—புத்திசாலிக்குத்தான் பைத் தியமும் பிடிக்கும். அதனால்தான் எலக் ஷனுக்கும் நிற்கின்றார்.

கவிராயர் :—எளிய தமிழ் நடையில் பேசுமே!

விஷமன்:—பணக்காரத் தமிழா பேசுகின் றேன்?

தாத்தா :—என்னவோ! போன எலக் ஷனில் தர்மு 5000 தோற்றான். பாக்கி இருப்பது 5000. இதையும் தோற்று, விட்டால், பிறகு காசியாத்ரை செல்லவேண் டியது தான்.

விஷமன் :—காசியாத்ரை சென்றால், கல் யாணமாகும்,

பாட்டி :—(பெரிய கிழவி) தர்முவுக்கு, இரண்டு பெண்கள் வேறே! காலமோ கலிகால மாயிருக்கிறது. மாப்பிள்ளை விலை மலியவோ வழியைக்காணோம், வரசுல்கமோ, நாளுக் நாள், விஷம் ஏறுவதுபோல் ஏறுகிறது. கன்னிகழிக்க அன்னூரு ரூபாய் என்றவாறு 500, ஆயரம் என்று எல்லோரும்தான் கேட் கிறார்கள். போதாக் குறைக்கு, 10 வருஷம் இங்கிலீஷ் வாசித்த பிள்ளைகளெல்லாம், என்னவோ "புஸ்தகத்தை" தூக்கிக் கொண்டுவந்து விடுகிறார்கள். சொத்துண்டா? சுகமுண்டா?

ராஜம்:—பாட்டி! ஐநூறு ரூபாயெல்லாம் கர்னாடகப் பேச்சு. மார்க்கட்டில் ஆயிரத்துக் குக் குறைந்த மாப்பிள்ளையே கிடையாது.

பாட்டி:—ஆயிரமாயுடுத்தா? வயிற்றெரிச் சல்தான்.

விஷமன்:—500 என்பது மூன்றுஸ்தானம். "த்ரிஸ்தானம் ஸர்வத: த்யஜேத்" என்றார் பராசரர். சுபகாரியங்களில் மூன்றுஸ்தானமே ஆகாது. ஆதலால் குறைந்தது 1000 என்று 4 ஸ்தானமாக்கிக் கொண்டார்கள்.

பாட்டி :—99 ஆக்கிவிடுகிறது தானே! இரண்டு ஸ்தானமாய் விடுமே. 'இரண்டு' என்பதும் மங்களகரந்தானே!

ராஜம் :—தம் போன்ற மாதுசிரோமணி கள் சட்ட சபை மெம்பர்களாய் வந்தால், எல்லாம் எளிதில் முடிந்துவிடும். அதற்குத் தக்க ஏற்பாடும் செய்துவருகிறோம்.

பாட்டி :—ஆமாம். அதுதான் குறை! இப்போதே புருஷர்கள் நடந்தால் பெண்கள் பறக்கின்றார்கள். சற்றேனும் மட்டு மரியாதை கிடையாது. புருஷன் 10 மைல் ஓடினால் பெண்கள் 20 மைல் ஓடுகிறார்கள். காலக்கொடுமைக்கு யாரைத்தான் நோவது. ஓட்டாம், எலெக்ஷனாம்! ஓட்டெடுக்கும் காலம் வந்து விட்டது.

க்ராமி :—என் ஐயா! நம்ம பெண்பிள்ளைகளுக்கும் ஓடுண்டோ?

விஷமன் :—எல்லோருக்கும், மண்டையில் ஒருஓடுண்டென்றுஉடல்நூலார்கூறுகின்றனர்.

ராஜம் :—சீமையில் தங்களுக்கும் ஓட்டுரிமை வேண்டுமென ஸ்திரீ ஜாதிகள் 50 வருஷம் பாடுபட்டு கடைசியில் சம்பாதித்தே விட்டார்கள்.

க்ராமி :—ராக்ஷஸ ஜன்மந்தான்!

வேதாந்தி :—இதெல்லாம் சீமைப்படிப்பால் வந்த தீவினை.

க்ராமி :—இதனால்தானே மழையே யில்லாமல் மண்ணாய் போகிறது.

ராஜம் :—மழைக்கும் ஓட்டுக்கும் என்ன சம்பந்தம்.

வேதாந்தி :—ஆதார—ஆதேய (Container and the Contained) நியாயம்.

க்ராமி :—என்னவோ, எல்லாம் யுகப்ரளயமாயிருக்கிறது. "சுட்டி தலையெடுக்கச் சோழபுரம் பாழாச்சு" நீங்கஎல்லாம் சீமைப் படிப்புப் படிச்சவங்க! நான் என்னவோ பேத்தறென் என்று கோபிச்சுக்கிடாதே யுங்கோ! நம்ம பெண்பிள்ளைகளெல்லாம், நமது முன்னோர் முறைப்படி ஒழுங்காய், நல்ல பதிவிரதைகளாகவும், தாய்மாராகவும்—

ராஜம் :—ஏன் உனது மனைவி மக்களுக்கும் சம உரிமையளிக்கலாகாது. பெண்கள் தாழ, புருஷர் மாத்திரம் வாழ வேண்டுமோ?

கவிராயர் :—பெண்கள் மாத்திரம் பெற்று வளர்க்கவேண்டுமோ? வாழ்வென்ன, தாழ்வென்ன? குடும்பத்தில், வாழ்ந்தால் இருவரும்தான் வாழ்கின்றனர். தாழ்ந்தால் இருவரும் தாழ்கின்றனர். ஆண் பெண் என இருவகையாய்ப் படைத்து, ஈசன் இருவகைத் தொழிலும் அவரவர்க்குத் தக்கவாறு அமைத்திருக்கின்றார். ஈசனே பக்ஷபாதமாய் ஸ்ருஷ்டித்திருந்தால், அவர் ஆணைப்படி தானே நாமும் நடக்கவேண்டும். கணவன் தேடவேண்டும், மனைவியதைப் பராமரிக்க வேண்டும்!

ராஜம் :—பித்தருக்கு யார் பதிலுரைப்பது.

விஷமன் :—வழக்குரைக்க இயலாதவன், வசையில் பிடித்தானும். "Where arguments fail, abuse comes in" என்று நன்றாய் உரைத்தாரையா நாதமுனிகள்!

கவிராயர் :—(புன்னகையுடன்) ஜமாய்த்தானேராஜம்! ஜமாய்! சொக்காய்க்காரருக்கு இது தக்ககாலம்.

ராஜம் :—கவிராயரே! மன்னிக்க வேண்டும். விளையாட்டாய்ச் சொன்னேன்.

தார்க்கீகர் :—அபத்தம் வா ஸுபத்தம் வா குந்திபுத்ரோ விநாயக:! என்றவாறு ஓங்கி யடிக்கவேண்டும்.

க்ராமி :—ஓங்கி யடிப்போர்க்குத்தான் காலம். ஊமைக்கு உளர்வாயன் சண்டை ப்ரசண்டம்.

விஷமன் :—நமது க்ராமி, நமது சட்ட சபை மிகக்கட்சி (conservative) மெம்பராவதற்கு லாயக்குள்ளவன்.

க்ராமி :—எனக்கும் ஓட்டுண்டா? எலெக்ஷன் சமயத்தில், ஒவ்வொரு ஓட்டும், 40, 50 ரூபாய் விற்கிறதாமே!

[சபையோர் நகைக்கின்றனர்.]

ராஜம் :—உனக்கு எத்தனை ரூபாய் பட்டா?

க்ராமி :—25 ரூபாய் பட்டா. அண்ணன் தம்பிகள் நாங்கள் மூவர்.

ராஜம் :—நீதானே மூத்தவன்.

க்ராமி :—ஆமாம்.

ராஜம் :—நீங்கள் சேர்ந்த குடும்பமா; பிரிந்த குடும்பமா!

க்ராமி :—சேர்ந்த குடும்பம்.

ராஜம் :—குடும்பத்தலைவனாதலால், உனக்கு ஓட்டுண்டு. 10ரூபாய் பட்டாமுதல் ஓட்டுண்டு.

வேதாந்தி :—அப்படியானால் எனக்கும் ஓட்டுண்டல்லவா?

விஷமன் :—தமக்கும் ஓட்டுண்டு. ஆனால் தம்போன்ற பேரறிஞர், சிற்றின்ப ஸாதனமான, வ்யாவஹாரிக விஷயங்களில் தலையிடல் தகுமோ!

இந்நிலைமையில் கோவில் மணியடித்து கால நிலைமையை எச்சரித்து சபை கலைந்தது. மெம்பர் யாவரும் தத்தம் வீட்டுக்கு விரைந்து சென்றனர்.

CHILDREN'S LIBRARIES

குழந்தைகளுக்கான புஸ்தகசாலைகள்

(திரு. கிருஷ்ணமாச்சாரி அவர்கள்,

Teacher's College, Saidapet).

குழந்தைகளுக்கான புஸ்தகசாலைகளின் முக்கிய நோக்கமென்னவென்றால், குழந்தைகளுக்குப் படிக்கும் பழக்கத்தை உண்டாக்கி அதை விருத்தி செய்வதே. இந்த வழக்கம் சிறுவயதிலேயே ஒருவருக்கு உண்டாகிவிட்டால் அவர் பெரியவரானபோதும் வாசிக்கும் வாடிக்கையை வெகுவாய் விடமாட்டார். சிறு வயதில், அதாவது எட்டாவது வயது முதல் பதினோராவது வயது வரையில்தான் குழந்தைகளுக்கு வாசிப்பதில் ரொம்ப உத்ஸாகம் உண்டு. அப்போதுதான் குழந்தைகளின் மனதை இஷ்டமான வழிகளில் திருப்புவது சுலபம். அப்போது அவர்களுக்கு வேலைத் தொந்தரவு அதிகமிராது. வீட்டில் படிக்க வேண்டிய பாடங்களும் ரொம்ப குறைவு. இந்தப் பருவத்தில் குழந்தைகளுக்கு வாசிக்கும் வாடிக்கையை உண்டாக்காவிட்டால், பிற்பாடு பெரியவர்களான பிறகு வேலைத் தொந்தரவு அதிகமாயிருக்குமாதலாலும், அவர்கள் பிரபஞ்ச சுகங்களில் மனம் செலுத்தியிருப்பார்களாதலாலும், அவர்கள் க்ரமமாய் புஸ்தகசாலைகளுக்கு வந்து வாசிப்பதோ, அல்லது வீட்டிலேயே புஸ்தகங்களை க்ரமமாக வாசிப்பதோ அநேகமாய் முடியாத காரியமாகும். இதனால் தான் அமெரிக்காவிலுள்ள புஸ்தகசாலை அதிகாரிகள் சிறுவர்கள் விஷயத்தில் ரொம்ப கவனம் செலுத்துகின்றனர்.

புஸ்தகசாலை அதிகாரிகள் புஸ்தகசாலைக்கு வரும் குழைந்தைகளுக்கு புஸ்தகங்கள் கொடுத்து உதவுவது மாத்திரம் போதாதென்றும் அநேக குழந்தைகள் புஸ்தகசாலைகள், தங்களுடைய வீடுகளிலிருந்து ரொம்ப தூரத்திலிருப்பதாலோ, அல்லது வேறு காரணங்களாலோ, புஸ்தகசாலைகளுக்கு வந்து வாசிப்பது முடியாமல் போகுமென்றும், ஆகையால், அவர்களுக்கும் புஸ்தகசாலையால் ப்ரோஜனம் உண்டாகும்படி, ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியம் என்றுமெண்ணியிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் பட்டணங்களின் சிற்சில விடங்களில், புஸ்தகசாலைக்குக் கிளைகள் ஏற்படுத்தி அங்கே பிள்ளைகள் வந்து புஸ்தகங்கள் வாசிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இப்படி பலவிதங்களில் குழந்தைகளுக்கு புஸ்தகங்கள் வாசிக்க சௌகர்யம் செய்து கொடுப்பது மாத்திரம் போதாது. புஸ்தகசாலைகளில் குழந்தைகளின் வயதுக்குத்தகுந்த உபயோகமான புஸ்தகங்களை வாங்கி வைக்க வேண்டியது அவசயமாகும். இது விஷயமாக அநேகர் ஆராய்ச்சி செய்து குழந்தைகளுக்கு சாதாரணமாய் இன்ன வயதில் இன்னமாதிரி புஸ்தகங்களின்மேல் ப்ரியம், இன்ன புஸ்தகங்கள் அவர்களுக்கு ஏற்றவை என்பவைகளைப்பற்றி சில சித்தாந்தங்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

சிறுவர்களுக்குக் கதைப் புஸ்தகங்கள் தெரிந்தெடுப்பதில் அவைகள் சன்மார்க்க முறைகளை அனுசரித்திருக்கின்றனவா என்றும், நல்ல இலக்கிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றனவா என்றும் பார்க்க வேண்டும். கதைகளல்லாத மற்ற புஸ்தகங்கள் தெரிந்தெடுப்பதில், அவைகள் வாசிக்க உத்ஸாகம் கொடுக்கக்கூடியவையாவென்றும், அவைகளில் சொல்லப்படும் விஷயங்கள் தவறில்லாமலிருக்கின்றனவா என்றும் பார்க்கவேண்டும். சன்மார்க்க முறைகளுக்கு விரோதமாயுள்ள புஸ்தகங்களை குழந்தைகள் புஸ்தகசாலைகளில் சேர்க்கக்கூடாது. குழந்தைகளில் ரொம்ப சிறியவர்களுக்கு படங்கள் அதிகமாயுள்ள புஸ்தகங்கள் தான் பிரியம். அவைகளில் சிறு பாட்டுக்கள் இருந்தால் நல்லது. அவர்களைவிட கொஞ்சம் வயதான குழந்தைகளுக்கு பிராண கட்டுக் கதைகளில் ரொம்ப பிரியம் உண்டாகிறது. அதற்குப் பிறகு 10 அல்லது 12-வது வயதில் சிறுவர்களுக்கு உண்மையான உலக வாழ்க்கையைப் பற்றிய கதைகளை வாசிக்க பிரியம் ஏற்படுகிறது. இந்தப் பருவத்தில் பெண்களின் விருப்பமும்,

பையன்களின் விருப்பமும் வித்யாசப்படுகின்றன. பெண்கள் குடும்பம், பள்ளிக்கூடம், ஊர், இவைகள் சம்பந்தமான கதைகளை வாசிப்பதில் பிரியங் கொள்ளுகிறார்கள். பையன்களோ, யுத்தம், விளையாட்டுகள், கொள்ளைக்காரர்கள் முதலிய பல விஷயங்களைப்பற்றிச் சொல்லும் கதைகளை வாசிப்பதில் பிரியங் கொள்ளுகிறார்கள்.

தேச சரித்திரம், ஜீவ்ய சரித்திரம், பிரயாணஞ் செய்தல், சாஸ்திரம் ஆகிய இவைகளை உத்ஸாகம் உண்டாக்கக்கூடிய விதமாய் எழுதியிருக்கும் புஸ்தகங்கள் சிறுவர்களுக்குரொம்ப பிரியமானவை. சம்பாஷணை ரூபமாக எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களின் மேல் சிறுவர்கள் பிரியங் கொள்வதில்லை. ஏனென்றால் ஏதாவது விஷயத்தைப்பற்றி வாசிக்கும்பொழுது, அடிக்கடி கேள்வியும் விடையுமாயிருந்தால், வாசிப்பதிலும் மனதில் விஷயங்களை கிரஹிப்பதிலும், தடையேற்பட்டு, சிறுவர்களுக்கு சிரமம் உண்டாகிறது. நன்றாய் அச்சிடப்பட்டு நேர்த்தியான படங்கள் உள்ளதாய் நன்றாய் பைண்டு செய்யப்பட்ட புஸ்தகங்களின்மேல்தான் சிறுவர்களுக்கு பிரியம் அதிகம்.

புஸ்தகசாலை அதிகாரிகளும் சிப்பந்திகளும் அடிக்கடி பள்ளிக்கூடங்களுக்குப் போய், மாணவர்களுக்கு புஸ்தகசாலையின் உபயோகத்தைப் பற்றியும் புஸ்தகங்கள் வாசிப்பதின் உபயோகத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்து வரவேண்டும். உபாத்தியாயர்களும் தங்களுடைய மாணவர்களை அழைத்துக்கொண்டு புஸ்தகசாலைக்குப் போய் பார்வையிட்டுவர வேண்டும். புஸ்தகசாலை அதிகாரிகள் உபாத்தியாயர்களுடன் கலந்து பேசி, பாடசாலையின் பாடக்ரமங்களை அனுசரித்தவைகளாக இன்னும் புஸ்தகங்கள் வாங்கி வைக்கலாமென்று அறிந்து வந்து, அந்த புஸ்தகங்களை புஸ்தகசாலைகளில் வாங்கி வைக்கவேண்டும். சில சமயம் புஸ்தகசாலைகளிலிருந்து 20 முதல் 50 புஸ்தகங்கள் வரையில் தெரிந்தெடுத்து உபாத்தியாயர்களிடம், பிள்ளைகளுக்கு வாசிக்கக் கொடுக்கவேண்டும்.

அமெரிக்காவில் பலவிடங்களில், உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் சேர்ந்துள்ள சங்கங்கள் பல இருக்கின்றன. இந்தச் சங்கங்கள் கூடும்போது புஸ்தகசாலை அதிகாரிகள் அங்கே போய் பெற்றோர்களுக்கு நல்ல புஸ்தகங்கள் வாசிப்பதால் உண்டாகும் நன்மையைப்பற்றியும், பிள்ளைகளை புஸ்தகசாலைகளுக்கு வந்து வாசிக்கும்படி பழக்குவதைப் பற்றியும் பிரசங்கங்கள் செய்வதுண்டு. பிள்ளைகள் வந்து வாசிக்க ஏற்பாடுகளுள்ள புஸ்தகசாலைகள் முனிசிபாலிடிகளால் ஏற்படுத்தப்பட்டு அவைகளை நிர்வகிக்கும் செலவில் சொற்ப பாகத்தை சர்க்கார் ஏற்றுக்கொண்டால், குழந்தைகளின் கல்வி அபிவிருத்தியடையும்.

"சிந்தாமணி"

(திரு. ஸி. வி. நாராயண ஐயர், M.A., L.T.
Presidency College, Madras.)

அத்தியாயம் 3.

சுற்றுப் பிரயாண ஏற்பாடு.

அப்படியே ஐந்து வருஷங்கள் சென்றன. சென்னை ஸமஸ்தானக் கலாசாலையிலே படித்து "பிஸிக்ஸ் (Physics) ஆணர்ஸ்" என்னும் பரீக்ஷையில் சிந்தாமணி முதன்மையாகத் தேறிப் பரிசு பெற்றான். சதாசிவன் அதே வருஷம் கணக்குப் பாடம் படித்து பி. ஏ. பரீக்ஷையில் முதன்மையாகத் தேறிப் பரிசுபெற்றான். இப்படிப் படிப்பு முடிந்து இருவரும் ஊரிலேயே யிருந்தார்கள். கூடிய சீக்கிரம் இவர்களுக்குக் கலியாணம் செய்யவேண்டுமென்று அவ்விருவருடைய பெற்றோர்களும் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப் பற்றியே அவர்கள் வீட்டிலே பேச்சுக்கள் நடந்துவந்தன. ஆனால் அந்த நண்பர்கள் நினைப்பெல்லாம் வேறு. தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று அவர்களுக்கு நிச்சயமாகவில்லை. சிந்தாமணி சொல்வதுபோலச் செய்வதுதான் சரி என்று சதாசிவன் நினைத்தான். உலக நன்மைக்காக உழைக்க வேண்டுமென்று சிந்தாமணி எண்ணினான். ஆனால், எந்த வழியிலே உலகத்துக்கு உழைப்பது என்றுதான் அவன் யோசனை செய்துகொண்டிருந்தான். அதற்காகச் சிலநாள் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டும் என்று அவனுக்குத் தோன்றிற்று. அதைப்பற்றிச் சதாசிவனிடம் ஒருநாள் பேசினான்.

சிந்தாமணி:—சதாசிவா! சிலகாலம் நான் பிரயாணம் செய்யலாமென்று நினைக்கிறேன். இதுவரையிலும நாம் புத்தகங்களிலிருந்து அறிவு பெற்றோம். அந்த அறிவை உபயோகித்து நம்முடைய நாட்டுக்கு நன்மைசெய்ய முயல்வதானால் அது ஒருவன் நீரிலே மிதந்து கிடப்பதற்கு வேண்டிய உபாயங்களைப்பற்றிப் புத்தகங்களிலே படித்த பின்பு குளத்திலே குதிப்பதைப் போலாகும். நேருக்கு நேராய் ஒவ்வோரிடத்திலிருந்தும் நாம் அறிவு தேட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நீயும் என்னுடன் வருவதற்கு உடன்படுகிறாயா?

சதாசிவன்:—உன்னுடன் வருவதைவிட வேறே எதுதான் எனக்குப் பிரியம் கொடுக்கும்? ஆனால் நீயும் சம்பாத்யமில்லாதவன். நானும் சம்பாத்யமில்லாதவன். யாரையாவது பணம் கேட்டு நான் உன்னுடன் வரவேண்டும். உனக்கு உன் வீட்டுப் பணம் கிடைக்கும். உன்னுடன் வருவதற்காக நான் பணம் யாசகம் செய்வதில் எனக்கு இஷ்டமில்லை.

சிந்தா:—நீ சொன்னது நியாயம்தான். ஆனால் நான் சம்பாத்யமில்லாதவன் என்று சொன்னாயே அதுதான் தப்பிதம். நூறு நூற்றைம்பது ரூபாய் நான் சம்பாதித்து வைத்திருக்கிறேன். அந்தப் பணத்தை யுபயோகித்து நாமிருவரும் சில வூர்களுக்குப் போவோம். அந்தப் பணம் தீருவதற்குமுன் இன்னும் கொஞ்சம் பணம் சம்பாதிப்போம். அப்படிச் செய்வதற்கு நீயும் உபகாரமாக விருப்பாய்.

சதா:—நீ சொல்வது இன்னதென்று நான் அறிந்துகொள்ள முடியவில்லை. உனக்குச் சம்பாத்தியமேது. நான் சம்பாதிப்பதெப்படி?

சிந்தா:—அதுதான் எனக்கே வேடிக்கையாக இருக்கிறது. சென்ற வருஷம் நான் சென்னையிலே படித்துக்கொண்டிருந்தபொழுது ஒருநாள் எனக்கும் என்னுடைய போதகாசிரியருக்கும் ஒரு தர்க்கம் உண்டாயிற்று. அது ஸங்கீத வாத்யங்களிலிருந்து தோன்றும் ஒலியைப்பற்றிய ஒரு விஷயம். இதுவரையிலும் அச்சிட்டிருக்கும் புத்தகங்களை எல்லாம் படித்தவராதலால் அவர் அத்தாட்சிகளெல்லாம்காட்டி நான் சொன்னது பிசகென்று கூறினார். ஆனால் அவர் கூறியவற்றில் எனக்கு நம்பிக்கை தோன்றவில்லை. ஆகவே ஒருமாதம்

வரையில் நான் பல வாத்தியங்களின் ஒலிகளை யும் பரீக்ஷித்துப் பார்த்து, பத்துப் பதினைந்து நோட்டுப் புத்தகங்களிலே அந்தக் கணக்குகளை யெல்லாம் எழுதினேன். பிற்பாடு ஒரு வியாசமும் எழுதினேன். அதை ஆசிரியர் கையிலே கொடுத்தேன். அவர் மூன்று நாட்கள் கழிந்த பின்பு என்னிடம் வந்து " அப்பா! நீ சொல்வதுதான் சரி. இதுவரையிலும் இந்த விஷயம் ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. இந்த வியாசம் சில நாள் என்னிடம் இருக்கலாமா?" எனவே அதற்கு நானிணங்கினேன். பின்பு எனக்கு அந்த விஷயம் மறந்துவிட்டது. அவர் மறக்கவில்லை. அந்த வியாசத்தை இங்கிலாந்துக்கு அனுப்பினார். அது பல அறிஞராலும் பார்க்கப்பெற்று இறுதியில் உயர்ந்த ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்றது. அதற்காக எனக்கு அவர்கள் ஏதோ ஒரு கணக்கு பிரகாரம் பதின்மூன்று பவுனும் சில்லறையும் அனுப்பி யிருக்கிறார்கள். இந்தப் பணம் நேற்றுத்தான் என் கைக்கு வந்தது. இப்படியும் பணம் சம்பாதிக்க முடியுமா என்று நினைத்துச் சந்தோஷப்பட்டேன். இதே மாதிரியாக இன்னும் பத்து வியாசங்கள் எழுத என்னிடம் குறிப்புக்கள் இருக்கின்றன. அவற்றை உபயோகப்படுத்தலாம.

சதா:—உன்னைப்போலவும் ஒரு மடையன் இருப்பானா? இவ்வளவு கீர்த்திபெற்ற பின்னுமா உன் பெருமை உனக்கே தெரியாமற் போயிற்று. யானைக்குத் தன் பலம் தெரியாதென்பது உண்மையாயிற்று. இந்தக் காரியம் வேறொருவன் செயதிருப்பானானல்—

சிந்தா:—தலை விரித்துக் கூத்தாடிப் பைத்தியம் என்று பேர் வாங்குவான்.

சதா:—அப்படியா சொல்வது? ஸர்க்கார் ஸ்காலர்ஷிப்பு வாங்கிச் சீமைக்குபோய்ப் பெரிய பரீக்ஷையிலே தேறிப் பெருமையடைந்து மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பான்.

சிந்தா:—அது மட்டுமா. மோட்டாரிலேறித் திரிந்து பணக்காரர்களுடன் கூடி விருந்துண்டு விருந்தளித்துக் கர்வமடைந்து தன்னைப் போன்ற பெருமை யில்லாதவர்களை மடையர்கள் என்று இகழ்ந்து இந்தியாவுக்கே தான் ஒரு திலகம் என்று தம்பட்டம்போடுவான். அவன் அம்படிச் செய்வதால் நம்முடைய நாட்டிலே கூழில்லாதவனுக்குக் கூழ் கிடைக்குமா கஞ்சியில்லாதவனுக்குக் கஞ்சி கிடைக்குமா துணியில்லாதவனுக்குத் துணி கிடைக்குமா. ஹிந்துக்களும் துணிக்கர்களும் சண்டை செய்வதை விலக்குவார்களா? மாமியார்கள் நாட்டுப் பெண்களைத் திட்டுவதை நிறுத்துவார்களா? நாட்டுக்கு எந்த விதத்திலே நன்மை பிறக்கும்?

சதா:—உன்னுடன் யார் பேசிப்பிழைப்பது? அதிருக்கட்டும். இந்தச் செய்தி உன்னுடைய தகப்பனாருக்கு தெரியுமா? அவர் என்ன சொல்லுகிறார்?

சிந்தா:—நேற்று எனக்கு வந்த பணம் செக்காக வந்ததால் அவர் இந்த விஷயத்தை யறியவில்லை. பத்திரிகையை மாத்திரம் படித்துப் பார்த்தார். அவருக்கு அது அர்த்தமாகவில்லை என் பெயரைக் கண்டதும் சந்தோஷமடைந்தார். அவ்வளவு தான். பணத்தைப்பற்றி நானொன்றும் சொல்லவில்லை.

சதா:—அப்படிச் சொல்லாமலிருக்கலாமா. சொல்லிவிட்டால் அந்தப் பணத்தை அவர் பிடுங்கி விடுவாரா.

சிந்தா:—பணத்தை அவருக்குக் கொடுத்தாலென்ன தப்பிதம்? அவர் பணத்தாசை யுள்ளவரல்லவே. அதில்லை. நீ சொல்கிறபடி என்னை இங்கிலாண்டுக்கு அனுப்பி ஒரு பெரிய மனிதனாக்கிவிட ஏற்பாடு பண்ணி விடுவார். பிற்பாடு நானும் இப்பொழுதிருக்கும் பெரியவர்களைப் போலக் குட்டிச்சுவராக வேண்டியதுதான்.

சதா:—நீ எது வேணுமானாலும் சொல் நான் இந்த விஷயத்தில் உன் தகப்பனார் கக்ஷிதான். நாடு நாடு என்று நீ பைத்தியம் பிடித்தலைகிறாய். நாட்டின் நன்மையை நாடுவதற்கு முன் நம்முடைய நன்மையை நாடவேண்டும். நாம் நன்றாய் விட்டோமானால் நாடும் நன்றாய் விடும். அன்றியும் நாம் பிறப்பதற்கு முன் நாடு என்ன கஷ்ட நிலையி லிருந்துவிட்டது? நாம் பாடு பட்ட பிறகு எந்தவிதமான நல்ல நிலைக்கு வந்து விடப் போகிறது? எப்படியிருந்தபோதிலும் தானாக வந்திருக்கும் ஸ்ரீ தேவியைக் காலாலுதைப்பார்களா? இந்தப் பெருமை யாருக்குக் கிடைக்கும்? உனக்கு இன்னும் பத்தொன்பதாவது வயது நிரம்பவில்லை. எனக்குக் குட்டிச்சுவர்போல இருபது நிரைந்துவிட்டது. உன் உபாத்தி

யாயர் முதலியவர்கள் உன் புத்தியைக் கண்டு பிரண்டுவிட்டார்கள். நீ இந்தியாவுக்கே ஒரு விளக்காய் விளங்கப்போகிறுய். அதற்குச் சந்தேகமில்லை. அப்படியிருக்க ஏதேதோ—

சிந்தா :—நீ சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் ஒருவகையான பிழை யிருக்கிறது. முதன்மையாக நீ என்மீது கொண்டிருக்கும் நட்பினுல் நாடு கெட்டாலும் நான் நன்றுனல் போதுமென்று நினைக்கிறுய். இனி, நாம் பிறப்பதற்கு முன்னிருந்த நாட்டின் நிலைமையும் நமக்குப் பின் அதன் நிலைமையும் வித்தியாசப்படப் போவதில்லை என்று பேசுகிறுய். அது தவறு. ஒருதாகரணம் கூறுகிறேன். ஒரு பூமி பாழாய்க்கிடக்கிறதென்று எடுத்துக்கொள். சிலர் சேர்ந்து பாடுபட்டு ஏரியொன்று வெட்டினுல் அவர்கள் இறந்த பின்பும் அந்த நிலம் செழிப்படையாதா? அந்த நல்ல காரியத்தை யொருவருமே செய்யாதொழிந்தால் இந்தப் பூமி எப்படி நன்மை பெறும்?

சதா :—அதெல்லாம் சரிதான். ஆனுலும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. நீ இங்கிலாண்டுக்குப் போகவேண்டியதுதான். இல்லாவிட்டால் நீ செய்வது தற்கொலை செய்வதை யொக்கும் என்று ஒரே பிடிவாதமாய்க் கூறினுன்.

சிந்தாமணி சிறித்துக்கொண்டு "சரி! சரி! நான் உன்னிடம் பேசினதிலிருந்து புதுமையான ஒரு விஷயம் தெரிந்துகொண்டேன். என்வேலையும் அதிகரித்தது. இதுவரையிலும் நான் நினைத்தது ஏழையர்களைப்பற்றியும் அறிவில்லாதவர்களைப்பற்றியுமா யிருந்தது. அவர்களைச் சீர்திருத்த என்ன செய்யலாமென்று யோசனை செய்துகொண்டே யிருந்தேன். இப்பொழுது உன்போன்ற படிப்பாளிகள் ஆசைப்படுவதற்கும் இணங்க வேண்டி யிருக்கிறது. ஆகட்டும் அதையும் கவனிக்கவேண்டியதுதான். படிப்பினுலேயும் பதவியினுலேயும் உயர்வு பெற்றவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று மாதிரி காட்டுவதும் நம்முடைய நாட்டுக்கு இப்பொழுது அவசியமாகத்தா னிருக்கிறது. அது கிடக்கட்டும். நான் இங்கிலாண்டுக்குப் போவதாகவே வைத்துக்கொள்வோம். அதற்குள் எப்படியும் நாலைந்து மாதமாவது இடைகிடைக்கும். அந்த சமயத்திலே நாம் ஒரு சிறு பிரயாணம் செய்துவிடுவோம். நீ வருகிறுயா."

சதா :—இப்பொழுது நீ பேசுவது திருப்திகரமாயிருக்கிறது. அப்படியே செய்வோம். இனி நான் ஒரு கேள்வி கேட்கிறேன். நான் ஏதோ உனக்கு உபகாரமாயிருப்பேன் என்று சொன்னுயே—அதெப்படி?

சிந்தா :—அதுவா! நான் ஸங்கீத ஸ்வரங்களைப்பற்றி வியாசம் எழுதுவதற்குமுன் பல கணக்குக்கள் செய்யவேண்டி யிருக்கிறது. அதிலே வெகு நேரம் செலவழிப்பது எனக்கு உபத்திரவமா யிருக்கிறது. அன்றியும் அப்படிக் கணக்கிட்டுக் கொண்டிருக்கும் பொழுதிலெல்லாம் புதிது புதிதாக உண்மைகள் தோன்றுகின்றன. அவற்றைப்பற்றி நினைக்க ஆரம்பித்துவிட்டால் கணக்குக்கள் பிசகிவிடுகின்றன. நீ உதவிபுரிவதானுல் கணக்கெல்லாம் நீ பார்த்துக்கொள்ளலாம். யூகங்களெள்ளாம் நான் பார்த்துக்கொள்ளலாம். வேலை சீக்கிரமாகவும் நன்றுகவும் முடியும். அவ்வளவுதான்.

சதா :—பேஷ்! அதற்கு நான் உடன்படுகிறேன். ஆனுல் நீ இடும் கணக்குக்களை யெல்லால் செய்ய எனக்குத் திறமையிருக்குமா.

சிந்தா:—அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். நான் வழி காட்டித் தருகிறேன்.

இப்படி இருவரும் பேசிக்கொண்டே யிருந்து இரண்டு மணி நேரம் கழித்தார்கள். பிறகு இருவரும் ஜானகிராமய்யர் வீட்டுக்குப் போய் அவரிருந்த அறைக்கு வெளியே நின்றுர்கள். அப்பொழுது கதவு அடைக்கப்பட்டிருந்தது. ஆனுல் உள்ளே மீனுக்ஷியம்மாளும் ஜானகிராமய்யரும் பேசிக்கொண்டிருந்த குரல் கேட்டது. சிந்தாமணியின் கலியாணத்தைப் பற்றிய பேச்சாயிருந்ததென்று தெரிய வந்தது. பின்வருமாறு மீனுக்ஷியம்மாள் பேசினுள் :—"நம்முடைய பையனைப் போலக் கிடைக்குமோ. ரூபாய் பதினுயிரம் கொடுத்தாலும் கிடைக்காது. வரதக்ஷிணை யில்லாமலா கலியாணம். ஒரு நாளுமில்லை. நாளைக்கு அவன் கலெக்டர் உத்யோகம் பண்ணப் போகிறுன்" என்றுள். இந்த வார்த்தையைச் சிந்தாமணி கேட்டதும் அவன் முகத்தைச் சுளித்துக்கொண்டு கதவைத் தட்டினுன். கதவும் திறக்கப்பெற்றது. இரண்டு வாலிபர்களும் உள்ளே சென்றுர்கள். மீனுக்ஷியம்மாள் "வாடா பயலே உன்னைச் சும்மா கொடுத்துவிடவேண்டுமோம். எம்.ஏ. பரீக்ஷை-முதல் பட்டம்- சும்மா கிடைக்கும் அல்லவா,

உங்க அப்பாவுக்கு வரவர வேதாந்தம் முற்றிப்போய் புத்திக்குக் கூடத் தட்டுக்கெட்டாய் போய்விட்டது" என்று சொன்னுள். அதைக் கேட்ட சிந்தாமணி "இதென்ன பேச்சு அம்மா. உங்களுக்கு எப்பொழுதும் இது தான் நினைப்பு. என் கலியாணத்துக்கென்ன அவசரம் வந்துவிட்டது? இன்னும் என் படிப்பெல்லாம் தீரவில்லை. இன்னும் கொஞ்ச காலம் போகட்டும்" என்ருன். அப்பொழுது மீனுக்ஷியம்மாள் "அதுதான் நானும் சொல்கிறேன். வரன் தேடிவந்த அந்தக் கிருபணசிரோன்மணி முத்துசாமியய்யர் ஸம்ஸாரம் சுந்தராம்பாளிடம் இதே வார்த்தைதான் நான் சொன்னேன். 'ரூபாய் ஆருயிரமிருக்கா? இல்லாவிட்டால் எங்கள் பையனுக்கு அவசரமில்லை, அவசரமில்லை' என்றேன். அவள்தான் 'இந்த நாளிலே சிறு பிள்ளைகள் சிறுவயதிலே அப்படி இப்படி' என்றெல்லாம் கதை வளர்த்தாள். அப்பொழுது நான் "அந்தக் கதையெல்லாம் கட்டி வையுங்கள். நம்ப பயலைப்பற்றி அப்படி இப்படிப் பேசினவன் பல்லைத் தட்டி விடுவோம் என்றேன். ஒருவழியாய் ஒழிந்தாள். ஆனாலும் அவள் போகிற போக்கைப் பார்த்தால் ஐயாயிரத்துக்கு மோசமில்லை. என்னமோ, நாளைக்குப் பார்ப்போம். இவளில்லாவிட்டால் இன்னுமொரு சித்ராங்கி. நமக்கென்ன அவசரம். தானுகவரும். நீ சொல்வதுதான் சரி. நமக்கு அவசரமே யில்லை," என்ருள்.

இந்த உபந்யாசத்தைக் கேட்ட சிந்தாமணி தன் தாயாரிடம் தர்க்கிப்பதிலே பிரயோஜனமில்லை யென்று தெரிந்தவனல்லவா. ஆகையால் பேச்சைமாற்றி "அம்மா எனக்கு ஆருயிரமா விலை பேசினீர்கள். அது போதாது. இன்னும் அதிகப்படும் போலிருக்கிறது. சீமையிலிருந்து இப்பொழுதே பதின்மூன்று பவுனும் சில்லரையும் வந்திருக்கிறது. இன்னும் எவ்வளவு வருமோ தெரியாது" என்று சொல்லி ஜானகிராமய்யருக்கும் மீனுக்ஷியம்மாளுக்கும் நடந்தவற்றையெல்லாம் கூறினன். அவர்கள் அவனைப் பெற்றவர்களல்லவா? அவர்களுக்குண்டான அகமகிழ்ச்சியைப்பற்றிச் சொல்லவோ எழுதவோ முடியுமா? அந்தச் சமயம் பார்த்துச் சிந்தாமணி "அம்மா! இப்பொழுது பார்த்தீர்களா. என் கலியாணத்திற்கு அவசரமில்லை என்ற விஷயத்தை நான் சீமைக்குப் போய்வர எப்படியும் இரண்டு வருஷமாவது ஆகாதா" என்று ஆரம்பித்துக் கடைசியாகச் சுற்றுப் பிரயாணத்துக்கும் சம்மதம் பெற்றுவிட்டான். பஞ்சாங்கம் பார்த்து நாளும் குறிக்கப்பட்டது. செலவுக்கு ஐந்நூறு ரூபாய் வரையில் ஜானகிராமய்யர் கொடுப்பதாய்ச் சொன்னுர். சிந்தாமணி மறுத்துப் பார்த்தான். அவன் வார்த்தை யேறவில்லை. சதாசிவன் தன்னைப் பற்றிக் கூறின மொழிகளும் பயன்படவில்லை.

மறுநாள் காலையில் முத்துசாமி அய்யர் ஜானகிராமய்யரைப் பார்க்க வந்தார். கலியாண விஷயத்தைப்பற்றிப் பேச்சு ஆரம்பித்தது.

முத்துசாமி அய்யர்:—"ஐயாயிரம் தருகிறேன் அதற்கு மேல் கொஞ்சம் கஷ்டம் தான்" என்ருர்.

ஜானகிராமய்யர்:—பணத்தைப் பற்றி எனக்கு அபிப்பிராய பேதமில்லை. பெண் ஜாதகத்திலே லக்கினத்தில் சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருக்கிறது. அதுதான் கொஞ்சம் திருப்தி யில்லாமலிருக்கிறது. பையனும் ஏதேதோ சொல்லுகிருன். அம்மாள் நினைப்பும் ஒரு விதமாயிருக்கிறது. அவ்வளவுதான்.

முத்து:—அடடா. சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருப்பது அபூர்வமல்லவா. சசி மங்கல யோகம் கிடைப்பதே வெகு அபூர்வம். குலஸ்திரீயை விட்டு லஜ்ஜை பிரியாமலிருப்பதுபோல ஜாதகியை விட்டு ஒருபொழுதும் லக்ஷ்மீதேவி பிரியாமலிருப்பாளே, அது ஒரு குற்றமா. வேணுமானுல் 500 ரூபாய்கூடத் தருகிறேன். அடடா. அப்படியா.

ஜானகிராமய்யர்:—"பணத்தைப் பற்றியல்லவே விஷயம். சந்திரன் என்பது மனசு. செவ்வாயோ யுத்தவீரன், கோபக்காரன். ஆகவே இந்த ஜாதகிக்கு இராஜஸகுணம் பிராதானமாகவே யிருக்கும். நம்முடைய பையனே ஸாத்வீகி. ஸாத்வீகமும் இராஜஸமும் சேர்ந்துவிட்டால் பாற் பாயாசத்திலே புளி கரைப்பது போலாகும்." என்றிப்படி ஆரம்பித்து வேதாந்த நூலெல்லாம் மேற்கோளாகக் காண்பித்து முத்துசாமியய்யரை வாய் திறக்கவிடாமற்செய்து வந்த வழியைப்பார்த்து அனுப்பிவிட்டார்.

உள்ளிருந்து இந்தச் சம்பாஷணையை கேட்டுக்கொண்டே யிருந்த மீனுக்ஷியம்மாள் வெளியே வந்து "நல்ல போடு போட்டீர்கள். பாற் பாயாசத்திலே புளி. பேஷ். பேஷ்" என்று சொல்லி உரக்கச் சிரித்தாள்,

நம்நாட்டு நிலையும் அயல் நாட்டுவர்த்தகமும்

(திரு. S. ராமசந்திரன் அவர்கள்)

(1) வியாபாரமும், தேசநிலையும் :—ஒரு தேசத்தின் வருமானம் நிலத்தீர்வையும், மற்ற வரிகளும் சேர்ந்ததாகும். பின்னே கூறிய வரிகளில் தேசிய பொக்கிஷத்தை சுலபமாக நிரப்பக் கூடியது ஏற்றுமதிகள், இறக்குமதிகளின்மீது இடப்பட்ட வரிகளே. எவ்வளவுக்கு தேசிய வியாபாரம் அதிகமாகிறதோ அவ்வளவுக்கு ஏற்றுமதிகளும், இறக்குமதிகளும் அதிகமாகும். ஆதலால் அரசாங்கத்தாருக்கு, அதிக வியாபாரத்தினால் அதிக வரும்படி ஏற்படுகிறது. மேலும் வியாபாரிகளுக்கும் லாபம் உண்டாகும். வியாபாரத்தினால் அநேகருக்குத் தொழில் அகப்படுகிறது. அந்த தேசத்திற்கே யல்லாமல், மற்ற தேசங்களிலுள்ளோர்க்கும் வேலையகப்படுவதாகும். உதாரணமாக சீமை பருத்தி வியாபாரத்தைக் கவனிப்போம். அவ்வியாபாரத்தினால், சீமையிலுள்ள அநேகருக்குப் பருத்தி ஆலைகளில் வேலையகப்படுகிறது. அமெரிக்கா, எகிப்து, இந்தியா, இன்னும் மற்ற நாடுகளிலுள்ள பருத்தி விவசாயிகளுக்குப் பருத்தி அபிவிருத்தி செய்வதில் ஊக்கம் உண்டாகிறது. நம் தேசத்திலுள்ள முதலாளிகளுக்கு அந்தத் தேசத்திலிருந்து துணிகளை வாங்கி விற்பதில் லாபம் தோன்றுகிறது. இவைமட்டு மல்ல. துணி, பருத்தி, போக்குவரவு சாதனத்திற்காகக் கப்பல்கள் செய்யப்படவேண்டும், கப்பல்களோட்ட மாலுமிகள் தேவை; கப்பல்கள் அமைக்க இரும்பு ஸாமான்கள் வேண்டும்; இச்சாமான்கள் செய்ய இரும்பாலைகள் வேண்டும். இவைகளில் எவ்வளவோ தொழிலாளிகள் ஸம்பந்தப்பட்டிருக்கிறார்கள். எக்காரணத்தினாலாவது இப்பருத்தி வியாபாரத்திற்கு விபரீதம் ஏற்பட்டால், இவ்வியாபாரிகளுக்கும், இந்தியா, அமெரிக்கா, எகிப்து முதலிய தேசத்திலுள்ள பருத்தி விவசாயிகளுக்கும் நஷ்டம் உண்டாகும். பஞ்சாலைகளில் வேலை செய்கிறவர்களுக்கு வேலை கிடைக்காது. வியாபாரத்தில் ஸம்பந்தப்பட்ட கப்பல்களெல்லாம் துறைமுகங்களிலேயே துருப்பிடித்து அழியும். மாலுமிகள் ஊதியமின்றி வருந்துவர். துறைமுகங்களிலுள்ள வேலைக்காரர்கள் வேலையிழந்து பரிதபிப்பார்கள். இவ்விதம் ஒரு பொருளின் பொருட்டு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டால் பற்பல ஸாமான்களின் வியாபாரத்தினால் செழித்தோங்கும் நாடானது அவ்வியாபாரத்தை இழந்துவிட்டால் அதனுடைய நஷ்டத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆகையால் ஒரு தேசத்தின் நாணய நிலை (credit) யைப் பற்றி நிர்ணயிக்க வேண்டுமானால், அதன் ஏற்றுமதி, இறக்குமதிகளின் வருமான மிச்ச நிலை (balance of trade) யைக் கொண்டு, ஊகித்துப் பார்த்தால் நன்கு தெரிந்துக்கொள்ளலாம். இறக்குமதியைக் காட்டிலும் ஏற்றுமதி அதிகமாக விருந்தால் (favourable balance of trade) அத்தேசத்தின் நாணய நிலை செவ்வனே யிருக்கிறதென்று அனுமானிக்கக் கூடும். அவ்வாறின்றி ஏற்றுமதியைக் காட்டிலும் இறக்குமதி மிகுமானால் (adverse balance of trade) கூடிய சீக்கிரத்தில் நாணய நெருக்கடி ஏற்பட்டுவிடு மென்று திண்ணமாய்க் கூறலாம். இக்காரணம்பற்றியே, இங்கிலாந்தில் நாணய நெருக்கடி ஏற்பட்டு அதைச் சீர்திருத்துவதற்கு ராஜதந்திரிகளும், அத்தேசத்தோர்கள் எல்லோரும், முன்வந்திருக்கிறார்கள். ஆதலால், ஒருதேசத்திற்கு வியாபாரம் அத்தியாவசியமென்று விளங்குவதால்

நம் தேசத்தின் வியாபாரத்தைப் பற்றி ஊன்றிக் கவனிக்க வேண்டியது நம் கடமையாகும்.

(2) நம் தேச வியாபாரமும், வியாபாரிகளும் :—நம் தேசத்திலிருந்து அயல் நாடுகளுக்குச் செல்லும் பொருள்களையும் அயல் நாடுகளிலிருந்து நம் தேசத்திற்கு வரும் பொருள்களையும் சற்று கவனிப்போம்.

(a) இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள்.

ஸாமான்கள்	கோடி ரூபாய்கள்.	சத விஹிதம்.
பருத்தியும் நூலும் ...	70	23
சணல் ...	80	26
உணவுத்தானியங்கள் ...	40	13
தேயிலை ...	30	9
எண்ணெய் தரும் வித்துக்கள் ...	20	6
தோல் ...	10	2
இதர சாமான்கள் ...	...	...

(b) இந்தியாவின் முக்கிய இறக்குமதிப் பொருள்கள்.

ஸாமான்கள்.	கோடி ரூபாய்கள்.	சத விஹிதம்.
நூலும் துணியும் ...	65	28
சர்க்கரை ...	20	8
இரும்பு, எஃகு ...	17	7
ஆலைப்பொருள்கள் ...	15	6
மண்ணெண்ணெய், பெட்ரோல் etc. ...	10	4
கத்தி முதலிய வெட்டுக் கருவிகள், ரயில்வே etc....	7	3
பட்டு ...	3	2

நம் தேசத்துடன் வியாபாரம் செய்பவர்களையும் சற்று கவனிப்போம்.

தேசங்கள்	ஏற்றுமதி %	இறக்குமதி%	மொத்த வியாபாரம்.
1. யுனைடெட் கிங்டம் ...	21·5	47·8	32·8
2. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் திற்கு உட்பட்ட நாடுகள் ...	17·7	7·1	12·7
3. ஜப்பான் ...	13·3	7·1	10·7
4. ஐக்கிய மாஹாணங்கள் ...	11·1	7·9	9·7
5. ஜெர்மனி ...	6·6	7·3	6·9
6. பிரான்ஸு ...	4·5	1·5	3·2
7. இத்தாலி ...	3·7	2·7	3·3
8. ஹாலண்டு, பெல்ஜியம் ...	2·	2·	2·
9. ஜாவா ...	1·	6·2	3·2

(3) நம் தேச நிலை :—நம் தேசத்தின் இறக்குமதியையும் ஏற்றுமதியையும் சீர்தூக்கிப் பார்த்தால் ஏற்றுமதியே இறக்குமதியைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. ஆகையால் நம் தேசத்தின் நாணய நிலை செவ்வனே இருக்கிறதென்று சொல்லலாம். ஆனால் நம் தேசத்தின் ஏற்றுமதியின் பெருமானத்தை இன்னும் அதிகரிக்கச் செய்வதற்கு மார்க்கங்களுண்டு. நம் தேசத்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் பெரும்பாலும் விளை பொருள்களும், கனிப் பொருள்களுமே. உபயோகத்திற்குத் தயாரிக்கப்படும் பொருட்டு இவைகள் அயல் நாடுகளுக்குச் செல்லுகின்றன. ஏற்றுமதி அட்டவணையைக் கவனித்துப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். இப்படி உழைப்பின்றி அநியாயமாக ஏற்றுமதியாகும் ஸாமான்களில் பருத்தி முதன்மையாக இருக்கிறது. அது நம் தேசத்திலிருந்து சீமைக்

கும், ஜப்பானுக்கும் அனுப்பப்படுகிறது. இவ்விரு தேசங்களிலிருந்து துணியாகவும், நூலாகவும், மீண்டும் இறக்குமதியாகிறது. இதனால் நம் தேசத்து விளைபொருளுக்கே, அவை சரக்காக மாறிவரும்போது அதிக விலை கொடுத்து வாங்குவது மல்லாமல் நம் தேசத்திதுள்ள பல்லாயிரம் ஜனங்களைச் சோற்றுக்கு வழியில்லாமல் திண்டாடவிட்டு, அயல் நாட்டிலுள்ளவர்களுக்கு வேலையும், பெரும் லாபமும் அளிக்கின்றோம். இதை உத்தேசித்தே மஹாத்மா காந்தி அந்நிய நாட்டுத் துணிகளைப் பஹிஷ்கரிக்க வேண்டுமென்று மன்றாடுகிறார். மற்றொரு உதாரணம். கொப்பரை, நிலக்கடலை, ஆமணக்கு, எள், ஆளிவிதை போன்ற எண்ணெய் தரக்கூடிய வித்துக்களை அயல் நாடுகளுக்கு அனுப்பிவிட்டு, ஸோப்புக்களாகவோ, வார்னிஷ் எண்ணெய்களாகவோ, இயந்திரச் சிக்கல்கள் நிவர்த்திக்கும் எண்ணெய்களா (Lubricants) கவோ திரும்ப நம் தேசத்திற்கு வருகிறது. இப்படி அரிய விலையுயர்ந்த இயற்கைப் பொருள்களைச் சொற்ப விலைக்கு அயல்நாடுகளுக்கு அனுப்பி, அங்கு அவ்வியற்கைப் பொருள்களிலிருந்தே தயாரிக்கப்பட்டு, உபயோகத்திற்கு ஸித்தமாகயிருக்கும் பொருள்களை மீளவும் அந்த அயல் தேசங்களிலிருந்தே, அதிக விலை கொடுத்து வாங்குவது எந்நாளில் நிற்குமோ? இதனால் நம் நாட்டில் முதலாளிகளாகவுள்ள சில வியாபாரிகளே ஒரு சிறிது லாபமடைந்து பெருலாபமாகக் கண்டுகளிக்கிறார்களே யன்றி வேறு பயனில்லை.

(4) அந்நிய தேச வியாபாரிகளின்நோக்கம்:— மேல் நாட்டுப் பத்திரிகைகளையும், சில சங்கத்தாரின் வெளியீடுகளையும் கவனித்துப் பார்த்தால் நம் தேசத்தின் விளைப்பொருள்களையும் கனிப்பொருள்களையும் பற்றி அயல் நாட்டார்கள் எவ்வளவு சிரத்தை யெடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பது நன்கு விளங்குகின்றது. இவ்விஷயத்தில் அவர்களின் ஊக்கத்தை ஊன்றிப் பார்த்தால் நாமெல்லோரும் வெட்கித் தலை குனியவேண்டும். அயல் நாடுகளில் ஒவ்வொரு கைத்தொழிலையும் பற்றிக் கவனிக்கவும், அதன் முன்னேற்றத்தையே கருத்தாகக் கொண்டிருக்கவுமுள்ள சங்கங்கள் பல. அநேகமாக ஒவ்வொரு சங்கமும் வாரமொரு முறையோ, மாதமொரு முறையோ கூடி அந்தந்தக் கைத்தொழிலில் ஸம்பந்தப்பட்டவர்கள் செய்த ஆராய்ச்சிகளையும், ஆலோசனைகளையும் தங்கள் அபிவிருத்தியையே உத்தேசித்துள்ள பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள். சிற்சில அரசாங்கத்தின் சாஸனம் (Royal charter) பெற்றது. இங்கிலாந்தில் சங்கங்கள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன, ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்காவில் ஆயிரக்கணக்காக இருக்கின்றனவென்று சொல்லலாம். இவ்விதம் செவ்வனே, தம் அபிவிருத்தியை நாடி உழைத்து முன்னேற்றம் அடைந்து வரும் சங்கங்களில் ஒன்றாகிய ராயல் ஸொஸைடி ஆப் ஆர்ட்ஸ் (Royal Society of Arts) என்பதைப் பற்றியும், அதன் வெளியீடுகளைப் பற்றியும் படிக்க என் ஸ்நேஹிதர் ஒருவரின் அன்பினால் அவகாசம் ஏற்பட்டது. இச் சங்கத்தின் நோக்கம் சீமையின் வியாபாரத்தை முன்னேற்றி வைப்பதேயாம். அது வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை சந்திக்கிறது. அன்றியும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் பத்திரிகையொன்று வெளியிடுகிறது. அநேகமாக மாதமொரு முறை நம்தேசத்தின் விளைபொருள்களைப் பற்றியோ, கனிப்பொருள்களைப்பற்றியோ, நம் தேசத்தோடு வியாபாரத்தை அதிகரிக்கச் செய்யும் முறைகளைப்பற்றியோ, நம் தேசத்தாரின் பழக்கவழக்கங்களை யொட்டிய வியாபாரங்களைப் பற்றியோ ஆலோசனை செய்து வருவதாகவும் தெரியவருகிறது. இச்சங்கத்தின் அங்கத்தினர்களில் சிலர் இந்திய ராஜாங்கத்தில் வெகுவாகத் தம் வாழ்நாட்களைக் கழித்தவர்களாகிறார்கள். அநேக பேரறிஞர்களும் சாஸ்திரஞர்களும், அதன் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இச் சங்கத்தின் கூட்டங்களில் அந்நிய தேசத்து ராஜப்பிரதிநிதிகளும், பெரிய தொழில்களை நடத்திவரும் தனவந்தர்களும் வந்து கலந்து பேசுகிறார்கள். உதாரணமாக 1930-ல் ஜனவரி மீ 10உ நம் தேசத்தில் ராஜப்பிரதியாக இருந்த லார்டு ரீடிங் (Lord Reading) கின் அக்கிராசனத்தின் கீழ், அவர் காலத்தில், நம் நாட்டுப் பொக்கிஷ மந்திரியாக இருந்த ஸர் பேஸில் பிளாக்கெட் (Sir Basil Blackett) "இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தி" ('Economic progress of India') யென்னும் விஷயத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார். (J.R.S.A. No. 4028, Vol. LXXVIII). அதே மாதம் 29உயன்று "அமைதிக் காலத்

திலும் போர்க்காலத்திலும் தேச தேசங்களின் கனிமுதற் பொருள்கள் பரஸ்பரம், அவ்வத் தேசங்களில் சென்று பரவும் விதம்" ("International movements of mineral products in peace and war") என்னும் விஷயத்தைப்பற்றி நம் தேசத்தின் இராஜப் பிரதிநிதியாக விருந்த லார்டு செம்ஸ்போர்டு (Lord Chelmsford) அக்கிராசனத்தின்கீழ் நம்தேசத்தின் (Geological Survey) நிலப் பரிசோதனை இலாகா பிரதம அதிகாரியாக விருந்த ஸர் தாமஸ் ஹாலண்டு (Sir Thomas Holland) நம் தேசத்தின் கனிப் பொருள்களைப்பற்றி வெகுவாய்ப் பேசி யிருக்கிறார். (J. R. S. A. No 4030, Vol. LXXVIII). இதே மாதிரி நம் தேச நிலையை நன்கு அறிந்தவர்கள் அச் சங்கத்தில், அத்தேசத்தின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய முறையைக் காண்பித்துப் பேசுகிறார்கள். அங்கு வந்து அவர்களை உற்றுக் கேட்கும் குபேரர்களென்றே சொல்லக்கூடிய பணக்காரர்கள், சாஸ்திர வறிஞர்களின் உதவியைக் கொண்டு வியாபாரத்தை அபிவிருத்தி செய்யு முறையைத் தேடுகிறார்கள். கிரேட் பிரிட்டனிலுள்ளவர்கள்மட்டும் இந்த நோக்கத்தைக் கொண்டுள்ளவர்களல்ல. லோகத்திலுள்ள கைத்தொழில் முறைகளில் அபிவிருத்தி அடைந்த, ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய மற்ற தேசத்தவரும், நம் தேசத்தின்மீதே தத்தம் மனதைத் திருப்பியிருக்கிறார்கள். எல்லாருடைய நோக்கமும் ஒன்றே. அதாவது அவரவர்களுடைய, ஆலைகளில் தயாராகும் பொருள்களை யெல்லாம் விற்பதற்கு இடம் இந்தியாவே எனக் கொண்டுள்ளார்கள். இந்தியாவில்தான் சாமான்களை விற்கமுடியும். இந்தியா ஒரு பெரிய சந்தை (Market). அச்சந்தையில்தான் நல்லதோ கெட்டதோ விற்கமுடியும். அச்சந்தையில் எவ்வளவுக்கெவ்வளவு விற்கப்படுமோ, அவ்வளவுக்கவ்வளவு லாபம். அச்சந்தையில் விற்பதற்கு மற்றொருவரையும் விடப்படாது என்பதுபோன்ற கொள்கையை உறுதியாக கைக்கொண்டுள்ளவர்கள்.

(5) **நம் கடமை** :—ஆகவே நம் கடமையை நாம் நன்ருகத் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம். அயல் தேசத்தார்கள் தங்கள் தங்கள் வியாபார முன்னேற்றத்தைப்பற்றி ஊக்கமாகக் கவனிக்கும் அவ்வளவைக் காட்டிலும், பன்மடங்கு அதிகமான கவனிப்பை நாம் காட்டவேண்டும். நம் தேசத்தின் கைத்தொழிலின் நிலை சற்றுப் பின்போக்கா இருக்கிறது. முன்போக்காக விருக்கும் சில அயல் தேசங்களைப் போல் நாமும் இருக்கவேண்டும். இந்த நிலையைச் சீக்கிரமாக அடைவதற்குப் பெரிய வசதியொன்று நமக்கு இருக்கிறது. அந்நிய நாட்டார்கள் தம் ஆலைப் பொருள்களை விற்பதற்கு இடங்கள் (Market) தேடவேண்டும். ஆனல், நாம் செய்யும் சாமான்களை நாமே உபயோகப்படுத்திக் கொள்ளலாம். வெளி நாடுகளின் தயவு நமக்கு வேண்டியதில்லை. ஆகையால் நாம் நம்தேசத்தில் தயாரிக்கப் பெற்ற பொருள்களையே உபயோகப் படுத்தவேண்டும். அந்நிய தேசத்திலிருந்து இறக்குமதியாயிருக்கும் ஸாமான்கள் நம் தேசத்திலேயே தயாரிக்கப்பெற்ற ஸாமான்களைக் காட்டிலும், குறைந்த விலைக்கு விற்கப்பட்ட போதிலும், அவைகளை வாங்குவது தவறு. நம் தேசத்தின் வியாபாரத்தையும், கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்யக்கூடிய சட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சட்டசபைகளுக்கு, நம் தேச நிலையைச் செவ்வனே அறிந்தவர்களாகவும், நம் தேசத்தின் முன்னேற்றத்தைக் கண்ணும் கருத்துமாகக் கொண்டவர்களாகவு முள்ளவர்களையே, தேர்ந்தெடுக்கவேண்டும். கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யக்கூடிய நூதன ஆராய்ச்சிகளுக்கு (Research) எவ்வளவு வசதி யளிக்க முடியுமோ அவ்வளவு வசதி யளிக்கவேண்டும்.

மேலே சொல்லியவைகளைப்பற்றி ஊன்றிப் பார்த்து நம்தேசத்தின் முன்னேற்றத்திற்காகவே எல்லோரும் ஒத்து உழைத்து நம் தேசத்தை எல்லாவிதத்திலும், லோகத்திற்கே ஒரு திலகம்போல் விளங்கச் செய்ய வேண்டும். இதற்கு ஈசன் அருள் புரிவாராக.

மிஸ் மோஹன், பி.ஏ., எல்.டி.

திரு. ஸி. வி. நாராயண ஐயர், M.A., L.T.,
Presidency College, Madras.)

சென்னையில் கச்சாலேசுவரர் கோவிலும் அதன்முன் ஒரு தெப்பக்குளமும் அதைச் சுற்றிச் சில தெருவுகளும் இருப்பது சிலர் அறிந்திருக்கலாம். ஆனால் அங்கேயிருக்கும் 21-ம் நம்பர் வீட்டில் சென்ற வருஷம் யார் குடியிருந்தார்களென்று அவர்கள் எல்லாரும் அறிந்திருக்க மாட்டார்கள். இரண்டொரு வருக்கு மாத்திரம் அந்த பாக்கியம் கிடைத்திருந்தது. அவர்களைக் கேட்டால் அந்த வீட்டில் ஆறு குடும்பங்கள் வளர்ந்து வந்தன வென்றும், பின்கட்டிலே ஒரு சமையலறையும் அதனருகில் ஒரு சிறு 'காம்ரா' உள்ளும் வைத்துக்கொண்டு மாதம் ஒன்றுக்கு 6½ ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டு ஒரு கிழவியும் அவளுடைய மகளும் வசித்து வந்தார்கள் என்றும் தெரியவரும். அந்தக் கிழவி பெயர் அம்முப்பாட்டி. அவள் வரலாற்றைப்பற்றி எழுதுவதானால் ஒருபெரிய பாரதமாய் முடியுமென்று பயந்து அதை யெழுதாமலே விட்டுவிட வேண்டியிருக்கிறது. ஆனால் சிற்சில விஷயங்களைப்பற்றி எழுதாமலும் தீராது. அவளுடைய சிறுவயதிலே அவள் திருவனந்தபுரம் சாலைத் தெருவிலே வளர்ந்து பன்னிரண்டு வயதிலே ஒரு பாலக்காட்டுப் பையனுக்கு வாழ்க்கைப்பட்டு அவன் சமையல் செய்து மாதந்தோறும் சம்பாதித்துக் கொண்டுவந்து கொடுத்த பதினைந்துரூபாயால் சுகஜீவனம் நடத்தி நாற்பதாவது வயதிலே கணவனை யிழந்து சிலகாலம் பிழைப்புக் கொன்றும் வழியில்லாமல் வருந்தி இறுதியில் தன்னுடைய ஐந்து வயதுப் பெண் குழந்தையுடன் சென்னைக்கு வந்தாள். அன்று முதல் அப்பளமிட்டு விற்றும் சிராத்தங்களுக்குச் சமையலுக்குச் சென்றும் பொருள்தேடி சென்னையிலேயுள்ள சந்து பொந்துகளிலெல்லாம் கட்டப்பட்டிருக்கும் பற்பல வீடுகளில் ஆறுமாதம், மூன்று மாதம் என்றிப்படிக் குடியிருந்து கடைசியாக கச்சாலேசுவரர் கோவில் தெருவிலே ஸ்திரமாக வசிக்க ஆரம்பித்துப் பத்து வருஷங்களாயிருந்தன. அவள் சென்னைக்கு வந்திருந்தபொழுது அவளுடைய பெண்குழந்தைக்கு இடப்பட்டிருந்த பெயர் சங்கரம். ஆனால் அந்தக் குழந்தை மழலைச் சொல் பேசிக்கொண்டிருந்தபொழுது 'சங்கரம்' என்ற தன் பெயரைச் சொல்லத் தெரியாமல் தப்பிதமாக 'சங்கடம்' என்று சொல்லி வந்தமையால் அவளை அவளுடைய தாய் தந்தையரும் நண்பர்களும் 'சங்கடம்' என்றே அழைத்துவர நேர்ந்தது. கணவனை யிழந்த பின்பு அலமேலு (அதாவது நம்முடைய அம்முப் பாட்டி) தன் அருமைக் குழந்தையைச் சங்கடம் என்று அழைத்து வந்ததனாலேயே தனக்கு உண்மையாகவே சங்கடம் தோன்றி விட்டதென்று தீர்மானித்துக் தன் குழந்தையின் பெயரை மாற்றவேண்டுமென்று நிச்சயித்தாள். அப்பொழுது 'லக்ஷ்மி' 'ஸரஸ்வதி' என்ற பெயர்களெல்லாம் 'எச்சு' 'சச்சு' என்று திரிந்துவிடுமோ என்று பயந்து அவற்றை விலக்கி அப்படித் திரிபுகள் ஏற்றுக் கொள்ள முடியாத 'மோஹனம்பாள்' என்ற பெயரைப் பொறுக்கியெடுத்து, 'மோஹன்' என்று தன் பெண்மணியைக் கூப்பிட ஆரம்பித்தாள். முதலிலே சில நாட்களுக்கு அவள் அப்படி அழைத்தபோது சங்கடம் விடை கூறுதிருக்க அம்முப்பாட்டி கோபம் கொண்டு "சங்கடம்! அடி சனியனே! உன்னைத்தாண்டி கூப்பிடுகிறேன்" என்று சொல்லிப் பல்லை 'நறு' 'நறு' வென்று கடிப்பாள். ஆனால் அது வெகு காலத்துக்கு முன் நடந்த விஷயம். இப்பொழுது மிஸ் மோஹன் தன்னுடைய பழைய பெயரை முற்றிலும் மறந்துவிட்டாள். பெயரால் அவளுக்கும் சங்கடத்துக்கும் இப்பொழுது ஒரு சம்பந்தமும் இல்லை. வேறு விதத்தால் அப்படிச் சம்பந்த மிருந்தால் அதற்கு அவள் என்ன செய்வாள் பாவம்.

சென்னைக்கு வந்த பின்பு மோஹனத்தைப்

பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி அவளுடைய செலவுக்காக எவ்வளவோ பாடுபட்டு அம்முப் பாட்டி அவளை பி.எ., எல்.டி. பரீக்ஷை தேற வைத்தாள். மோஹனம் ஸ்கூல் பைனல் பரீக்ஷையிலே தேறுவதற்காக அம்முப்பாட்டி செலவிட்டிருக்கும் தொகையை அவள் வியாபாரம் செய்து வந்த அப்பளங்களால் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு சுமார் ஐம்பதினுயிரம் என்று சொல்லலாம். மோஹனம் இன்டர் மீடியட்டு, பி.எ., எல்.டி. என்னும் படிப்புக்களிலே அமர்ந்திருந்தபொழுது அம்முப் பாட்டிக்குச் சம்பாத்தியம் போதாமலிருந்தால் கூலி கொடுத்துச் சில பாட்டிமார்களை அமர்த்தி அப்பள விபாபாரத்தை அதிகப் படுத்தினுள். ஆகவே மொத்தக் கணக்காக மோஹனம் படித்த படிப்பின் விலை கூறுவதானுல் 2 லக்ஷம் அப்பளம் என்னலாம். இதை நினைத்துத்தான் அம்முப்பாட்டி அவளுடைய சில நண்பர்களிடம் "மோஹனத்துக்கு எவ்வளவு செலவழித்திருக்கிறேன் தெரியுமா. இரண்டு லக்ஷம்" என்று சொல்லித் தலையை இரண்டு குலுக்குக்கள் குலுக்கி உற்று நோக்குவாள்.

இவ்வளவு செல்வத்துடன் வளர்ந்து வந்த மிஸ். மோஹன், பி.எ., எல்.டி. ஒரு நாள் இலவசமாகக் கிடைத்த ஒரு 'ஹிண்டு' பத்திரிகையின் முதற் பக்கத்தில் காணப்பட்ட பிரசுரங்களையெல்லாம் வெகு ஆவலுடன் வாசித்துக் கொண்டிருந்தாள். அவற்றுள் ஒன்று அவளுக்குக் கொஞ்சம் சந்தோஷத்தைக் கொடுத்தது. திருவனந்தபுரம் சமஸ்தானத்திலுள்ள ஒரு பெண்பிள்ளைப் பள்ளிகூடத்துக்கு உபாத்தியாயர் ஒருவர் வேண்டுமென்றும் அவர் 'பாட்டனி'யிலே பி.எ. பாஸ் செய்திருக்க வேண்டுமென்றும், மாதச் சம்பளம் 45 ரூபாய் என்றும் காணப்பட்டது. எல்.டி. அல்லாதவர்களை ஏற்படுத்தமாட்டார்கள் என்றும் உறுதியாய்க் கூறப்பட்டிருந்தது. இந்தச் செய்தியை மிஸ். மோஹன் பி.எ., எல்.டி., அம்முப்பாட்டியிடம் சொன்னதும் பாட்டிக்குண்டான ஆனந்தம் இவ்வளவ்வளவென்று சொல்லவே முடியாது. உத்தியோகம் தன் மகளுக்கு வந்துவிட்டதாகவே அவள் நினைத்தாள். மோஹனமும் உடனே 'அப்ளிக்கேஷன்' ஒன்று எழுதி அனுப்பிவிட்டாள். பிறகு அவள் அம்முப்பாட்டியைப் பார்த்து, "அம்மா! இந்த வேலை கிடைத்தால் நான் அதை ஏற்றுக்கொள்வதா?" என்றாள்.

அம்முப்பாட்டி :—சந்தேகமா என்ன! நாப்பத்தஞ்சு ரூபாய்! மாஸம் மாஸம் ரொக்கம். மொதல் தேதிக்கு.

மிஸ் மோஹன் :—நான் படித்த படிப்புக்கு நாற்பத்தைந்து ரூபாய் பெரிதா. என்னைப் போன்ற படிப்புள்ளவர்கள் நூறு, நூற்றைம்பது சம்பாதிக்கின்றார்கள். நீ இந்த நாற்பத்தைந்து ரூபாயைக்கண்டு மகிழ்ந்து கொள்கிறாய்.

அம்முப்பாட்டி :—போடி பைத்யமே—ஒரு புருஷனுக்கே நாப்பது ரூபாய் கெடக்கலையாம். பொம்மனாட்டிக்கு நாப்பத்தஞ்சு போராதோ. ஸாமி புண்யத்திலே அது கெடக்கணமே. அதுகெடச்சா புள்ளையாருக்கு நூறு கொழக்கட்டை.

இப்படி இருவரும் சிறிது நேரம் சம்பாஷணை நடத்தி அரைமணி நேரத்துக்கெல்லாம் மிஸ். மோஹன் வெளியே புறப்பட்டாள். அவள் சென்றது அவளுடைய உபாத்தியாயர் 'மிஸ்ஸஸ் டண்ணிங்' என்பவர் வீட்டுக்குத் தான். அந்த அம்மையார் மிஸ் மோஹனை வரவேற்று ஆசனத்திலிருத்திய பின்பு குசலப் பிரசனங்கள் சிலவற்றைக் கேட்டாள். தக்க விடைகளெல்லாம் கொடுத்த பின்பு மிஸ் மோஹன் தான் அன்று அனுப்பியிருந்த அப்ளிக்கேஷனைப்பற்றியும் பேசினுள். அப்பொழுது 'மிஸ்ஸஸ் டண்ணிங்' "ஓஹோ! அப்படியா? பேஷ்! எனக்கு அந்தத் துரையம்மையாரைத் தெரியும். வெகு நல்லவள், ஆனுல் கொஞ்சம் முன்கோபம்" என்றாள். பதினைந்து நிமிஷமானதும் மிஸ்ஸஸ் டண்ணிங் கொடுத்த ஒரு சிபார்சுக் கடிதத்துடன் மிஸ் மோஹன் கச்சாலேசுவரர் கோவில் தெருவுக்குத் திரும்பி வந்தாள். அன்றைக்கே ரெயிலேறிக் திருவனந்தபுரம் சென்று அங்கிருந்தும் பிரயாணம் போய் துரையம்மையாரைக் கண்டு மூன்று தினங்களுக்குள் வேலையும் சம்பாதித்து விட்டாள். அம்முப்பாட்டியும் சென்னை அப்பள வியாபாரத்தை முடித்துப் பழைய துணிகளை ஏழைகட்குத் தானம் கொடுத்துவிட்டுப் புதுமல் பீஸ் வாங்கிக் கிழித்துக்கட்டிக் கொண்டு மிஸ் மோஹன் இருந்த உத்யோகஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தாள். இப்படியே ஒரு வருஷம் சென்றது.

மிஸ்மோஹறனுக்கும் புதுப்புடவைகள், கைக்கு காப்பு, காதிற்கு இமிட்டேஷன் வெள்ளைக் கம்மல் முதலியன சேகரிக்கப்பட்டன.

இது நிற்க. ஆறுமாதத்துக்குமுன் அந்த ஊர் போஸ்ட்டு ஆபீசிலே அஸிஸ்டண்டு போஸ்ட்டு மாஸ்டராக நியமிக்கப்பட்டு ஒருவர் வந்திருந்தார். அவர் நாலைந்து வருஷங்களுக்குமுன் திருச்சினுப்பள்ளியிலே படித்து பி. ஏ. பாஸ் செய்திருந்தவர். ஒரு பெரிய மனிதர் சிபார்சையால் முதலில் குமாஸதாவாக அமர்ந்து .அப்பொழுதுதான் 'ஆக்டிங்' ஆக அந்த ஊருக்கு மாற்றப்பட்டு வந்திருந்தார். அவருக்கு மாதச் சம்பளம் ஐம்பது. வயது இருபத்தாறு அல்லது இருபத்தேழிருக்கும். இன்னும் கலியாணமாக வில்லை. அதற்கு ஏதோ காரணங்கள் கூறுவார்கள். அவையெல்லாம் அவர் பிறந்த ஊராகிய திருச்சினுப்பள்ளியிலேதான் தெரியும். அவர் உத்யோகத்துக்கு வந்திருந்த இடத்தில் அவரைப் பற்றித் தெரிந்து கொண்டவர்கள் ஒருவருமில்லை. அவருடன் அவருடைய தாயாரும் வசித்து வந்தாள். அவளுக்கு ஏறக்குறைய ஐம்பத்தைந்து வயது சென்றிருக்கும்.

ஒருநாள் மிஸ்மோஹறன் தபாலாபீசுக்குப் போக நேர்ந்தது. நாம் முன் கூறிய உத்யோகஸ்தர் சோமசுந்தரய்யரும் அவளைக் காண நேர்ந்தது. அவள் அனுப்பவந்த மணியார்டர் பாரத்தைப் பார்த்ததும் அவள் பி. ஏ. எல். டி. என்பதை அவர் அறிந்து கொண்டார். விலாசத்திலே குறித்திருந்த நகை வியாபாரியின் பெயரையும் அவர் பார்க்க முடிந்தது. அவள் எப்பொதும் "மிஸமோஹறன், பி.ஏ. எல்.டி.." என்றே கையொப்பமிடுவது வழக்கமாயிருந்ததால் அவளுக்கு இன்னும் கலியாணமாகவில்லையென்று அவர் தெரிந்துகொண்டார். இவற்றை யெல்லால் கவனித்த சோமசுந்தரய்யர் அவளைப் பார்த்து ஏனம்மா! நீங்களும் இன்னும் கலியாணம் செய்து கொள்ளவில்லையா!" என்றார். அதைக் கேட்ட மோகனம் சிறிது கோபங் கொண்டாள். ஆயினும் அந்த உத்யோகஸ்தர் முகமும் அவருடைய குரலும் அவளுக்கு ஏதோ ஒரு வகையான இனிமையைக் கொடுத்தது. ஆகவே அவள் அவரைப் பார்த்து "ஆமாம். நான் கலியாணம் செய்து கொள்ளவில்லை. நீங்களும் அப்படித்தானே" என்றாள். உடனே ஏன் இந்த வார்த்தையைக் கேட்டோம் என்று நினைத்தாள்.

சோமசுந்தரய்யர் :—"ஆமாம். அப்படித்தான். இனிமேல்தான் ஆகணும்" என்றார். சிரித்துக்கொண்டே மிஸ் மோஹறன் "என் விஷயத்திலும் அப்படித்தான்" என்று சொல்லி உடனே வெட்கித்து வெளியே புறப்பட்டுவிட்டாள்.

அதுமுதல் மிஸ் மோஹறன் போஸ்ட் ஆபீசுக்குப் போவதற்கு ஏதாவது காரணங்கள் தோன்றிக் கொண்டே யிருந்தன. சோமசுந்தரய்யரிடம் பேசவும் பற்பல காரணங்கள் ஏற்பட்டன. ஆனால் ஒவ்வொரு முறையிலும் அந்த சோமசுந்தரய்யரிடம் சொன்ன பொய்களுக்குக் கணக்கில்லை. தன் தப்பனார் உத்யோகத்தைப்பற்றியும் தாயார் செய்து வந்த வியாபாரத்தைப்பற்றியும் அவள் பேச வெட்கப்பட்டாள். ஆகையினாலேதான் அவ்வளவு பொய்களும் அடுக்கிவிட்டாள். ஒரு சமயத்தில் அவள் "என் தகப்பனார் போலீசு டெப்டி சூப்பரிண்டண்டு உத்தியோகம் பார்த்து வந்தார். ஆனால் என்னுடைய ஐந்தாவது வயதிலே அவர் இறந்து விட்டார். பிற்பாடு நானும் என் தாயாரும் பட்டிணத்துக்குப் போனோம். என் படிப்புக்காகவே எங்களுக்கிருந்த பதினாயிரம் ரூபாயையும் செலவழித்துவிட்டோம். என் தாயாரைப்போல யார் தர்மம் செய்வார்கள். ஒவ்வொரு கோவிலுக்கும் அவள் கொடுத்திருக்கும் பணத்துக்குக் கணக்குண்டா. என்ன பிரயோஜனம். இப்பொழுது நான் உத்யோகத்துக்குப் போய் 45 ரூபாய் சம்பாதித்து அதிலெ காலக்ஷேபம் பண்ணவேண்டி யிருக்கிறது. என் தகப்பனார் இன்னும் பத்து வருஷம் உயிரோடிருந்திருந்தால் என்னை ஒரு ஐ. ஸி. எஸ்ஸுக்குக் கலியாணம் செய்து கொடுத்திருப்பார்" என்றாள். இதைக்கேட்டு வியப்பும் பரிதாபமுங்கொண்ட சோமசுந்தரய்யர் சிறிது யோசனை செய்து "என் கதையும் அப்படித்தான். என் தகப்பனார் டெப்டிக் கலெக்டராயிருந்தார். சம்பளம் ஐந்நூறு வாங்கிக்கொண்டிருந்தார். ஒரே நாளிலே சீதபேதிகண்டு இறந்துபோய் விட்டார். எனக்கு அப்பொழுதுதான் உபநயனமாயிருந்தது. இந்த சொத்தெல்லாம் செலவிட்டு என் தாயார் என்னைப் பி.ஏ. பரீக்ஷை வரையில் படிக்க வைத்தாள். பிற்பாடு இந்த ஐம்பது ரூபாய் சம்பளமே கதி என்றிருக்கிறேன் என்றார்.

இப்படி ஒரு மாதம் பேச்சுக்கள் நடந்தது இருவரும் ஒருவரை யொருவர் கலியாணம் செய்து கொள்வதாக நிச்சயமாய்விட்டது. வைதிகரீதியிலே கலியாணம் செய்துகொள்ள அவர்கள் பிரியப்படவில்லை. ஆகையால் இருவரும் ஒருவாரம் 'லீவ்' பெற்றுக்கொண்டு திருப்பதிக்குப்போய் கலியாணம் முடித்துக் கொண்டு திரும்பிவிட்டார்கள். பிற்பாடுதான் தம்பதிகளுடைய தாயார்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள நேர்ந்தது. அப்பொழுது சோமசுந்தரய்யருடைய தாயார் திடுக்கிட்டு "ஏதடி இது! மன்னி பொண்ணு என் மாட்டுப்பொண். அவப்பா போலீசு என்னு அல்லவோ சோமு சொன்னுன்!" என்ருள். மோகனத்தின் தாயாரும் அப்படியே திடுகிட்டு " ஓ! கோமு புள்ளேயா என் மாப்பிள்ளே! பேஷ்! அவ அப்பா கலெக்டர் என்னு அல்லவோ மோஹனம் சொன்னுள்" என்ருள்.

பின்புதான் தம்பதிகள் விஷயம் தெரிந்து கொண்டார்கள். மோகனத்தின் கதை நமக்குத் தெரியும். சோமசுந்தரய்யருடைய தகப்பனுர் மலேபாத் தீவுகளிலே கோவில் பூஜை செய்து பிழைப்புத் தேடினவர். சோம சுந்தரய்யர் பரீக்ஷை தேறுவதற்கு மூன்று மாதத்துக்குமுன் இறந்தார். மோஹனத்துக்குச் சோமசுந்தரய்யர் நேர் அத்தான் முறை. ஏழைத் தனத்தை மறைக்க எண்ணி அவ்விருவரும் கூறிய மொழிகளெல்லாம் வீணுய்ப் போயின.

மாதர் பக்கம்

ஒத்துழையாமை.

(ஸ்ரீமதி கமலாம்பாள் எழுதியது)

சில நாட்களுக்கு முன்பே ஒத்துழையாமை வெகு மும்மரமாக இருக்கிறது. இப்பொழுது அதெல்லாம் அடங்கிப்போய் எங்கும் அமைதியாகவே இருந்தது. நான் 'பேப்பர்'களே அதிகமாக வாசிப்பது கிடையாது. ஆனுல் என் கணவரோ என் பொருட்டுத் தவருமல் 'சுதேசமித்திரன்' வரவழைக்கிருர். அதனுல், அவர் கோபத்திற்குப் பயந்து 'பேப்பரில்' முக்கியமான சமாசாரங்களேக் கொஞ்சநேரம் படிப்பேன். இப்பொழுது சில நாள்களாக ஒத்துழையாமைக் குழப்பமெல்லாம் அடங்கி தேசத்தில் அமைதியேஇருந்து வருகிறதாகத் தெரிய வருகிறது. அப்படியிருக்க திடீரென்று என் தயார் இப்பொழுது ஒத்துழையாமையைப் பின்பற்றி நடப்பதுதான் ஏன் என்று எனக்கு விளங்கவில்லை.

என் தமையனுர் வசிக்கும் இச்சிற்றூர்க்கு, உடம்பிற்கும், மனதிற்கும் அமைதியை வேண்டி, வைத்தியர்களின் கட்டளேபடி நான் வந்தேன். இங்கே எப்பொழுதும் சப்தம் கிடையாது. என் குழைந்தைகளும் இங்கே என் தமையன் குழைந்தைகளோடும் மற்றும் அண்டை அயல் வீட்டுக் குழந்தைகளோடும் விளேயாடிக் கொண்டு எனக்குத் தொந்திரவு கொடுப்பதில்லே இதை எல்லாம் உத்தேசித்துதான் பிறந்தகம் போனுல், வீட்டுக் கவலேயில்லாமல் அலுப்பாற நிம்மதியாகச் சிலநாள் இருந்து வரலாம் என்று, என் கணவர் என்னே இங்கே அனுப்பி வைத்தார். ஆனுல் நான் வந்தது முதல் எனக்குச் சிறிதாவது அமைதி என்பதேயில்லே. என்னுல் இந்தத் தொந்திரவு பொறுக்க முடியவில்லே. என் தொந்திரவு ஒத்துழையாமையே. ஒத்துழையாமைச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் தாங்கள் அதனுதவியால்தான் தேசத்திற்கு அநேக நன்மைகள் கிடைக்கும்படி செய்துவிட்டதாகப் பெருமை பேசுகிருர்கள். தேசத்திற்கு ஒத்துழையாமையினுல் நலமோ, தீங்கோ, அது ஒன்றும் எனக்குத் தெரியாது. "கிணற்றுத் தவளேக்கு நாட்டுவளப்பமேன்." தேசத்தின் பாடெப்படி

யானாலும் சரி. வீட்டிற்குள் ஒத்துழையாமையைப் பின்பற்றி நடப்பதானால் பெருங் குழப்பமும், வீண் மனஸ்தாபனங்களும், துன்பங்களுமே யன்றி வேறொன்றும் இல்லையென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன்.

இப்பொழுது திடீரென்று என் தாயார் ஒத்துழையாமையைக் கைபிடித்து அதன்படி நடக்கத் தொடங்கிவிட்டாள். எனக்கு நினைவு தெரிந்த நாள்முதல், இதுவரை என் தாயார், தனக்கு ஒரு சிறிதும் சம்பந்தமில்லாத விஷயங்களிலுங் கூடத் தலையிட்டுக் கொண்டு, ஒருவர் வேண்டுதலுமில்லாமலே அவைகளைப்பற்றின தன் அபிப்பிராயங்களையும், புத்திமதிகளையும், சொல்லுவது வழக்கம். இப்பொழுதோ எவ்விஷயத்தைப்பற்றி யார் போய்க் கேட்டாலும் "எனக்குத் தெரியாது," "எனக்கென்ன அதைப்பற்றி" "உங்களிஷ்டப்போல் செய்யலாம்" என்று சொல்லி வருகிறாள். இதைக் கண்டுகொண்டு என் மன்னியும் அப்படியே சொல்லுகிறாள். இவர்கள் இருவருக்கும் நடுவில் வீட்டில் ஒரு வேலையும் நடக்கவில்லை, எல்லாம் குழப்பமாகவே இருக்கிறது.

இந்த மாமி மருமகள் சச்சரவு நாலைந்து நாட்களுக்குமுன் ஆரம்பித்தது. அன்று வெள்ளிக்கிழமை, என் தாயார் வீடு கூட்டியை, வெள்ளிக்கிழமையானதால் வீடெல்லாம் அலம்பிக் கூட்டும்படி சொன்னாள். சற்று நேரம் கழித்து வேலைக்காரி வாளியில் தண்ணீர் கொண்டு கூடம் கழுவி விட வந்தபொழுது என் மன்னி அன்றைக்கு மந்தாரமாய் இருந்ததால், வீடலம்பினால் உலராதென்றும், குழந்தைகளுக்கு ஈரத்தரை சளிபிடிக்கும் என்றும், அலம்பவேண்டாமென்றும் சொன்னாள். அன்று விடியற்காலமே என்தாயாருக்கும். மன்னிக்கும் வீடலம்புவதைப்பற்றி ஒரு சிறிய வாக்குவாதம் நடந்தது. கடைசியில் இருவரும் ஏதோ முணு முணுத்துக் கொண்டு அவரவர் பாட்டிற்கு போய்விட்டார்கள். இம்மாதிரிச் சச்சரவு சாதாரணமே. எந்த வீட்டில்தான் மாமி, மருமகளின் சிறு சச்சரவுகள் இல்லாமலிருக்கும்? அநேகமாக இச்சிறு விவாதங்களில் என் தாயார் சொன்னபடியே கடைசியாக நடக்கும். அன்றைக்கோ, வேலைக்காரி வேலை லாபமென்று வீடு கழுவாமல் போய்விட்டாள். சற்று நேரம் பொறுத்துச் சமையல்காரன் ஸ்நானம் செய்துவிட்டு வந்து வழக்கம்போல் என் தயாரிடம் சமையல் என்னவென்று கேட்டான். உடனே என் தாயார் "எனக்கொன்றும் தெரியாது எல்லாம் எஜமானி அம்மாளைக் கேட்டு அவள் சொன்னபடி செய்" என்று சொல்லிவிட்டாள். அவன் என் மன்னியிடம் போய்க் கேட்டதற்கு அவளும் "தினம் நானா சமையல் சொல்லுகிறேன்? பெரியம்மா சொல்லுகிறபடியே செய்" என்று பதிலளித்துவிட்டாள். ஆகவே கடைசியாக அன்று சாறும் சோறும்தான் கிடைத்தது. அன்று முதல், ஏதாவதொன்று சமைத்துச் சாப்பிடுவதைத் தவிர வீட்டில் ஒரு வேலையும் நடக்கவில்லை. அந்தச் சாதமாவது கிடைப்பது சமையல்காரன் புண்யத்தால்தான். என் தமையன் திண்டுக்கல்லிலிருந்து வரவழைத்த வாழைப்பழங்கள் பார்த்துக் கொடுப்பாரின்றி அழுகிப் போகின்றன. தஞ்சாவூரிலிருந்து வந்த குடை மிளகாய்கள் வற்றல் போடுவாரின்றி பழுத்துப்போகின்றன. நான் ஏதாவது செய்யக்கூடாதோ வென்றாலோ, முதலில் நானும் இவர்களிருவருக்கு மத்தியில் என்னாலியன்றவரை மத்யஸ்தம் செய்து, வீட்டுக் காரியங்களைக் கவனிக்கத்தான் பார்த்தேன். ஆனால், அவர்களிருவரும் என்னை நம்பவில்லை. என் தாயார் நான் மன்னிபக்கமாகத்தான் நினைப்பேனென்று நான் எதுகேட்டாலும் சொன்னாலும் "எனக்கொன்றும் தெரியாது என்னைக் கேட்காதே" என்று ஒரே பிடியாய்ச் சொல்லிவிட்டாள். என் மன்னியோ உங்கம்மாஇஷ்டப்படி. எனக்கென்ன வேணும். என்றுவிட்டாள். இவர்களுக்குமத்தியில் என் பாடு, இரண்டு ஆட்டுக்கடாவிற்கு நடுவிலே அகப்பட்ட நரி மாதிரி ஆயிற்று. இந்தக் குழப்பமும் தொந்திரவும் என்னால் பொறுக்க முடியவில்லை. நான் நாளையே புறப்பட்டு என் கணவரிடம் போகப்போகிறேன். என் தமையனோ, அவன் என்ன செய்வான்? அவன் சாப்பிடும் நேரத்தையும் தூங்கும் பொழுதையும் தவிர, மற்றைப் பொழுதையெல்லாம் கச்சேரியிலோ, தன் ஸிநேதர்களோடோசெலவிடுறான். ஒத்துழையாமை தேசத்திற்கு நலமோ கெடுதலோ, வீட்டிற்கு அதனால் ஏற்படும் துன்பத்திற்கு ஓர் அளவேயில்லை.

சாரண இயக்கம்

(திரு. T. V. அப்பர்சுந்தர முதலியார், M.A., L.T., M. Ed. (Leeds)
District Eductional Officer, South Arcot.)

இந்தியாவில் சாரண இயக்கம் நம் பாடசாலைகளில் நன்ருய் பரவாதது விசனிக்கத்தக்கது, நம் தேசத்தில் சிலர் இந்த இயகத்திஞல் உண்டாகும் அரிய பலன்களை கருதாமல், இதைக் குறைகூறியும் தடுத்து வருகிருர்கள். ஆனல் சில பாடசாலைகளில் மட்டில் சாரணர்கள் இருந்து வருகின்றனர். ஆயினும் இவ்வியக்கத்துக்குப் போதிய ஆதரவு இல்லை. இது ஏதோ படசாலைக்குச் சம்பந்தமில்லாத விஷயம் என்றும், இன்ஸ்பெக்டர்களும் மேலதிகாரிகளும் நடத்தவேண்டும் என்று சொல்வதற்காகவே நடத்தப்படுவதாயும் பலர் நினைக்கின்றனர்.

சாரண இயக்கம் என்ருல் ஓர்வித உடை உடுத்துவதும், கொடிகாட்டுவதும், 'விளையாட்டாக நெருப்பை அணைப்பதும் மட்டில் அல்ல. ஆனல் உண்மையாகவே பொது நலத்துக்காக உழைக்கவேண்டும் என்ற ஆர்வத்தை பிள்ளைகளிடத்தில் உண்டாக்குவதே இவ்வியக்கத்தின் உயர்ந்த நோக்கமாகும்.

சாரணியம் பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதில் அதிக உபயோகமுள்ள சாதனம் என்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது. இவ்வியக்கத்திஞல் நம் பாடசாலைகளில் தோன்றும் சில இயற்கைக்கு மாருன தோற்றங்களும் புஸ்தகப்படிப்பினல் மட்டில் ஏற்படும் குறைகளும் நீங்குகின்றன. ஒரு சாரணச் சிறுவன் தான் ஒத்துவாழும் கூட்டத்தின் ஒரு அங்கத்தினன் என்பதை உணர்கிருன். இவன் பொருப்புள்ளதும், துணிகரமானதும் சில சமயங்களில் அபாயம் நேரக்கூடியதுமான அநேக காரியங்களை செய்ய வேண்டியிருக்கிறது. உலகத்தில் பழகும்படி நேரிடுவதால் உலக நடவடிக்கைகளின் உண்மையை அவன் அறிகிருன். உண்மையானதும், வாழ்நாள்களில் தினமும் நேரக்கூடியதுமான அநேக சம்பவங்களில் தானே நேராக பழக அனுபவம் ஏற்படுகிறது.

இவ்வியக்கம் கல்வி சம்பந்தமான முக்கியமான கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அதாவது "ஒருவன் உலக வாழ்கைக்கு தன்னை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டுமோனல் அவன் உலக வாழ்க்கையில் நேராகப் பழகுவதே தகுந்த பயிற்சியாகும்" சாரணீயத்தை ஆரம்பித்த சர் பாடன் பவல் (Sir Baden Powel) என்பவர் இதன் சாராம்சத்தை பின் வருமாறு சொல்லியிருக்கிருர்:—

"நம் இயக்கத்தின் முக்கிய நோக்கம், பிள்ளைகளின் குணதிசயங்கள் தீவிரமாக தோன்றும் இளவயதிலேயே, அவற்றைப் பற்றி நல்ல வழிகளில் திருப்பி அவர்களை நல்ல குணமுள்ளவர்களாகவும் நல்ல ப்ரஜைகளாகவும் ஆகும்படி செய்வதே." இவ்வியக்கம் பாடசாலைகளில் ஒழுங்கு முறையை சீர்படுத்தவும் பிள்ளைகள் ஒருமித்து ஒரு காரியத்தைச் செய்ய பழக்குவதற்கும் அவர்களுக்கு இயற்கைப் பொருள்களிடத்திலும் கிராம வாழ்க்கையிலும் சந்தோஷமும் ஸ்ரத்தையும் உண்டுபண்ணவும், மிகவும் உபயோகமுள்ளதாய் இருக்கிறது. எல்லோரையும் உயர்த்த வேண்டுமென்பதே இவ்வியக்கத்தின் உயரிய லக்ஷியமாகும். சமூக சீர்திருத்தம் இதஞல் ஏற்படும்.

சாரணர்கள் செய்யவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. நம் நாட்டில் பெரும்பாலான ஆண் பெண்களுக்கு படிப்பே இல்லை. ஆண்களின்றி பெண்களும் கஷ்டப்பட்டு வேலைசெய்யவேண்டி யிருக்கிறது. கஷ்டப்பட்டு வேலைசெய்தபோதிலும் அரைவயிற்றுக் கஞ்சியும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அவர்கள் தாழ்ந்த நிலையிலும், நாகரீகமில்லாமலும் அசுத்தமான இடங்களில் உழன்றுகொண்டும் இருக்கிருர்கள். இவ்விஷயங்களை சீர்திருத்த சாரணர்கள் உழைத்து ஜெயம்பெறலாம். சந்தோஷமற்ற வீடுகளில் சந்தோஷ நிலைத்

திருக்கும்படி அவர்கள் செய்யவேண்டும். இல்லையேல் சாரணர் பயிற்சி பெறுவதில் பயனில்லை.

சாரணர்கள் ஆஸ்பத்ரிகளில் தகுந்த வேலை செய்யக்கூடும். பலநோய்களால் வருந்தும் நோயாளிக்கு சாரணர்கள் இயன்ற உதவிகள் புரியலாம். உதாரணமாக ஒரு நோயாளி தன் நண்பர்களுக்கு எழுதவேண்டுமென்று பிரியப்பட்டும் சக்தியற்றவராய் இருந்தால், சாரணர் இவ்விஷயத்தில் ஒத்தாசை செய்யலாம். இவை சிறுகாரியங்களாய் தோன்றியபோதிலும் இதனால் அநேக நன்மைகள் விளையும். இச்சிறு தொண்டுகள் ஏழைகளின் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காகவே ஏற்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளின் நன்மைகளை அதிகரிக்கச் செய்து அவற்றின் பலனை விருத்திசெய்யும் ஒவ்வொரு பாடசாலையிலும் கஷ்டப்படும் ஜனசமூகத்திற்கு பெரிய ஆறுதலை உண்டாகக்கூடிய சாரணர் கூட்டம் ஒன்று இருக்கவேண்டும்.

மற்றும் அறியாமையையும் படிப்பின்மையையும் விலக்க சாரணர்கள் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொள்ளலாம். நாம் அடிக்கடி அநேகர் அறியாமையை விலக்கவேண்டுமென்று கூட்டங்களில் நன்றாய் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் பேச்சளவில் சும்மாயிருந்து விடுகின்றனர். இதனால் பயனில்லை.

கல்விபயிலுவதில் முக்கிய கொள்கையாவது யார் ஒருவன் தான் பிறருக்கும் கற்பிக்கவில்லையோ அவன் தானே விஷயங்களை தெரிந்துகொள்ள முடியாது. உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்கும்பொழுது தாங்களும் கற்கின்றனர் என்பது உண்மை. இதேபோல், பிள்ளைகளும் தாங்கள் பிறருக்கு கற்பிப்பதால் அநேக விஷயங்களை அறிந்துகொள்வார்கள். அதனால் சாரணப் பிள்ளைகள் வயது முதிர்ந்து படிக்கத்தெரியாதவர்களுக்கு இரவு பாடசாலை நடத்தி போதிக்கலாம்.

சாரணர்கள் தங்கள் விடுமுறை நாட்களில் காலத்தை வீண் போக்காமல், கிராமங்களுக்கு புஸ்தகங்களைக் கொண்டுபோய் வாசிப்பவர்களுக்குக் கொடுத்தும், படிக்கத்தெரியாதவர்களுக்கு படித்துக்காட்டி விஷயங்களை எடுத்துச்சொல்லியும் உதவி செய்துவரலாம்.

நம் நாட்டின் கிராமங்களின் முன்னேற்றம் சாரணர் கையிலேயே இருக்கிறது. அவர்கள் உண்மையாக உழைப்பதால் ஒரு கிராமத்தை சுவர்க்கம்போல் ஆக்கிவிடலாம், படிப்பின்மையையும் அறியாமையையும், அசுத்தத்தையும் வியாதியையும், போக்க அவர்கள் ஈடுபட்டு உழைத்தால் உலகத்தில் சந்தோஷம் அதிகரித்து நிலவுவதற்கு பேருபகாரம் செய்தவர்களாவார்கள்.

ஆகவே ஒவ்வொரு பாடசாலையிலும் சாரணச் சிறுவர் கூட்டம் ஏற்படவேண்டும். உபாத்தியாயர்களும், பிள்ளைகளும் இதன் கொள்கைகளையும், நலன்களையும் உணர்ந்து அவற்றின்படி நடந்து சமூகவாழ்க்கையை முன்னேற்றமடையச் செய்யவேண்டும்.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி

(திரு. R. வாசுதேவசர்மா M.A.,
National College, Trichy)

*ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த மா மணியைத்
தோற்போமோ?*
(பாரதியார் பாடல். சுதந்திரதாகம் 3)

தமிழ்த் தாய் சுமார் ஒரு ஆயிரம் வருடம் ஓய்ந்து உறங்கிக் கிடந்துவிட்டுப் பின்னர் நம் பாரதியார் கவிவாக்கில் புத்துயிருடன் விழித்தெழுந்தாள். அப்படி விழித்தெழுந்தவள் முன்னை நாட்களிற் போல இராம கதையும், பாண்டவர் சரிதையும், நளன் மீட்சியையும் பாடிக் கிளம்பவில்லை. தமிழுலகத்திலேயே, தமிழிலக்கத்திலேயே இதுவரையும் கையாளப்படாததொரு பக்திச் சுவையையும், வீரரசத்தையும், சுதந்தர உணர்ச்சியையும், புதிய புதிய சந்தங்களில் எடுப்புடன் கூடிய மெட்டுக்களில் மாந்தர் மனத்தைப் பரவசமடையச் செய்யும் நடையுடன் அவள் பாட வாரம்பித்தாள். உண்மையில் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் தேசபக்தி, தாய்மொழியபிமானம், தெய்வவுணர்ச்சி வீர மாதிய இவற்றிற்குப் பாரதியாரின் பாடல்கள் சிறந்த இலக்கியங்களாம்.

நம் பாரதியாரவர்கள் நம் தமிழ் நாட்டின் மீது பேரபிமானம் பூண்டிருந்தார்கள் எனபது யாவரும் அறிந்த தொன்றேயாம்.

"பாருக்குள்ளே நல்லநாடு—எங்கள்
பாரத நாடு—" (பாடல் I. 4.)

"பாரத தேசமென்று பெயர் சொல்லுவார் மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப் பகை வெல்லுவார்" (பாடல் I. 8.)

"பாரத நாடு பழம் பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கில்லை யீடே" (பாடல் I. 15)

எனப் பலவிதமாகப் பாரத நாட்டின் மேன்மையைப் பாடி யிருந்தபோதிலும், இவரது பத்தியை முழுவதும் வகித்திருந்தது நம் செந்தமிழ் நாடேயாகும். ஆதலாலன்றோ, இவர் வாக்கில்

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே" (I. 13)

"தமிழ்த் திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா!" (II. 21)

என்று இவர் தேசபக்தி ஊற்றெடுத்துப்பொங்கித் ததும்பி வழிகிறது. இவர் தம் தமிழ் மொழி யன்பும்,

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!" (பாப்பா II. 29)

"வீரத் தமிழ்ச் சொல்லின் சாரத்திலே', (II. 39)

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்" (I. 39.)

"தென்னுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்" (I. 40.)

"தேமதுரத் தமிழோசை யுலகமெல்லாம்
பாவும் வகை செய்தல் வேண்டும்" (I. 39)

என்ற வடிகளால் நன்கு விசிதமாகும். நிற்க,

நாம் இன்று ஸ்ரீமான் பாரதியாரை ஏதோ தமிழ்ப் பத்தியும், தேசாபிமானமும் கலந்து எழுதிவிட்ட பாக்களுக்காக மட்டும், புகழ முன்வர இல்லை. தமிழ் நாட்டுச் சமூகம், அரசியல் இலக்கியம், ஆகிய எல்லாத் துறைகளிலும் ஸ்ரீ பாரதியார் ஒப்பற்ற தலைவராக நாம் கொள்ளும் தகுதி வாய்ந்து விளங்குகின்றார் என்பதை நான் இங்கு விளக்க விரும்புகிறேன். தமிழ் நாடு முன்னேற்ற மடைவதற்குரிய எல்லாத் துறைகளிலும் இவர் தம் அபார மூளையைச் செலுத்திச் சிறிதும் மயங்க விடமில்லாமல் அழுத்தமாகத் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

இவரது தேசமானமும், பாஷாபிமானமும் முன் கண்டோம். சமய விஷயங்களிலே இவர் பெரியதொரு ஆசாரியராக விளங்குகின்றார். இவர் பரம ஆஸ்திக புத்திவாய்ந்தவர். "வல்லமை சேர் கடவுளிலா இடமொன்றில்லை; மஹா சக்தி யில்லாத வஸ்து வில்லை."

(பாரதி 66.) என்று கூறும் திட பக்தி வாய்ந்தவர்:

அல்லவில்லை அல்லவில்லை அல்லவில்லை
அனைத்துமே தெய்வமென்று வல்லலுண்டோ
(பாரதி 66.)

என்றதொரு துணிவினாலே உலகத்தை மறந்தவர், சர்வ மதங்களையும் சம்மதமாகக் கொண்ட சுத்த ஞானி. இவர் பாக்களிலே அக்னி பகவானும், முத்துமாரியும், கண்ண பிரானும், பராசக்தியும், இயேசுவும், அல்லா சமமான பூஜ்யதையை யடைகின்றார்கள். மனிதன் கடமை யன்பு செய்வதேயாகும். மனுஷ்யனும் தெய்வத் தன்மையை யடைந்த வனேயன்றோ?

"கற்றறிந்த ஞானி கடவுளேயே நோவான்"
"காக்கை குருவி யெங்கள் ஜாதி—நீற்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசை யெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"
"ஞால முற்றும் பராசக்தி தோற்றம்."
(II. 136)
"ஆயிரந் தெய்வங்களுண்டென்று தேடி
யலையு மறிவிலி காள்—பல்
லாயிரம் வேதமறி வொன்றே தெய்வ
முண்டா மெனல் கேளீரோ" (I. 104)
"எங்கும்
ஓர் பொருளாவது தெய்வம்.
"தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
திக்கை வணங்குந் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்
யாரும் பணிந்திடுந் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடுந் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வ மொன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்."
(II-23)
"யானெதற்கு மஞ்சிகிலேன்! மானுடரே நீவிர்
என் மதத்தைக் கைக்கொண்மின் பாடுபடல்
[வேண்டா
ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்
வங்கனுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல்
[கண்டீர்!" (I.145.)
"அன்பென்று கொட்டு முரசே! அதில்
யார்க்கும் விடுதலை யுண்டு." (I—25.)
"அன்பு தன்னிற் செழித்திடும் வையம்."
(I—22.)
"ஆவி யினுற்றும் அறிவி னிடையிலும்
அன்பை வளர்த்திடுவோம்." (I—85.)

என்பன ஒரு சில சான்றுகள். இப் பெரியார் இத்தகைய துறையிலே கொட்டியிருக்கும் பேருழைப்பிற்கு இவரது "பகவத் கீதை" "பதஞ்சலி யோக சூத்திரம்" "வேத ரிஷிகளின் கவிதை" முதலியன அத்தாக்ஷிகளாம். ஆனால், இவர் அனுபவத்தாலும், யோக அப்பியாச ஆராய்ச்சிகளாலும் கண்டறிந்த உண்மைகளை இவர் வெளியிட எண்ணி யிருந்த "பாரதி ஏழாயிரம்," என்ற நூல் 66 பாடல்களோடே நின்று விட்டது. நம் தாய் நாட்டார் செய்த தவக்குறைவே யன்றோ?

ஆசார சீர் திருத்தங்களிலேயும், இவர் மிகவும் முதற்றரமான விசால நோக்கங்கள் கொண்டிருந்தார். தமிழ் யுவர்கள் பிற நாட்டுக்குப் பிரயாணஞ் செய்து கல்வியுஞ் செல்வமும் திரட்டி வருதல் அவசியமென்றும், பெண் கல்வி முக்கியமென்றும் காதற் கலியாணங்களே விசேஷித்தவை யெனவும், ஜாதிச் சண்டை யனீதமென்றும், மக்கள் சமூகம் முழுவதும் சகோதரத் தன்மையுடன் விளங்க வேண்டுமென்றும் இவர் எழுதியும், அனுஷ்டானத்திற் பழகியும் காட்டியுள்ளார்.

"மாதர் தம்மை யிழிவு செய்யும் மடமையைக்
[கொளுத்துவோம்.
வைய வாழ்வு தன்னிலெந்த வகையிலும்
[நமக்குளே
தாத ரென்ற நிலைமை மாறி யாண்களோடு
[பெண்களும்
சரி நிகர் சமானமாக வாழ்வ மிந்த நாட்டிலே"
(I—142.)

என்பது இவர் முடிவான கருத்து.
"ஜாதி மதங்களைப் பாரோம்." (I—1.)
என்பது இவர் அனுஷ்டானத்தில் வந்தது.

இவர் தமது உயர்ந்த உன்னத ஒய்யார ஞான ரதத்திலே யிருந்துகொண்டு ஆசார சீர்திருத்தம், தேசபக்தி, தாய்மொழி முதலியவற்றைப் பாடிவிட்டு சும்மா இருந்துவிட இல்லை. தம்மைச் சுற்றித் தேசோத்தாரணம் கருதி நடைபெறும் இயக்கங்கள் யாவற்றினும், இந்திய சரித்திர நிகழ்ச்சிகளிலும், பிற நாட்டுப் பல்வேறு சுதந்தர முயற்சிகளிலும் இவர் பெரிதும் கவனம் செலுத்தி வந்தார். "மாஜினி சபதம்," "புதிய ருஷ்யா," "பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து," "பாரத மாதா

நவரத்ன மாலை" "நாட்டுக் கல்வி," "கரும்புத் தோட்டத்திலே" முதன் முதல் வெளி வந்த சுதேச கீதங்கள் புடை பெயர் பாட்டு முதலி யன இவற்றை விளக்கக் கூடியவை.

" ——" காந்தியை அரசியல் நெறியிலே
தலைவனாகக் கொண்டு புவிமிசைத் தருமமே
ஆசிய லதனிலும் பிற விய லனைத்தினும்
வெற்றி தருமென வேதஞ் சொன்னதை
முற்றும் பேண முற்பட்டு நின்றார்
பாரத மக்கள் இதனாற் படைஞர் தஞ்
செருக் கொழிந் துலகி லறந் திறம்பாத
கற்றோர் தலைபடக் காண்போம்—விரைவில்.

(II—5.)

" மாந்த ரெல்லாஞ் சோர்வை
அச்சத்தை மறந்து விட்டார்
காந்தி சொற் கேட்டார் காண்பார்
விடுதலை கணத்தி னுள்ளே.'

(II—7.)

என்பதும் இவரது காந்திப் புகழ் மாலை. இவரது பெல்ஜிய தேச வாழ்த்தும் சுதந்தரத் தேவியின் துதியும், இலக்கியத் துறையிலும், தேசாபிமான முறையிலும் தலை சிறந்து விளங்குவன.

அதிகம் எழுதுவானேன்? இவர் பாட்டிலே தேசாபிமானம், தெய்வபக்தி, தத்துவ சாஸ்திர நுட்பங்கள், இலக்கியவ கைகள் புராணக் கதைகள்—பாஞ்சாலி சபதம் போன்றவை—சாஸ்திரவாராய்ச்சி, யோகம், வேதம், வேத ரிஷிகளின் கவிதை, ஞான ரதச் சவாரி, சமூக, சமய சீர்திருத்தம், பெண் விடுதலை, வயது வந்த பெண்களின் காதல் விவாகம், அமரத் தன்மை சாதிக்கும் முறைகள், காதல், சர்வமத சமரசம், அன்னை பராசக்தி கோலம், யாவும் ஒவ்வொரு பக்கத்திலே யும், ஒவ்வொரு வரியிலேயும், ஒவ்வொரு சிறு எழுத்திலும் மிளிர்கின்றன. உண்மை யிலே நம் நண்பர் ஒருவர் எழுதியபடி "பாரதியார் கவியுலகம், பிரபஞ்சம் போலவே பலபட விரிந்து, பொலிந்துலவு கவியண் டங்கள் என்ன நிற்கும்." அவற்றின் பல திறப்பட்ட சுவையையும் சோபையையும் அறிய விரும்புவார்க்கு "பாரதியார் நூல் களை" பயின்று மிகப் பயன்பெறியவேண்டுவ தல்லால் உணர்த்தும் மாறு வேறெங்ஙன?

கம்பியில்லாத தந்தியின் விதிகள்

மின்சார அலைகள் உண்டாக்கி அனுப்பும் விதம்.

(திரு. K. G. கிருஷ்ணன், B. Sc. (Hons.)

நாம் முன்பு ஆகாயத்தந்தியில் உபயோகப் படுத்தும் மின்சார அலைகளைப்பற்றி ஆராய்ந்தோம். இப்பொழுது மின்சார அலைகள் எவ்வாறு ஆகாயத்தில் அனுப்பப்படுகின்றன வென்று ஆராய்வோம்.

மேலே காட்டியுள்ள படத்தில் A யென்பது மின்சாரம் உண்டாக்கும் இயந்திரம் ("ஜெனரேட்டர்"). B என்பது இரண்டு a, b உலோகத் தகடுகளை யுடைய "கண்டென்சர்." c என்பது பொருத்தும் சாவி. அவைகளை படத்தில் காட்டியவாறு கம்பிகளால் இணைத்ததால் முதலாவதாக மின்சாரம் A யிலிருந்து B க்கு ஓடி அதின் தகடுகளான a, b களில் போய் நிறைகிறது. பிறகு சாவி c யை அமிழ்த்தினால் a விருந்து c, D வழியாக b க்கு ஓடுகிறது (a க்கும், b க்கும் இடையில் காற்றுதானிருப்பதால் மின்சாரம் நேரே போடமுடியாது). பிறகு சாவியை உயர்த்தி பிறகு தாழ்த்தினால் இப்பொழுது மின்சாரம் b யிலிருந்து a க்கு ஓடுகிறது. இப்படியே சாவி c யை அடிக்கடி அமிழ்த்திக் கொண்டிருந்தால் மின்சார அலைகள் D வழியாக அப்புறமும் இப்புறமாக ஓடிக்கொண்டேயிருக்கும்.



Fig. 1

"கண்டென்ஸர்" Bயின் தகடுகள் a, b களின் அகலத்தைக் காட்டியோ குறைத்தோ மின்சார அலையின் நீளத்தை (wave length) க் கூட்டவோ குறைக்கவோ முடியும். D யென்பது "இண்டக்டன்ஸ்" என்று சொல்லப் பட்டதோர் சுருண்ட கம்பி. சாதாரண வஸ்துக்களைத் தூக்குவதற்குப் பாரம் அதிகம் சேர்த்தால் எவ்வாறோ அவ்வாறே மின்சாரம் ஓடும் மார்க்கத்தில் இச்சுருண்ட கம்பியை அமைத்தால் மின்சாரம் விரைவில் ஓட முடியாமல் போகிறது. இச்சுருண்ட கம்பியின் நீளத்தைக் கூட்டியோ குறைத்தோ மின்சார அலையின் நீளத்தை வேண்டிய அளவுக்குக் கொண்டுவரலாம். ஆகவே 'கண்டென்ஸர்' Bயின் இருதகடுகளின் அகலத்தையும், "இண்டக்டன்ஸ்" D யின் நீளத்தையும் கூட்டி அல்லது குறைத்து மின்சார அலையின் நீளத்தை வேண்டிய அளவுக்குக் கொண்டு வரலாம். இப்படிச்செய்வதற்கு ஆங்கிலத்தில் "ட்யூனிங்" என்பார்.

இரண்டு கம்பிகளை அருகே அமைத்து அவைகளில் ஒன்றில் மின்சாரத்தைச் செலுத்தினால் மற்ற கம்பியிலும் மின்சாரம் தானாகவே உண்டாக்கப்படுகிறது (current induced). இரண்டு கம்பிகளை நேராக வைக்காது ஒன்றைச் சுருளாகப் பண்ணி மற்ற கம்பியை அச்சுருளைக் சுற்றிச்செல்லும் (ஒன்றையொன்று தொடாமல்) மற்றொரு சுருளாக்கி முதல் சுருளில் மின்சாரத்தைச் செலுத்தினால் இரண்டாவது சுருளில் அதிக மின்சாரம் உண்டாக்கப்படுகிறது.

இப்படியாக அமைத்த கம்பிச்சுருள்களே D யும் E யும் (படம் 2) ஆகின்றன. படத்தில் பார்வைக்குத் தனித்தனியாகக் காட்டப்பட்டிருக்கின்றன. E என்ற சுருளின் ஒரு

பாகத்தைப் பூமிக்குள் புதைத்து மறுபாகத்தைத் தந்தி மரத்திலுள்ள நீளக்கம்பிகளில் (F) இணைத்து இருக்கிறது. இப்பொழுது முன் கூறியவாறு D யில் உண்டாகும் மின்சாரம் E என்ற சுருளில் அதிக மின்சாரம் உண்டாக்கவே அது தந்தி மரத்திலிருக்கும் நீண்ட கம்பிகளுக்கு (F) ஓடி அங்கிருந்து ஆகாயத்தில் நாலாபக்கமும் மின்சார அலைகளாகப் பறந்தோடுகிறது.

சாவி C யை எவ்வளவு விரைவாக விட்டு விட்டு அமிழ்த்துகிறோமோ அவ்வளவு விரைவாக அலைகள் புறப்படுகின்றன, ஆனால் அவ்வளவு விரைவுடன் செய்யக்கூடிய சாவி உண்டாக்குவது கூடாமையால் அமைப்பில் சிறிதுமாறுதல் ஏற்படுகிறது. அதற்காக G யென்ற இரண்டு சிறிய உலோகக் குண்டுகளை ஒன்றுக் கொன்று சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது. சாவி C யை அமிழ்த்தினால் மின்சாரக்கதிர் ஒரு குண்டியிலிருந்து மறுகுண்டிற்குத் தாவியோடுகிறது. இப்படித் தாவியோடுவதில் அநேக அலைகள் ஒன்றின்பின் ஒன்றாய் உண்டாகி யோடுகின்றன. சாவி C யை மெதுவாக அமிழ்த்தினால் குறுகிய அலைகள் அனேகம் உண்டாகின்றன. அதிகமாய் அமிழ்த்தினால் நீண்ட அலைகளனேகம் உண்டாகின்றன. இப்படியாக சாவி C யை மெதுவாய் அமிழ்த்தினால் "புள்ளி" (dot) என்றும், அதிகமாய் அமிழ்த்தினால் "கோடு" (dash) என்றும் கொண்டு சங்கதிகளை "புள்ளி" "கோடு" குறிகளால் (MorseCode) அறிவித்துக்கொள்ளுகின்றனர்.



Fig 2

மின்சார அலைகள் ஓடி மற்றொரு இடத்தில் எவ்வாறடைகின்றனவென்று கவனிப்போம். ஓரிடத்திலிருந்து அனுப்பப்படும் மின்சார அலைகள் நாலாபக்கமும் ஓர்வித அளவுடன் (Wave Length) ஓடுகின்றன. இந்த அலைகளைக் கிரகிப்பதற்கு மற்றோரிடத்தில், அலைகள் அனுப்பப்பட்ட இடத்திலெவ்வாறு கருவிகளமைத்திருக்கின்றனவோ, அவ்வாறே அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் அங்கு மின்சாரம் உண்டாக்கும் ஜெனரேட்டருக்குப் பதிலாக காதுகளில்வைத்துக் கேட்கும் 'ஹெட்போன்ஸ்' என்ற கருவிகளிருக்கும். அங்குள்ள தந்தி மரம் ஓடிவரும் மின்சார அலைகளைக் கிரகித்து இப்பொழுது E யில் உண்டான (படம் 2) மின்சாரம் D யில் தன்னைப்போல மின்சார அலைகளையுண்டாக்கவே அந்த அலைகள் 'கண்டென்ஸர்" வழியாக ஓடி (இங்கே G என்ற பாகம் இராது). காதுக்கருவிகளில்போய் சப்தம் உண்டாக்குகிறது. இங்கு கவனிக்கவேண்டியதொன்று. எந்த அளவுடன் மின்சார அலைகள் ஓடி வந்து சேருகின்றனவோ அந்த அளவைக் கிரகிப்பதற்கு, சங்கதி பெறும் இடத்தில் அமைத்துள்ள "இண்டக்டன்ஸ்,"'கண்டென்ஸர்' இவைகளை அளவுபடுத்த வேண்டும். அப்படி வந்து சேரும் அலைகளைப் பெறுவதற்கான அளவுடன் கூடி அமைக்கப் பெறாவிட்டால் அவைகள் தந்தி மரத்தைச் சேராமல் அதைத் தாண்டிப் போய்விடும்.

இவ்வாறு மின்சார அலைகளை உண்டாக்கி ஆகாயத் தந்தியில் உபயோகப்படுத்துவதில் ஒரு பெருங் கஷ்டமிருக்கிறது. உண்டாக்கப்படும் மின்சார அலைகள் ஒரே நேர்முகமாய் ஓடும்போது ஒரு புறமும், மறு புறமும் வெகு தீவிரமாய்ப் பாய்ந்தோடுவதால் அந்த அலைகளை செவிக்கருவிகளின் மூலம் அலைகளின் சரியான தன்மையை அதிகத் தெளிவாய் அறிந்து கொள்ளுவது கஷ்டமாயிருக்கிறது. "இண்டக்டன்ஸ்," "கண்டென்ஸர்" என்ற கருவிகளைக் கொண்டு மின்சார அலைகளின் நீளத்தைக் கூட்டவோ குறைக்கவோ கூடுமே யன்றி மின்சார அலைகளை ஒரே புறமாய் ஓடச் செய்வதியலாததால் அப்படிச் செய்வதற்கு "தெர்மியானிக் வால்வ்" (Thermionic Valve) என்ற கருவியை உபயோகப்படுத்துகின்றனர்.

ஆரம்ப ஆசிரியர் பக்கம்

(திரு. S. ஜெகந்நாதன் அவர்கள்,

Teachers' College, Saidapet.)

மூன்று வயதிற்குமேல் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்ற ஒரு பள்ளிக்கூடமானது மனோரம்மியமாய் இருக்க வேண்டும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் படங்களாலும் விளையாட்டு சாமான்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு அழகிய கட்டடம் மேன்மையானது. கட்டடத்தின் வெளியிலும் பூந்தொட்டிகள் இருக்கவேண்டும். சிறு சிறு கூண்டுகளில் சில பக்ஷிகளையும் வரைத்துவரலாம். ஆனால் வெகு ஜாக்கிறதையாய்பாதுகாக்கப்பட்டு வரவேண்டும். குழந்தைகளை வெகு பக்ஷமாய் வளர்க்கும் தன்மை உடையவும், குழந்தைகளின் கல்வியில் ஆசையுள்ளவருமான ஒரு உபாத்தியாயினி அல்லது உபாத்தியாயர் இன்றியமையாதவர். அவருக்கு உதவியாக வேறொருவரும் வேண்டும். ஒரு வேலைக்காரியும் தேவையாயிருக்கும். அடிக்கடி குழந்தைகளின் தேக சௌக்கியத்தைக் கவனித்து வர ஒரு நல்ல வைத்தியருங்கூட வேண்டியது அவசியமாகும்.

காலை நேரத்தில் சுமார் 7½ மணி முதல் 10 மணி வரையிலும், மாலை 2½ முதல் 5 மணி வரையிலும் பள்ளிக்கூடம் நடத்தலாம். ஆனால் பாக்கி நேரங்களிலும் தாய்மார்களுக்காக அப்பள்ளிக்கூடம் திறக்கப்பட்டு இருத்தல் அவசியமாகும். சாதாரணப் பள்ளிக்கூடத்து கால அட்டவணையைப்போல் பாலர் பள்ளிக்கூடத்து பாட அட்டவணையை ஒரு கண்டிப்பாக அனுசரித்துவர முடியாது. ஆயினும் ஆரம்பத்தில் ஒரு நோக்கத்தை முன் வைக்க வேண்டுமாதலால் பின்வருமாறு ஒரு கால அட்டவணையையும் பாட அட்டவணையையும் எடுத்துக்கொள்ளலாகும். பள்ளிக்குக் குழந்தைகள் தாய் மூலமாகவாவது வேலைக்காரி மூலமாகவாவது வந்ததும் அவர்கள் சுத்தமாக வந்திருக்கிறார்களா என்று கவனிப்பது அவசியமாகும். பல் தேய்த்தல், முகம் கழுவுதல், குளித்தல், நகத்திலும் கண் காது மூக்கு இவைகளிலும் அழுக்கில்லாமல் இருக்கிறதா எனக் கவனித்தல், சுத்தமான உடுப்பு கட்டிக்கொள்ளுதல் முக்கியமானது.

பிறகு குழந்தைகள் மௌனமாய் வரிசையாய் கடவுளை நினைத்து கைகூப்பி நிற்க உபாத்தியாயர் ஏதேனும் ஒரு ஸ்தோத்திரப் பாடலைச் சொல்லி, பிறகு குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுக்கலாம்.

பிறகு தோட்டத்திற்கு அழைத்துச் சென்று குழந்தைகளுக்கு ஒரு லேசான தொட்டி கொடுத்து செடிகளுக்கு தண்ணீர் ஊற்றும்படி சொல்லலாம். சற்றே பெரிய குழந்தைகள் தங்களாலியன்றவரை ஒரு பூமாலை செய்து படங்களுக்கும் அலங்காரம் செய்யலாம். ஒவ்வொரு நாளும் செடி, பூ, காய், பழங்கள் இவைகளின் பெயரைத் தெரிந்துகொள்ளலாம். கூண்டில் தொங்கவிட்டிருக்கும் பக்ஷி ஜாதிகளுக்குத் தேவையான ஆகாரம் கொடுத்து அவைகளையும் பக்ஷமுடன் பார்த்து வருவது ஏற்றதாகும்.

மறுபடி வகுப்பு அறைக்குள் வந்து அங்கு வைக்கப்பட்டிருக்கும் பொருள்களை கையாண்டு புது புது விஷயங்களை அறிந்தும் அவற்றைப்பற்றிப் பேசியும் பொழுது போக்கலாம். பொதுவாகக் கூறுமிடத்து இச்சாமான்கள் புலன்களைப் பழக்கும்படி ஏற்றதாகவிருக்கவேண்டும். நமது நாட்டில் வேண்டிய சாமான்கள் கிடைக்கின்றன. மாண்டிஸாரிப் பள்ளிக்கூடத்து முந்நூறு ரூபாய் சாமான்கள்தான் வேண்டும் என்று வற்புறுத்தவில்லை.

அதற்கடுத்தாற்போல் குழந்தைகள் தங்களிஷ்டப்படி சொப்புகள், பொம்மைகள், கட்டைகள், மணிகள், வைத்து இரண்டு மூன்று பேர் கூடியும் சில வீடுகள், கோபுரங்கள் கட்டிவிளையாடலாம். சிலர் கண்ணும் பூச்சி, கிசுகிசு தாம்பாளம், தட்டாமாலை என்ற பூர்வீக விளையாட்டுகளையும் விளையாடலாம். இந்தவிளையாட்டு சம்பந்தமான பாட்டுகளில் ஏதேனும் தவறு இருந்தால் அவற்றை மாற்றி நல்ல பாட்டுகளாக அமைத்துக் கொள்ளுவது மேலானதாகும். குழந்தைகள் பொம்மைகள் வைத்துக்கொண்டும், சொப்பு

கள் வைத்துக்கொண்டும், விளையாடுவதை நாம் பாராட்டவேண்டும். உலக நாடகத்தை குழந்தைகள் அந்த ஐந்து வயதிற்குள்ளேயே ஆடிவிடுகிறார்கள்.

குழந்தைகள் களைத்துப்போய் படுத்துக் கொள்வதற்கு பாய் அவசியமாகும். தூக்கம் வந்துவிட்டால் அங்கேயே தூங்குவதற்கு பிரத்தியேகமான இடமும் அவசியம் ஆகும். முக்கியமாக ஒருவேளை குழந்தைகளுக்கு சிற்றுண்டி அளிக்க போதுமான திரவியம் வேண்டும். சரீரமும் வளரவேண்டும்; புத்தியும் வளரவேண்டும். இரண்டையும் சேர்த்தே உபாத்தியாயரும் கவனித்துவரவேண்டும். மறுபடியும் வீட்டுக்குச் சென்று இளைப்பாறி பகல் $2\frac{1}{2}$ மணி அல்லது 3 மணிக்கு மறுபடியும் குழந்தைகள் வரலாம்.

மரத்தடியில் நிழலில் உட்கார்ந்து குதிரை சவாரி, ஊஞ்சல், ஏணிஏறி இறங்குதல், சருக்கு மலை ஏறி சருக்குதல், வளையங்கள் எறிந்து பிடித்தல் முதலிய விளையாட்டுகளை விளையாடலாம். சற்றே ஓய்ந்ததும் எல்லோரையும் உட்காரவைத்து வேடிக்கையான ஒரு கதை சொல்லி உற்சாகம் உண்டுபண்ணலாம். பிறகு சற்றே வெளியில் அழைத்துச் சென்று உலாவி வரலாம், மறுபடி பட்டம், கோலி, பம்பரம் முதலிய விளையாட்டுகளில் பழக்கலாம். நொண்டி ஆட்டம், ஓட்டம், குதித்து ஓடுதல், பறந்து செல்லுதல், தாவிச்செல்லுதல், பதுங்கிச் செல்லுதல், பாய்ந்து செல்லுதல் இவைகள் போன்ற ஆட்டங்களிலும் காலங்கழிக்கலாம். மறுபடி பள்ளிக்கு வந்து கத்தரித்தல், ஒட்டுதல் மணலில் விளையாடுதல, சித்திரம் வரைதல், மணிகோர்த்தல், குச்சி குரும்பை வைத்து விளையாடுதல், தோட்டங்களைச் சுற்றிப்பார்த்தல், பக்ஷிகளைக் கவனித்தல், இருந்த சாமான்களை இருந்தவிடத்தில் வைத்தல் என்பனவற்றைக் கவனித்து கடைசியாக ஒரு முறை கடவுளைத் தியானம் செய்து பாட்டுகள் பாடி பள்ளிக்கூடம் கலையலாம்.

முக்கியமாக நற் பழக்கங்களில் குழந்தைகளைப் பழக்கவேண்டுமாதலால் சுத்தம், நிஜம் தைரியம், இரக்கம், ஒற்றுமை, மரியாதை, கீழ்ப்படிதல் போன்ற உயர்ந்த குணங்களில் பழக இப்பள்ளிக்கூடம் முயல வேண்டும். பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினதும் புது புதிதாக விஷயங்களும், உண்மைகளும் அனுபவத்திலிருந்து தெரியவரும். உபகரணங்களும் ஒன்று ஒன்றாகத் தெரியவரும். முக்கியமாக படங்கள், படப் புஸ்தகங்கள்; கட்டை, மணி, பல்லாங்குழி, மணிச்சட்டம், பின்னங்களை விவரிக்கும் கட்டை, மணியால் செய்யப்பட்ட சக்கரங்கள், வர்ணப் பந்துகள், வெட்டி எடுக்கப்பட்ட உருவங்களும் படங்களும் சேர்த்து பள்ளிக்கூடம் ஆரம்பிக்க, பிறகு நாளடைவில் நூதன உபகரணங்கள் நமக்கே புலப்படும்

குழந்தைகளுக் கேற்ற நந்தவனமும் மேலான தர்மம் ஆகும்:—லக்ஷப்பிரபுக்கள் குளங்கள் கட்டி, கோயில்கள் கட்டி தெய்வ ஆராதனையை மேம்படுத்த அரும்பாடு படுகிறார்கள், மற்றும் சிலர் அன்னதான சத்திரங்கள் கட்டுவித்து பசிப்பிணியை போக்குகிறார்கள். அப்பேர்ப்பட்ட பிரபுக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தைகளுக்காவும் ஒரு நந்தவனம் நிர்மாணம் செய்து குழந்தைகளுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணி அதன் மூலமாக கடவுளைத் திருப்தி செய்விப்பது மேன்மை யிடலாகும். தற்சமயம் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் இடங்களை இம்மாதிரி ஒரு நந்தவனமாக ஆக்கலாம் ஆரம்ப ஆசிரியர்கள் ஐந்து வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்காக தமது பள்ளிக்கூடத்தில் ஒரு வகுப்பு ஏற்படுத்தி சற்றே தாமும் பாடுபடுவது ஏற்றதாகும். “குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்” அயலார் குழந்தைகளை அன்புடன் ஆதரிக்க தமது குழந்தைகள் தாமே வளரும் என்பதுபோல் இனிமேல் நமது தாய்நாட்டின் மேலான ஜனங்களாக இருக்கப்போகிற தற்காலத்துக் குழந்தைகளை சரியான வழியில் பழக்கி கல்வி பயிலுவிப்பது எல்லோருடைய கடமையாகும். குழந்தைகளோடு பழகுகிறவன் எப்பொழுதும் குழந்தையாகவே யிருந்து ஆனந்தத்தை அனுபவிப்பான் குழந்தைகளைப் பற்றிப் பெரியோர் எவ்வளவோ பொன்மொழியாகிற பழமொழிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவை எல்லாம் நம்மை ஞாபகமூட்டவேண்டும். இப்பேர்பட்ட பள்ளிக்கூடங்கள் ஆங்காங்கு ஏற்பட்டு குழந்தைகளைப் பாதுகாத்து கல்வி பயிலுவிக்கும் அந்நாள் பொன்னாள் ஆகும். ஆரம்பக் கல்விக்கும் இக்குழந்தைக்கல்வி அஸ்திவாரம் ஆகிறதால் ஆரம்ப ஆசிரியர்களும் இவ்விஷயத்தைக் குறித்து அரும்பாடுபட வேண்டுவது அவசியமாகும் என்று நம்புகிறேன்.

MAHAMAHOPADHYAYA … IYER LIBRARY